# உலக அரங்கில் தமிழ்

பேராசிரியர். மது. ச. விமலானந்தம்




International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# உலக அரங்கில் தமிழ்

'திறனாய்வுத் தென்றல்'
'சேவா ரத்ன'
பேராசிரியர் மது. ச. விமலானந்தம்
கல்லூரி முதல்வர் (ஓய்வு)

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

தவத்திரு தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் - அருள்திரு அமுதன் அடிகள்,
தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி.
வரிசை எண் : 4 நாள்: 19-03-2003

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | ulaka araṅkil tamiḻ |
| Author | : | Prof. Madhu S. Vimalanantham |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113<br>Ph: 22542992 |
| General Editor | : | Dr. K. Bhagavathi<br>Associate Professor, IITS |
| Publication No. | : | 443 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2003 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | x + 93 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty Only) |
| Printed by | : | Paavai Printers<br>142, J.J. Khan Street,<br>Royapettah, Chennai-600 014 |
| Subject | : | Biography |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அணிந்துரை

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற இலக்கை எட்டிய உயரிய நோக்கம் கொண்டவர் தனிநாயகம் அடிகளார். நம் மொழியின் தொன்மையையும், சிறப்பையும், தனித் தன்மையையும் உலக அரங்கில் கொண்டு சென்றவர் அடிகளாராவார். அவர் பெயரால் அமைந்த அறக்கட்டளையின் நான்காம் சொற்பொழிவாக இச்சொற்பொழிவு அமைகின்றது. உலக அரங்கில் தமிழைக் கொண்டு செல்லும் முயற்சியில் பல ஆய்வு நிறுவனங்கள் இன்று முனைப்புடன் செயல்பட்டுவரும் நிலையில், இதற்கு மூலகாரணராக இருந்து, உலக நாடுகளில் எல்லாம் தமிழ் ஒலிக்கும்படி செய்த அடிகளார் அவர்களின் இப்பணியை ஆய்வு செய்து தொகுத்தளிக்கும் நோக்கில் இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு அமைக்கப்பட்டது.

பேராசிரியர் மது. ச. விமலானந்தம் அவர்கள் பெரிதும் முயன்று அடிகளாரின் பன்முகச் சிறப்பை இச்சொற்பொழிவில் அழகுற வெளிப்படுத்தியுள்ளார். பல்லாண்டுக்கால ஆசிரிய அனுபவத்தினாலும், தமிழின்பால் அவர் கொண்டிருக்கும் தணியாத ஆர்வத்தினாலும், தனிநாயகம் அடிகளாரிடத்து அவர் வைத்திருக்கும் பெருமதிப்பினாலும் இச்சொற்பொழிவைப் பேராசிரியர் அவர்கள் மிகச் சிறப்பாக அமைத்துக் கொடுத்திருக்கிறார். உலக நாடுகளில் தமிழைப் பரப்புவதற்குத் தனிநாயகம் அடிகளார் மேற்கொண்ட முயற்சிகளின் நற்களஞ்சியமாகிய இச்சொற்பொழிவை **'உலக அரங்கில் தமிழ்'** எனும் அழகிய நூலாக வெளியிடுவதில் நிறுவனம் பெருமையடைகிறது.

இந்நூல் வெளிவர அனைத்துப் பணிகளையும் மேற்கொண்ட இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் கு. பகவதி அவர்களுக்கு நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு **மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் **செயலாளர் திரு. பு.ஏ. இராமையா,** இ.ஆ.ப. அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திரு. தா. சந்திரசேகரன்,** இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலிற்குச் சிறந்த முறையில் ஒளியச்சுக்கோப்புச் செய்த திருமதி பி. கௌசல்யாவிற்கும், அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : 13-02-2003 **இயக்குநர்**

# குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| மன்றம் | : உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் |
| நிறுவனம் | : உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் |
| அடிகள், நாயகர் | : சேவியர் தனிநாயகம் அடிகள் |
| த.தூ. | : தமிழ்த்தூது |
| ஒ.உ. | : ஒன்றே உலகம் |
| ப. | : பக்கம் |
| பக். | : பக்கங்கள் |
| ப.க. | : பல்கலைக்கழகம் |
| த.க. | : தமிழ் கல்சர் (Tamil Culture) |
| த.ஆ.இ. | : Journal of Tamil Studies |
| ப.ஆ.ம. | : பன்னாட்டுத் தமிழாராய்ச்சி மன்றம் (IATR) |

# ஆசிரியரைப் பற்றி



பெயர் : மது.ச. விமலானந்தம்

புனைபெயர்: மது, மகிழ்நன், விமல், மாசில் மகிழ்நன்.

பிறப்பகம் : தஞ்சை மாவட்டம், மதுக்கூர்.

பிறந்தநாள் : 27.9.1935.

பெற்ற தெய்வங்கள் : ம.து. சச்சிதானந்தம்; அம்மணி அம்மாள்.

கல்வித்தகுதி : தஞ்சை பேதுரு உயர்நிலைப்பள்ளி, திருச்சி வளனார் கல்லூரி, சென்னை பச்சையப்பன் கல்லூரி- தமிழ் முதுகலை.

பணியாற்றியமை : தஞ்சை சரபோஜி, சென்னை அரசினர் கலைக் கல்லூரி, மாநிலக் கல்லூரி, நந்தனம் கலைக்கல்லூரி, இராசிபுரம், கரூர் குடந்தைக் கல்லூரிகள், மதுரை ஆயிர வைசிய கல்லூரி.

நூல்கள் : சிலம்புப் புதையல், பாரதியின் குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு ஆராய்ச்சி, தமிழ் இலக்கிய வரலாறு, இலக்கிய ஜோதி, கட்டுரைக் கனிகள், தாயகம் தந்த நாயகம், ஆனந்த குமார சாமி, சர்.ஏ.டி. பன்னீர் செல்வம், மண வாழ்க்கை, தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் என 40 நூல்கள்.

அறக்கட்டளைகள் : 'ஈட்டியதில் நாட்டுக்குப் பாதி, வீட்டுக்கு மீதி' என்ற கொள்கையில் தமிழகப் பல்கலைகளில்-

- தமிழ்ப் பல்கலை - பேரறிஞர் பவானந்தர் அறக்கட்டளை.
- பாரதிதாசன் பல்கலை - நாவலர், பண்டித நமு. வேங்கடசாமி நாட்டார் அறக்கட்டளை.
- அண்ணாமலை பல்கலை -கா.சு. பிள்ளை அறக்கட்டளை.
- கோவை பாரதியார் பல்கலை- கோவைக்கிழார் சி.எப். இராமச்சந்திரன் செட்டியார் அறக்கட்டளை
- புதுவை மையப் பல்கலை - சங்கரதாஸ் சுவாமிகள் அறக்கட்டளை.

- மதுரைக் காமராசர் பல்கலை - பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனார் அறக்கட்டளை.
- காரைக்குடி அழகப்பா பல்கலை - வி.ஆர்.எம். செட்டியார் அறக்கட்டளை.
- மதுரைத் தமிழ்ச் சங்கம்- அரசஞ்சண்முகனார் அறக்கட்டளை, மு. இராகவையங்கார் அறக்கட்டளை, ரா. ராகவையங்கார் அறக்கட்டளை.
- உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் - குரு தேவர் தெ.பொ.மீ. அறக்கட்டளை.

அறிவுத் தந்தையர் : தமிழ்க் கடல் த.வே. கோபாலையர், திரு. ஐயன் பெருமாள் கோனார், டாக்டர் மு.வ., அ.ச.ஞா, அ.மு.ப., பேரா. க. அன்பழகன், தெ.பொ.மீ., மொ.அ.துரையரங்கனார், பு.ரா. புருசோத்தம நாயுடு, டாக்டர் மு.ஆரோக்கிய சாமி, கே.கே. பிள்ளை, சி.இ. இராமச்சந்திரன்.

மணநாள் : 12.6.1964 காஞ்சன மாலா. விசயானந்தம்.

பெற்ற சிறப்புகள் : திறனாய்வுத் தென்றல், முத்தமிழ் ஏந்தல், பாரதி பணிச் செலவர், சேவாரத்ன.

பாரதி தமிழ்ச் சங்கம் (சென்னை) கேடயம்.

தமிழ் மரபினர் : ஆங்கில ஆட்சிக் காலத்தில் காவல் துறையில் இந்தியர் வசிக்கும் உயர்பதவியாகிய வடசென்னை துணை ஆணையர் ஆக இருந்து, வேப்பேரியில் 'பவானந்தர் கழகம்' நிறுவி, தொல்காப்பியம், யாப்பருங்கல விருத்தி, இறையனார் களவியல், பேரகத்தியத் திரட்டு, நன்னூல் என 147 நூல்கள் பதிப்பித்து, ஆங்கில அரசியார் முன் இங்கிலாந்தில், அரிச்சந்திரன் நாடகம் போட்டு, இராவ் சாகிப், இராவ் பகதூர், திவான் பகதூர் விருதுகள் அளிக்கப் பெற்று, சென்னை நகர செரிபாகவும் இயங்கி I.S.O., O.B.E. சிறப்புகள் பெற்றுப் பிறங்கிய தஞ்சை கரந்தை சரவண பவானந்தம் பிள்ளையின் பெயரர் முறையினர்.

நாவலர், பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் உறவின் முறையார்.

இவ்விரு மரபின் உந்துதலால்தான் இவரும் தமிழ்க் கற்றுத் தமிழ்ப் பணிபுரிய முன்வந்தார்.

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| தனி நாயகர் – ஒரு தமிழ் நாயகர் ... | 1 |
| தமிழ்த் தூது ... | 15 |
| இரு சுடர்கள் ... | 29 |
| நாற்றங்கால் ... | 41 |
| உலகெலாம் தமிழ் முழக்கம் ... | 48 |
| வயல்வெளி ... | 75 |
| ஒரு நோக்கு ... | 81 |
| பின்னிணைப்பு: | |
| தனிநாயகர் வாழ்க்கைக் குறிப்பு- ஒரு பார்வையில் ... | 91 |
| துணை நூல்கள் ... | 93 |

# உள்ளே நுழையுமுன்னே

ஆறு வேறு சமயங்களாலும் அருந்தமிழ் வளர்ந்த அருமையை எண்ணி அகம் மிக மகிழ்ந்தவர் அண்ணல் தனிநாயக அடிகளார். கிறித்தவத்தால் தமிழ் தழைத்தோங்கிய தகவினைத் தம் எழுத்தாலும் பேச்சாலும் உலக உலாவாலும் ஞால மக்களுக்கு உணர்த்த அவர் என்றுமே தவறியதில்லை. தமிழகச் சமயங்கள் (சைவம், வைணவம்), வட நாட்டினின்று வந்தவை (சமணம், பௌத்தம்), வெளிநாட்டினின்றும் போந்தவை (இஸ்லாம், கிறித்தவம்) ஆகிய ஆறும், தங்களுக்குள் முரண்பட்டாலும், தமிழன்னையின் திருமுன் பகை துறந்து, போட்டி போட்டுக் கொண்டு பைந்தமிழைப் பேணின.

எனினும் இலக்கணம் படைப்பது, அறநூல்கள் அளிப்பது, பாவியம் புனைவது என்ற பிற சமயக் கொடைகளைக் காட்டிலும், கன்னித் தமிழை, அனைத்துமே செய்யுள் மரபாக ஒற்றைத்தடத்தில் நெட்டிலிங்கம் போல் நெடிது வளர்ந்திருந்த தமிழை, ஆலமரம்போல் பருத்துப் பெருத்திடச் செய்த பெருமை கிறித்தவத்துக்கு உரியது.

தற்காலத்திற்கேற்பத் தமிழைத் தழைத்துச் செழிக்கச் செய்தது கிறித்தவமே. 1. உரைநடை 2. சிறுகதை 3. நாவல் 4. கட்டுரை 5. திறனாய்வு 6. மொழியியல் 7. மொழிபெயர்ப்பு 8. காப்பியம் 9. சிற்றிலக்கியம் 10. ஒப்பிலக்கியம் 11. அகராதி 12. வரலாறு 13. சமூகவியல் 14. இதழியல் 15. நவீனத்துவம் 16. எதிர்காலவியல் என இருபதுக்கும் மேற்பட்ட துறைகளில் பல்கிப் பெருகிடச் செய்தது கிறித்தவமே. சமயப்பணி புரிந்தனர் என்பதற்காக, அவர்களது தமிழ் மொழி இலக்கியப் பணிகளைக் குறைத்து மதிப்பிடலாகாது; மறைத்திடவும் கூடாது.

1. வீரமாமுனிவர், கால்டுவெல், போப் போன்றோர், வண்டமிழின் வளத்தினை, நலத்தினை வெளியுலகிற்குத் உணர்த்தினர். 2. ஹீராஸ் பாதிரியார், சர் ஜான் மார்ஷல், மார்டிமர் வீலர் போல்வார், சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகமே என நிறுவினர். 3. கடல்கொண்ட தென்னாடு லெமூரியா கண்டமே, மாந்தனின் முதல் பிறப்பகம் எனக் கண்டு காட்டியவர்களும் மேலைக் கிறித்தவர்களே. 4. வீரமாமுனிவர், போப், கிரால், எல்லிஸ் போன்றோர் திருக்குறளைப் பெயர்த்தும், பேசியும், எழுதியும் பரப்பினர். 5. கில்பர்ட் ஸ்லேட்டரின்

'இந்திய நாகரிகத்தில் திராவிடப்பங்கு-பண்பு' எனும் அரியநூல், தமிழ்மொழியும் நாகரிகமும் தென்னகத்தில் மட்டுமல்ல, சிந்துவெளி வரை பரவியிருந்தன என நிலை நாட்டியது. 6. கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' தமிழின் தனிப்பெருமையுடன் திராவிட மொழிகளின் ஒருமையையும் உணர்த்துகிறது. 7. மேலை நூல்கள் பலவற்றை முதலில் தமிழில் பெயர்த்தவர் ஹென்றிக்கோ ஹென்றிகஸ் (1529-1600). இவர்தான், இலங்கையிலோ, மன்னாரிலோ, தமிழகப் புன்னைக் காயலிலோ 1560க்குள் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்க வேண்டும் என ஊற்றுக்கண் திறந்து விட்டவர். பிறகே 1906இல் 'மதுரைத் தமிழ்ச் சங்கம்', ஒரு பல்கலையாகப் பெருகவேண்டும் எனப் பகர்ந்தார் பாரதியார். 1925-26இலே தான், தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கிட வேண்டும் என்ற இயக்கம் எழுந்தது. இதன் மலர்வே தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981இல். 8. சப்பானில் 1590இலும், பிலிப்பைன்சில் 1593இலும், ஸ்பெயினில் 1584இலும், ஆப்பிரிக்காவில் 1624இலும், உருசியாவில் 1563இலும், கான்ஸ்டான்டி நோபிளில் 1727இலும், கிரேக்கத்தில் 1821இலும் அச்சகம் வருமுன், இந்திய மொழிகளில், ஏன், உலக மொழிகளிலேயே முதன்முதல் தமிழிலே தான் நூல்கள் அச்சேற்றிப் பெருமை சேர்த்தனர் இந்தக் கிறித்தவர்கள். இப்படித் துண்டு துண்டாகத் தொண்டு செய்து தொடராது விட்டனர் மேலைக் கிறித்தவர்கள்.

இவர்களையெல்லாம் மிஞ்சுமாறு விஞ்சி நின்று, படிப்படியே பாங்காகத் திட்டமிட்டு, நம் தமிழை உலகமெலாம் பரவும் வகை செய்து, உலக அறிஞர்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஒருபெரும் மாநாடு கூட்டியவர், தொடர்மாநாடுகள் தொடர்ந்தவர், தமிழ்க் கிறித்தவர் தவத்திரு தனிநாயக அடிகளாரே. பெரும் சாதனை புரிந்த வரலாற்று நாயகர், தமிழ் நாயகருக்கு நாமெல்லாம் தலை வணங்க வேண்டும்; தமிழ் வணக்கம் புரிய வேண்டும். இவர் தமிழ் இலக்கிய வானில் தண்ணிலவாகத் தனித்து நிற்கிறார்; நிலவுகிறார்.

இவ்வகையில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி, உலகில், தமிழை ஓங்கு தமிழ் ஆக்கிய நாயகரிடம் நேயம் தோன்றியது; பேரன்பும் பெருமதிப்பும் பெருகியது; நெஞ்சம் உருகியது. அந்த உருக்கத்தின் ஒரு வடிகாலே, இந்த அறக்கட்டளைப் பொழிவு. இந்த அறக்கட்டளையை அமைத்திட்ட என் மனக்கினிய அருட்தந்தை அமுதன் அடிகளார்க்கும், இதனை ஆற்றுமாறு அழைத்த உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் இளவல் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்கட்கும், அறக்கட்டளைப் பொழிவுப் பொறுப்பர் அன்புத் தங்கை முனைவர் குபகவதி அவர்களுக்கும் என் இதய நன்றி. தமிழ்நாயகராம் தனிநாயகர் தனித்திறம் பாடித் தாய்த்தமிழ் வளர்ப்போம். நன்றி.

37/21. இடையர்தெரு
தஞ்சாவூர்-613 001
பேசி: 24 22 25

நினைவன்
மது.ச. விமலானந்தம்
(மாசில் மகிழ்நன்)

# தனி நாயகர் - ஒரு தமிழ் நாயகர்

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட, தமிழ் இலக்கண இலக்கியத்தில் ஆழங்காற்பட்ட ஆறுமுக நாவலர் (1822-1879); இசைத் தமிழை மீட்டெடுத்து அரிய பெரிய 'யாழ் நூல்' தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் (1892-1949); உலக மொழிகளோடு ஒண்டமிழை ஒப்பிட்டுத் தமிழின் தொன்மை நிறுவிய வேர்ச்சொல் வித்தகர் சுவாமி ஞானப்பிரகாசர் (1943) முதலாய ஈழத்து இன்றமிழ் ஏந்தல்கள் தோன்றிய வரிசையில், வாழையடி வாழையென வந்துதித்த தமிழ் நாயகர் நம் தனிநாயகர். ஈழத்தில் நந்தமிழுக்கு இன்னல் வந்துற்ற போதெல்லாம், தமிழர்க்கு இடர் நேர்ந்த போதெல்லாம், எதிர்த்துக் குரல் கொடுத்து உண்மையை எழுதித் தீர்வுக்குரிய தக்க முடிவுகளைத் தந்ததோடு, தாமும் களத்தில் இறங்கி அறப்போர் நிகழ்த்திய அண்ணலாம் தனி நாயகர் ஒரு தமிழ் நாயகர்.

## அ. தனி நாயகர் தனித்தன்மைகள்

1. உலகியல் இன்பத்தைத் துறந்தாலும் ஒண்டமிழ் இன்பினை ஒருபோதும் துறக்காத தண்டமிழ் தவமாமுனிவர் தனிநாயகர், 2. கிறித்தவத்தையும், தமிழையும் இரு கண்களாகக் கொண்டவர். 3. பைந்தமிழ்ப் பற்றாளர்; அருந்தமிழ் ஆய்ந்தவர்; ஆன்ற தமிழில் தோய்ந்தவர், 4. உலகமெலாம் சுற்றிச் சுழன்று வந்து உலக நாடுகளில் எல்லாம் தமிழ் பரப்பிய தமிழ்த் தூதுவர். 5. பிற நாட்டவரெல்லாம், தமிழ்க் கல்வியும் கலையும் தமிழாய்வும் பெற்றிட வித்திட்ட தமிழ் வேந்தர். 6. 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனக் கவியரசர் பாரதி கண்ட கனவினை நனவாக்கித் திசையெங்கணும் தேமதுரத் தமிழின் திறத்தினைப் பரவிடச்செய்த தனிப் பெருமையர். 7. தமிழ்க்கலை, நாகரிகப் பண்பாட்டினையும், தமிழ் மொழி இலக்கிய மேம்பாட்டினையும் உலகத் தமிழ் அறிஞரெலாம்

உணர்ந்து, ஆய்ந்து தெளிந்திட வேண்டும் என்னும் வேணவாக் கொண்டு, எண்டிசையும் ஏகித் தண்டமிழ்த் தனிமாட்சியைப் பரப்பிய பெருமகனாரின் தமிழ்ப் பணி, உலகளாவிய ஒப்பில் உயர் பணியாகும். 8. தமிழை உலக அரங்குகளிலும் பல்கலைக்கழகங்களிலும், உலகப்பெரு மொழியாம் ஆங்கிலத்தில் ஓங்கி ஒலிக்கச் செய்தது மட்டுமன்றி, உலகத் தமிழ் அறிஞரையெல்லாம் ஒன்று திரட்டும், ஒருங்கிணைக்கும் பாலமாக, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தையும் (1964) உருவாக்கினார். இம் மன்றத்தின் திட்டப்படி, உலகத் தமிழ் மாநாடுகள் நடந்திடவும், சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோன்றவும் மூலகாரணராகத் திகழ்ந்தார்.

9. எவரும் எண்ணாத- யாரும் நினைக்கத் துணியாத் துறைகள் பற்றியெல்லாம் சிந்தித்தவர்; செயற்பட்டவர். 10. தமிழ் ஆராய்ச்சிக்கே புதியதொரு திருப்பத்தைத் தந்து, இலக்கிய நயம், இலக்கண ஆராய்ச்சி, சொல்லாய்வு என்றிருந்த தமிழ்ஆராய்ச்சியை, இலக்கியப் பொருளாராய்ச்சியில் மடைதிருப்பியவர்.

11. இந்தியா என்றாலே, வட புலம்தான் என மேனாட்டார் நினைத்து வந்த நிலையினை மாற்றி, விந்தியத்திற்குத் தெற்கேயும் வரலாறு, நாகரிகம், பண்பாடெல்லாம் விளங்குகின்றன எனக் கண்ணைத் திறந்து விட்ட கண்ணியர். 12. மொழி ஆய்வில் இந்திய மொழிக் குடும்பங்கள் பற்றியும் அவற்றின் வரலாறு பற்றியும் மட்டுமே அறிந்து ஆராய்ந்த மேலை நாட்டார்க்குத் திராவிடமொழிக் குடும்பங்கள் பற்றிப் பொதுவாகவும் திராவிட மொழிகள் பற்றிச் சிறப்பாகவும், தமிழ் மொழி பற்றிக் குறிப்பாகவும், கவனத்தைத் திருப்பிய தமிழ்க் காவலர்.

13. தனிநாயகர் வருமுன், மாக்ஸ் முல்லர் போல்வார், வடமொழியின் வாயிலாகவே இந்தியச் செல்வங்களைக் கண்டறிந்தார்கள். வடமொழியை விட்டால் வேறு வழியில்லை என்ற தவறான கருத்தை மாற்றித் தமிழ் எனும் தொன்மை மொழி கற்றால் தான், தென்னகச் செல்வங்களை, இந்தியப் பண்பாட்டினை முழுதும் அறிந்து சிறக்கலாம் என அறிஞர்களை நல்வாற்றுப்படுத்தி நலம்பெறச் செய்தவர்.

14. தமிழ் ஒலிப்புமுறை, மாவட்டம் தோறும், நாடுகளில் எல்லாம் மாறுபடுவது கண்டு மனக்கவலை கொண்டு, வேறுபடுவது கேட்டு வேதனை மிகக் கொண்டு, இப்போக்கு நீடிப்பின் தமிழ் நாளடைவில் நலிந்திடும்-மெலிந்திடும் எனக் கவன்று, மேலைமொழிகட்கு, குறிப்பாக ஆங்கில மொழிக்கு, பி.பி.சியின் ஒலிப்பு, பொதுநிலை விதியாக விளங்குமாப் போலே, தமிழுக்கும் யாதானும் ஒரு பொது நிலை ஒலிப்பு அமைந்திடவேண்டும்; அப்போதுதான், தமிழ்ப் பாதுகாப்புக்குப் பெருநலம் பயக்கும் என அறிவுறுத்தியவர். 15. பண்டைப் பனுவல்களைத் தமிழ்த் தாத்தா உ.வே.சா. அரிதின் முயன்று ஊர் ஊராகத் தேடிக் கண்டு பிடித்தமை போன்றே, 16, 17ஆம் நூற்றாண்டுகளில் சமயப்பணிபுரியத் தமிழகம் போந்த மேலைக் கிறித்தவ அறிஞர்கள் இயற்றிய அகராதி, இலக்கணம் போல்வன மறைந்து கிடந்த நிலையில் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகட்குச் சென்ற போதெல்லாம் நூலகங்களை நாடிச் சென்று, தமிழ்ச் சுவடிகளைத் தேடிடும் முயற்சி மேற்கொண்டு, மறைந்து கிடந்த பலநூல்களை வெளிச்சத்திற்குக் கொணர்ந்தார். உலகெங்கணும் ஒளிந்து கொண்டிருந்த அந்நூல்களை, அரும்பாடுபட்டு அடிகள் தேடித் தந்திலரேல், அவ்வரிய நூல்களைத் தமிழுலகம் இழந்திருக்கும்.

16. மேலும், கீழை நாட்டுக் கலைக்கும் மேலை நாட்டுக் கலைக்கும் இடையே ஒரு பாலமாக அமைந்து, மேற்கத்திய, கிழக்கத்திய கல்வி நிலைகளை ஆய்ந்தறிந்த தலைசிறந்த கல்வியாளராகவும் திகழ்ந்தார் (Educational Thought in Ancient Tamil Literature - முனைவர் பட்ட ஆய்வேடு). தமிழ் மேல் தணியாத அன்பு கொண்ட இத் தனிநாயகர், ஒரு மொழி வெறியர் அல்லர்; அவர் ஒரு தமிழ் மொழி பக்தர். எனினும் பிற மொழிகளை நையாண்டி செய்தவர் அல்லர். 17. தமிழகத்திலும் ஈழத்திலும், பிப்ரவரித் திங்கள் இலக்கியத் திங்களாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கு வித்திட்ட பெருமைக்குரியவர் தனிநாயகரே. தூத்துக்குடியில் குருத்துவப்பணி ஆற்றிக் கொண்டிருந்த காலை, இலக்கியத் திங்களை ஏற்படுத்தினார். 18. காலத்தைக் கடந்து நின்றிடும் முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்டவர். சமயத் துறையிலும் சரி, தமிழாராய்ச்சிக் களத்திலும் சரி, பல புரட்சிகரமான சிந்தனையராக இருந்தார். கடவுள் ஏற்பு-மறுப்புக் கொள்கையர் இரு திறத்தாரிடமும் மதிப்புப் பெற்றிருந்தார். கருத்து வேறுபாடுகட்கு இடம் தந்தார்; ஆயின் அதனை மன வேறுபாடாகக் கொள்ளாதவராகத் திகழ்ந்தார். 19. இந்த வகையில் தமிழ் இலக்கியத்தின் தனித் தன்மைகளே,

தனிநாயகரின் தனித் தன்மைக்கும் காரணிகளாய் அமைந்தன என்றால் அது மிகையாகாது.

## ஆ. தனிநாயகர் பண்பு நலன்

1. தம் சமய வாழ்விலும், தமிழ்ப்பணியிலும், மனித நேயத்தை ஆணிவேராகக் கொண்டிருந்தவர். இவரது வாழ்க்கைத் தத்துவமே, மனித நலக் கோட்பாடு ஆகும். 2. பிறந்த நாட்டால் இலங்கையராக இருந்தாலும், மொழியால், இனத்தால், பண்பாட்டினால், தமிழராகவும், மனிதர் என்ற அளவில், உலகக் குடிமகன் (A citizen of the world - C.R. Boxer) ஆகவும் உயர்ந்தவர்.

> 3. யாதானும் நாடாமால் ஊராமால், என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு (குறள் 397)

என்னும் தமிழ்மறையினையும், எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே (206) பெரிதே உலகம் பேணுநர் பலரே (207), யாதும் ஊரே யாவரும் கேளிர் (192) போன்ற புறநானூற்றுப் பொன்வரிகள் உணர்த்தும், பரந்து விரிந்த உலக மனப் பான்மையையும் தமதாக்கிக் கொண்டு 'ஒன்றே உலகம்' என்று நன்றே நவின்றவர்.

4. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் சாலச் சிறந்த ஞாலமொழியைப் பொன்னே போல் போற்றியதோடு, இப் பரந்த-பாரிய மனப்பாங்கு, யாவருக்கும் வந்தாக வேண்டும் எனத் தாம் செல்லும் நாடுகளிலெல்லாம் கூறிவந்தார்; தம் கையெழுத்து (Autograph) வேண்டியோர்க்கெல்லாம் இவ் அற்புத அழகு வரிகளை அருந்தமிழில் எழுதியே ஒப்பம் இட்டுக் கொடுத்து வந்தார். 5. பொழிவு நிகழ்த்தும் போதெல்லாம் தவறாது, மறவாது, தொடங்கு முன்போ, முடிக்கும் போதோ,

> என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே

எனத் திருமூலர் திருவரிகளைச் சொல்லிப் பொழிவு நிகழ்த்துவதைத் தம் வழக்கமாகக் கொண்டிருந்தார். 6. இயற்கையை மிகவும் சுவாசித்தவர்; சிறப்பாக மலர்களை மிகவும் நேசித்தவர் இவர் (இவரின் Nature in Ancient Tamil Poetry, மலரும் மாலையும், The Tamils said it all with Flowers போன்றன சான்று பகரும்). 7. மனிதனை மனிதனாக மதிக்கும் மாணிக்கமாக, வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பவராக விளங்கினார். 8. அறிவுக் கூர்மையும் அன்பும் பண்பும் மிக்கவர். அடுத்தவர்

உள்ளத்தைப் புண்படுத்தாத அருளாளர். 9. பிறர் நலத்திற்காகத் தம்மையே அர்ப்பணிக்கும் பெற்றியர்; தமக்கென வாழாப் பிறர்க்குரியர். 10. பிறருக்குக் கொடுப்பதில் பெருமகிழ்ச்சி கொள்பவர். இவரின் அறைக்குச் செல்பவர்கள், 'தந்தையே! இந்நூல் நன்றாக இருக்குமா', என இயம்பினாலே போதும், 'அதற்கென்ன, எடுத்துச்செல், படி' என்பாராம். 'நான் பெறுதற்காக வந்தவன் இல்லை; கிறித்துவைப் போன்று கொடுப்பதற்காக வந்தவன்' எனக் கூறுபவர்.

11. காலத்தைப் பொன்போல் கருதி, ஒரு வினாடியையும் வீணாக்காது முழுவதும் பயன்படுத்தும் பெற்றியர். 12. நன்றியுள்ளம் நிரம்பியவர். நன்றி பாராட்டும் நெஞ்சராக இருந்ததுடன், தம் மாணாக்கர்கள் உள்ளத்திலும் நன்றியுணர்வினை விதைத்தவர். 13. எதனையும் குறிப்பால் உணர்ந்திடும் இயல்பர். யாராவது இன்னலில், பிரச்சினையில் இருந்தால், குறிப்பால் உணர்ந்து கொள்வார். எவரேனும் முகவாட்டத்துடன் அணுகின், அதற்குரிய கரணியத்தைக் கண்டறிந்து, தாமே முன்வந்து உதவும் தன்மையராகத் திகழ்ந்தார். 14. தங்கள் கீழ் வேலை பார்ப்போரை நம்பாத நிலையினையே நாம் எங்கும் கண்டுள்ளோம். ஆனால் அடிகளார், தம் கீழ்ப் பணியாற்றுவோரிடம் முழுநம்பிக்கை வைத்திருந்தார்.

15. சிலர் தனிமையில் நம்மை மதிப்பர். ஆனால் கூட்டத்தில் பெரியோர்கள் நடுவே இருக்கும் போது, நம்மைக் கண்டுகொள்ளார். இவரோ எப்படிப்பட்ட பெரியோர்களிடம் உரையாடிக் கொண்டிருப்பினும், சிறியோர் அங்குச்செல்லின், அவர்களையும் மதித்து அழைத்து உரையாடி மகிழும் உண்மையர். 'பெரியோர் என வியத்தலும் இலமே; சிறியோர் என இகழ்தல் அதனினும் இலமே' என வாழ்ந்தவர். 16. எதனைச் செய்தாலும், அதனை ஆண்டவரின் மகிமைக்காகவே ஆற்றுவார். மற்றவர்களையும் அங்ஙனமே ஆற்றுமாறு ஆற்றுப்படுத்துவார்.

17. தம்மீது அன்பினைப் பொழிவதைக் கண்டு உவப்பவர். அவர் அன்பினைத் தமக்குள் மூடி வைத்துக்கொள்ளாது, அவர் தம்பால் கொண்ட அன்பின் திறத்தை வெளியே விளம்பித் தாமும் மகிழ்ந்து அன்பு கொண்டாடுபவர்களையும் மகிழ்ந்திடச் செய்யும் மாண்பர்.

18. கீழை மேலை நாட்டுச் சிந்தனைகளின் மொத்த வடிவமான தனிநாயகர், தமிழின் தூதுவராக, தமிழ்ப்

பண்பாட்டின் தூதுவராக, இலக்கியத் தூதராக இலங்கினார். 19. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை போன்ற அரிய விழுமியங்கள் நிறையப்பெற்ற சால்புடையவராகச் சிறந்தவர்.

20. மனிதாபிமானமும் மனிதத்தன்மையும் மிக்க இவரின் தத்துவம்- 'மனித நலக் கோட்பாடு அல்லது மனிதம்' ஆகும். 21. 'ஒருவன் எனக்காகத் தன் உயிரை இழப்பானேயானால், அதனை மீண்டும் கண்டடைவான்' என்ற இயேசுவின் வாசகப்படி வாழ்ந்த புனிதர்.

22. பன் மொழிகளையும் பல பண்பாடுகளையும் தெரிந்த வராகையால், பிற மொழிகளையும் பண்பாடுகளையும் மதித்துப் போற்றும் பண்பாளராகவும் பிறங்கினார். 23. அடிகளார், டாக்டர் ஜி.யு. போப் போன்று என்றும் தமிழ் மாணாக்கனாய் இருக்கவே விரும்பினார். டாக்டர் ஜி.யு. போப், தம் கல்லறையில், 'நான் ஒரு தமிழ் மாணாக்கன்' என்று பொறிக்கச் சொல்லியிருந்தார்; அத்துணை அடக்கம். அவரைப் போன்றே தனிநாயக அடிகளும் யாழ்ப்பாணத் தமிழ்த் திருநாளில், தம்மைப் பற்றி 'யான் ஒரு சொற்பொழிவாளனோ அன்றி ஓர் எழுத்தாளனோ அல்லன்; ஆர்வமிக்க தமிழ் மாணாக்கனே ஆவன். எனவே தமிழ் அறிவிற் சிறந்த பெரியோர் பலர் கூடிய இப்பேரவையில், உரை நிகழ்த்துவதற்கு அதுவும் சங்க இலக்கியத்தின் சிறப்புகள் பற்றிப் பேச அஞ்சுகிறேன்' என்றவர். அத்துணை அடக்கம்; பணியுமாம் என்றும் பெருமை.

24. நட்பினை ஒரு கலையாகக் கொண்டவர்; நாடுபல தாண்டிய, மொழி பல கடந்த உலகளாவிய நட்பினர். இவரது நட்பு வட்டம் நனி பெரியது; விரிந்து பரந்தது. நண்பர்களை நன்கு மதிப்பவர்; உரிமையோடு உண்மையாகப் பழகுபவர். நண்பர்களைச் செல்லமாகச் 'சுப்பு' (வ.அய். சுப்பிரமணியம்), வின்ஸ் (வின்சென்ட் குலோனின்) எனப் பெயர் சுருக்கி உள்ளார்ந்த உயிர் அன்புடன் அழைப்பார்; உற்றுழி உதவுவார்.

25. தமிழர்களின் தலையாய பண்பு, விருந்து புரத்தல். அடிக்கடி விருந்துக்கு அழைத்து, வயிற்றுக்கு உணவோடு, அறிவு விருந்தும் படைத்து அனுப்பும் விருப்பினர். 26. நகைச்சுவையுணர்வு மிக்கவர். உரையாடும் போதும் அளவளாவும் போதும் அறிவார்ந்த நகைச்சுவை நறுக்குகளை அள்ளிவிடுவார். யாழ் நகர் வீரசிங்கம் மண்டபத்தில் விட்ட

காலணிகளில் ஒன்று காணாது போயிற்று; தங்கியிருந்த பண்டத்திரிப்பு தியான இல்லத்திற்குத் திரும்பியதும், 'கன்னியர்களே! என் கால் ஒன்று காணாமல் போய்விட்டது' எனக் காலணி அணியாக் காலைக் காட்டிச் சிரித்தாராம்! தூத்துக்குடி மறை மாவட்டப் பொருளர் தாம் எழுதிய மடலினை முடிக்கும்போது, 'கிறிஸ்துவில் உங்கள் அடிமை' என முடித்திருந்தார். அதற்குப் பதில் எழுதிய போது இவர், 'கிறிஸ்துவில் என் அடிமைக்கு' எனத் தன் மடலினைத் தொடங்கியிருந்தாராம்!

27. உலகப்புகழ்பெற்ற உயர்ந்தவராயினும், அனைவருடனும் எளிதே இனிதே பழக வல்லவர். மாணவர்கள்தானே என அலட்சியம் செய்யாது மதித்துப் பழகும் மாண்பினர். புதியவர்களிடமும் பன்னாட் பழகிய பான்மையுடன் பழகும் பெற்றியர். எவரையும் தேடிப்போய் நாடிப் பழகும் எளிவந்த பண்பர். 28. இவர் சினந்து பேசி எவரும் கண்டிரார்; கோபப்பட்டும் பார்த்ததில்லை. தமிழ் ஞாயிறு தேவநேயப்பாவாணர், உலகத்தமிழ் மாநாடுகளை மிகவும் சாடித் தமிழைக் கெடுக்கும் கருத்தரங்கு என்றும், துறவிக்குரிய மதிப்பும் தாராது, 'திருத் தனிநாயகம்' என விளித்தும் வரைந்திருந்தார் தம் 'தமிழ் வரலாறு' நூலில். ஆனால், அடிகளார், பாவாணர் பற்றி எங்கும் எவரிடத்தும் மதிப்புக் குறைவாக மொழிந்ததில்லை. 'உண்மை ஒருநாள் வெளியாகும்' என்று மட்டும் உரைத்தார். 29. பலர், இவரை வெறுத்திருக்கலாம். கேலி கிண்டல் செய்திருக்கலாம். ஆனால் இவர், யாரையும் எவரையும் வெறுத்தார் இல்லை. வெறுத்தாரையும் விரும்பினார்; தீயோருக்கும் நன்மையே புரிந்தார்; பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சராகத் திகழ்ந்தார். 'இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்திடவேண்டும்', 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு' என்றவர்.

30. தீமையை எதிர்த்திடக் கூடாது; எதிர்த்தால், அது வலுப்பெறும்; அதனை நன்மையால் வென்றிடவேண்டும். இதுவே தனிநாயகர், தம் தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்க்கையிலும், பல்கலைக்கழகப் பணிவாழ்விலும் கடைப் பிடித்த தாரக மந்திரம். Resist not the Evil- Bible.

## இ. தனிநாயகரின் தனி மாண்புகள்

1. தமிழ் மொழியின் தனிமாண்பையும், தமிழினத்தின் தகுபண்பினையும் உலகமெலாம் அறியச் செய்த அருமையும், பரவும்வகை செய்த பெருமையும் திருத்தந்தை தனிநாயக அடிகளாரையே சாரும். தமிழ்நாடு என்ற எல்லைக்குள் இருந்த தமிழ்க்கலை, நாகரிகம், பண்பாடு போன்றவற்றை, உலக நாடுகளிலெல்லாம் பரவச் செய்த பாங்கும், உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரில், உலகின் பல்வேறு நாடுகளில் மாநாடுகள் கூட்டி, உலகளாவி வாழும் தமிழ்இனத்தை ஒன்று கூட்டிய ஒண்மையும் அடிகளார்க்கே உரியதாகும்.

2. அருந்தமிழ் பற்றிய ஆய்வுகள், நந்தமிழில் மட்டுமே நிகழ்த்துவது தொடருமாயின், மேன்மைத் தமிழ் பற்றி மேனாட்டார் அறிந்திடுதல் அறவே இயலாது போகும்; எனவே தமிழியல் பற்றிய தகு ஆய்வுகள், உலகச் சாளரமாகிய ஆங்கிலம், பிற மொழிகளில் வெளியிடப்படல் வேண்டும் என வற்புறுத்திய வலவர். சொல்லியதோடு அமையாது அதற்கென, Tamil Culture, Journal of Tamizh Studies ஏடுகளையும் தொடங்கி வாயில் வகுத்து வழிகாட்டியவர். 3. பழைமையில் ஊறியிருந்த தமிழ் அறிஞர்களை, அறிவியல்முறையிலும், பகுப்பாய்வு வகையிலும் சிந்தித்திடவும், ஆராய்ச்சி புரிந்திடவும் தூண்டிச் செயற்படவும் வைத்துச் சாதனை புரிந்தவர்.

4. கத்தோலிக்கத் தமிழ் எழுத்தாளர்கள் எங்கிருப்பினும், அவர்களையெல்லாம் அழைத்து ஊக்குவித்து, அவர்களிடத்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். தூத்துக்குடியில் ‘கத்தோலிக்க தமிழ் எழுத்தாளர் மாநாட்டினைத்’ கூட்டித் தொடங்கி வைத்தார். இந்த முதல் மாநாட்டில் ஈழப் பண்டிதர் ஆசி நாதன் கலந்துகொண்டார். அடுத்த ஆண்டு கோவையில் கூட்டினார். இந்த இரண்டு மாநாட்டிலும் F.X.C. நடராசா கலந்து கொண்டார்.

5. பன்னாட்டுப் பயணம், இவருடைய ஆளுமையை வளர்த்து உருவாக்கியது என்றால் மிகையாகாது. இவரைப் பயண இலக்கியத்தின் முன்னோடி; சுற்றுலாக் கலையினைச் செழிக்கச் செய்த செம்மல் எனலாம். இன்று பயண இலக்கியம் பல்கியுளது. ஆனால், இதயம் பேசுகிறது மணியன் போன்றோர்க்கு முன், கால் நூற்றாண்டுகட்கு முன்னமேயே உலகின் பன்னாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு, தம் பயண அனுபவங்களை ‘ஒன்றே

உலகம்' என்னும் பனுவலாக வடித்துக் கொடுத்துத் தமிழ் உலகில் பயண இலக்கியத்திற்கு வித்திட்ட வித்தகர் நம் தனிநாயகர் அவர்கள்.

ஐரோப்பாவில் 5 ஆண்டுகளும், இங்கிலாந்தில் 2 ஆண்டுகளும், வட தென் அமெரிக்காவில் 2 ஆண்டுகளும், இந்தியாவில் 10 ஆண்டுகளும் பயணித்துள்ளார். தென்கிழக்கு ஆசியாவிலும், யப்பானிலும், மத்திய கிழக்கிலும், வட மத்திய ஆப்பிரிகாவிலும் மிகுதியாகப் பயணம் மேற்கொண்டவர். உருசியா தொடக்கம் உலகின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள பல்கலைக்கழகங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் பரவலாகப் பயின்றவர்.

6. மாதா பக்தர். இறைவனின் தாய் மரியாள் மீது தனிப்பட்ட அன்பும் பக்தியும் பூண்டிருந்தார். தனிநாயகர் வாழ்வில் மேரியன்னை ஒரு தனி நாயகியாகவே திகழ்ந்திட்டாள். பாரதிக்குப் பராசக்தி எப்படியோ, அப்படியே தனிநாயகருக்கு மேரி மாதா. வடக்கன் குளத்தில் பரலோகமாதா கோவிலிலும் முத்துத் திருநகரில் பனிமய மாதா கோவிலிலும் பணிவிடைகள் புரிந்து மகிழ்ந்தவர்.

7. அருணகிரிநாதர் கூறுமாப்போலே, தனிநாயகர் 'மதியால் வித்தகர், மனத்தால் உத்தமர்'. 8. கிறித்துவின் தியாகமும் கன்னித்தமிழின் மணமும் கமழ்ந்திடச் செய்யத் தம் காலம், திறமை, முயற்சிகளைச் சமுதாயத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டவர்; மனுக்குலத்திற்கும் திருமறைக்கும் தமிழுக்கும் அரும் பணியாற்றிடத் தம் வாழ்க்கையைத் துறந்து தியாக பீடத்தில், தம் தமிழ், ஆன்மீக வாழ்வினைக் கட்டி எழுப்பியவர். 9. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் கணியன் பூங்குன்றனார் கொள்கையில் ஊறித் திளைத்தவர்; அதுவே ஆனவர். 10. ஆன்றோரும், சான்றோரும், சமுதாயத்தின் ஆணிவேர் போன்றவர்கள்; அன்பின் ஆற்றலை உருவாக்கித் தங்கள் தியாக வாழ்வினால் மன்பதையை மகிழ்வூட்டும் மாந்தருள் மாணிக்கங்கள். இத்தகு தூயவர்களை நாம் அடிக்கடி நினைப்பதால், உலக மக்களிடையே நட்பும் அமைதியும் நல்லுறவும் நல்வாழ்க்கையும் உருவாகின்றன. இத்தகைய தூயவர் நம் தனிநாயகர்.

## ஈ. அறிஞர் போற்றும் அறிஞர்

I am always fascinated by the name Thani Nayagam.

-மூதறிஞர் இராஜாஜி.

He could walk with kings and not lose the common touch என்ற கவிஞர் இப்ளிங்ஸ் கவிதை வரியை, அடிகளாரின் ஏற்றம்-எளிமை இரண்டிற்கும் மேற்கோள் காட்டுவர் அறிஞர்கள். A short darkman with a polish of a diplomat and the accent of an Oxford scholar என அடிகளாரின் ஆங்கில நடையினைப் புகழ்ந்து போற்றுவர் ஐரோப்பிய அறிஞர்கள். Thaninayagam is a man of vision. He plans things ahead. -ரோச் ஆண்டகை.

He is a Prince among priests. -டாக்டர் கைலாசபதி.

Thaninayagam knew many languages and literatures of the world. He is good at comparisons. When he reads the literatures of the world, he sees the similar points found in Tamil Literature and in bringing out this point, he excels others and he scores in this point over others. - இலங்கை ஆயர் தியாகுப் பிள்ளை.

He was a cultivated civilised human person. He enjoyed exercises. He loved reading. He listened to western classical music and he frequented Tamil music festivals in Tamilnad and Sri Lanka. True to his gifts as a versatile man, he was also dedicated to the study of languages, which in a way made him, a complete person. He was fluent in more than Eight languages: and his world consequently was ever expanding in concentric circle. Thaninayagam the dedicated Tamil patriot. -டாக்டர் ஜெயரத்தினம் வில்சன்.

எங்கள் சிறப்பெல்லாம் தமிழ் நாட்டிற்குள்தான்; தனிநாயக அடிகளின் சிறப்போ, தரணியெங்கும் பரவி இருக்கிறது.

- டாக்டர் மு. வரதராசனார்.

தமிழ் உலகின் சின்னம், தனிநாயகம்.

தனிநாயகர், ஒரு தனி நாயகம். தமிழ் உலகின் தனி நாயகம். அவர் ஓர் விந்தை மாந்தர். – சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை.

யாழ்ப்பாணத் தமிழ்த் திருவிழாவில் பூஜ்யர் தனிநாயகம் என்னும் பாதிரியார் இனிய தமிழில் சொற்பொழிவு ஆற்றி வந்த போது, எனக்கு இவ்வாறு தோன்றியது: இந்தப் பாதிரியார் யாழ்ப்பாணத்தவர்; தூத்துக்குடியில் வசிக்கிறார். உலகமெல்லாம் சுற்றுப்பயணம் செய்து எங்கும் தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லிவிட்டுத் திரும்பியிருக்கிறார். அடடா! எவ்வளவு அழகாக ஒவ்வொரு சொல்லையும் நிறுத்து அமைத்து, அழகிய, தமிழ் நூல் எடுத்துக் காட்டுக்களுடன் அவர் சொற்பொழிவு ஆற்றினார்?

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!**

என்று அவர் பொழிவினை முடித்த பாணி, எத்துணை நன்றாக இருந்தது. - **பேராசிரியர் கல்கி**
'தெய்வதரிசனம்' நூலில்.

பேராசிரியர் தனிநாயக அடிகளைப் பார்த்து, உங்கள் சமயம் எது? என்று கேட்டால், கிறிஸ்தவம் என்பார்; உங்கள் ஊர் எது என்று கேட்டால், யாழ்ப்பாணம் என்பார்; உங்கள் மொழி யாது எனக் கேட்டால், தமிழ் என்பார். அவ்வளவுக்குத் தமிழ் உணர்வு கொண்டவர் அடிகளார். அந்தத் தமிழ் உணர்வு எல்லோருக்கும் வரவேண்டும். – **அறிஞர் அண்ணா**

தவத்திரு தனிநாயக அடிகளார், தமிழகம், ஈழம், மலையகம் ஆகிய இம்மூன்று நாடுகளையும் இணைக்கும் பாலமாக இருக்கிறார். சீனா, மலாய்க்காரரர் வீடுகளிலும் தமிழை நுழையச் செய்யும் அவரது பணியால், இந்நாட்டில் தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் உண்டு. பன்மொழிப் புலவராகிய அடிகளார் உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று மொழி ஆராய்ச்சி செய்தவர். தமிழ்த் தூதுவராகிய அடிகளாரை நாம் அடிக்கடிப் பேச வைக்கவேண்டும். அவரது உரையை நாம் தலை வணங்கிக் கேட்க வேண்டும்; நமது நிலையையும் உயர்த்திக் கொள்ள வேணும். – **முத்தமிழ் வித்தகர்**
முருகு சுப்பிரமணியன் (மலேசியா)

தனிநாயகம் பேசும் போதெல்லாம், தனிச்சிறப்பு வாய்ந்த பொழிவாகவும் நிகரற்ற உரையாகவும் இருக்கும். அவர் வகித்த மேடைகள் எத்தனை? ஆற்றிய உரைகள் எம்மாத்திரம்? இயற்றிய நூல்கள் எண்ணற்கரியன. தமிழ்த் தூதின் மூலம், கிறிஸ்தவ நற்செய்தியை எடுத்துச் சென்ற நாடுகள் பல. தாயகத்தில் வீரமாமுனிவர், தத்துவபோதகர் ஆற்றிய தொண்டு, அவருக்கு

வழிகாட்ட, ஈழத்தில் பல்கலைப் புலவர் சுவாமி ஞானப்பிரகாசர் இவருக்கு முன்னோடியாய் இருந்தார். இவர்கள் நம் நாடுகளில் மாத்திரம் தொண்டு புரிந்தார்கள்; ஆனால் தனிநாயகம் நம் நாடுகளையும் கடந்து பிற நாடுகளுக்கும் சென்றார். அவர்தாம் தனிநாயகம். இன்பமாய்ப் பேசுவார்; பண்புடன் பழகுவார்; பணிவுடன் தொண்டாற்றுவார். **– அதி வணக்கத்துக்குரிய மதுரநாயகம் அடிகளார் (இலங்கை).**

நமது தலைமுறையின் மாபெரும் தமிழர் அவர். ஏனெனில், தம்மொழி, பண்பாடு ஆகியவற்றின் சிறப்பைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துவதில், அவர் பெருந் துணையாக இருந்தார்.

**–ஜேம்ஸ் இரத்தினம்.**

தமிழுக்கு ஓர் அணிகலன். **– அ.ச.அப்துல் சமது.**

1956 ஆனித்திங்கள் 3ஆம் திகதி, தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்திலே புகுத்தப்பட்ட அன்று, காலிமுகக் கடற்கரையிலே, நாமெல்லாம் சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்த போது, திடீரென்று அந்தத் தாக்குதலுக்கு ஊடாக ஓர் உருவம், துறவி உடையிலே, எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. எங்கள் மனம், ஒரு நிமிடம் பெருமிதம் எய்தியது. தமிழுக்காக நடைபெறுகின்ற சத்தியாகிரகத்திலே, தாமும் பங்கு கொள்ள வேண்டுமென்ற அந்தத் தைரியத்தோடு அங்கு வந்திருந்த தனிநாயக அடிகளாரை நாம் என்றும் மறக்க முடியாது.

எமக்குக் கலாச்சாரத் துறையிலே, கலாச்சாரத்தையும் அரசியலையும் பின்னிப் பிணைத்து எமது கலாச்சாரத்தைக் காப்பதற்கு, அரசியலில் எந்த வகையில் பணிபுரிய வேண்டுமென்று காட்டக் கூடியவராக, அல்லது எமது அரசியல் இலட்சியத்தை அடைவதற்குக் கலாச்சாரம் எந்த வகையில் உதவமுடியும் என்பதை எடுத்துக் காட்டுபவராக வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் விளங்கினார்.

**–அ. அமிர்தலிங்கம்**
**தமிழர் தலைவர்.**

அடிகளாரின் ஆளுமையால் கவரப்பட்டேன். அடிகளார், உணர்வால் உயர்ந்தவர். அடிகளாரிடம் பெண் இயல்புகளாகிய சாந்தம், கருணை, அடக்கம், பொறுமை, பரிவு ஆகிய பண்புகள் நிறைய இருந்தன.

**– யாழ்ப்பாண. தலைசிறந்த தமிழாசிரியர்**
**வித்துவான் சு. வேலன்.**

அடிகளார் பழகுவதற்கு இனியர்; அறிவாற்றல் மிக்கவர்; கடுமையாக உழைப்பதற்குக் கொஞ்சமும் அஞ்சாதவர்; பெரியோர்களுடன் தொடர்பும் உறவும் கொள்வதில் வல்லவர்.

–சுவாமி அமலதாசர்
(வகுப்புத் தோழர்)

தமிழறிஞர் பலரை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் தனிநாயக அடிகள், அவர்களிடமிருந்து வேறுபட்டும் தனித்துவம் பெற்றும் விளங்குகின்றார். ஆழமாக அறிந்து பேசும் பண்பாளர். பல மொழிகளையும் பல பண்பாடுகளையும் தெரிந்தவராகையால், பிற மொழிகளையும் பிற பண்பாடுகளையும் மதித்துப் பேசும் பண்பாளர். தனிநாயகம் ஒரு மொழி வெறியர் அல்லர்; அவர் ஒரு தமிழ் மொழி பக்தர். பிற மொழிகளை நையாண்டி செய்தவர் அல்லர். அவர் ஓர் சிறந்த இலங்கைத் தமிழ்த் தலைவர் என்பதில் ஐயமில்லை. மற்றநாடுகளில் மறைந்துகிடந்த தமிழ்ப் பண்பாடுகளைக் கண்டுபிடித்த இருபதாம் நூற்றாண்டுக் கொலம்பஸ்.

–டாக்டர் வே. அந்தனிஜான் அழகரசன்

கண்டவுடனேயே உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்ற கம்பீரமான தோற்றம் என்று சொல்கின்றோமே, அதற்கு எடுத்துக்காட்டாக இதுவரையில் நான் பார்த்த ஒரே ஒருவர், தனிநாயகம் அடிகளார்தாம். அவரது துறவு உடைத் தோற்றத்தை நான் சொல்லவில்லை; முகத்தின் அழகை மட்டுமே நான் குறிக்கவில்லை; அவருடைய ஆளுமையின் அழகும் பொலிவும், அவரின் முகத்தின் வழியாக-அவரது பண்பாட்டின் மூலமாக வெளிப்பட்ட போது, பண்பட்ட ஒரு மீமாந்தரின் தோற்றமும் ஆளுமையும் பொலிவும் இப்படித்தான் இருக்க வேண்டும்-இருக்கும் என்ற எண்ணம், எங்களுக்கு அன்று ஏற்பட்டது.

- அருட்தந்தை அமுதன் அடிகள்
முதல்வர் : தனிநாயகம் அடிகள் இதழியல் கல்லூரி
செயலர்: தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி.

ஓர் அரசுத் தூதரின் நாகரிகமும், புலிட்சர் பரிசு பெறுவோர்க்குரிய சொல்வளமையும், ஆக்சுபோர்டு பல்கலைக் கழக அறிஞர்க்குரிய ஆங்கிலப் பேச்சு முறையும் கொண்டவர்.

– பார்பரா ஜென்க்சு
அமெரிக்க அம்மையார்

அவர் ஓர் இராஜயோகி.

– ப. செல்வநாயகம்
செயலர்: தேசியக் கல்வி மேம்பாட்டுக் குழு
மலேசியா

இன்று தமிழ்மொழியானது, உலக நிலவியல் படத்தில் ஓர் நல்லிடத்தைப் பெற்றுளது என்றால், அனைத்துலக அளவில் பன்னாட்டுத் தமிழறிஞர்கள், தமிழியலில் என்றும் ஈடுபாடு கொண்டு ஆர்வம் காட்டுகிறார்கள் எனில், இவற்றுக்கெல்லாம் மூல காரணம், டாக்டர் தனிநாயக அடிகளாரின் பரந்த நோக்கும் அவரின் நேரடியான முயற்சிகளுமே ஆகும். எப்படி ஒவ்வொரு முன்னோடியும் இடையூறுகள் பலவற்றைத் தாண்ட வேண்டுமோ-அப்படியே அடிகளாரும் இந்த அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தைத் தோற்றுவிப்பதில் இன்னல்-இடர்கள் எல்லாம் கடந்து வந்தே வெற்றியுற்றார் எனலாம்.

– வே. கார்த்திகேயன், இ.ஆ.ப.

**செயலர் : 2ஆம் உலகத் தமிழ் மாநாடு**

இந்த (அ-ஈ) நான்கு நன்நோக்கால், அண்ணல் தனிநாயகர் பற்றிய ஓர் ஒட்டுமொத்த முழுமையான எண்ணம் நம் உள்ளத்தில் ஓங்கி ஒளிரும்; அவரது ஏற்றமும் தோற்றமும் இதயத்தில் எழும். இத்தகு அருமைக்கும் பெருமைக்கும் உரிய அருட்தந்தை சேவியர் தனிநாயகரின் சேவையும் சாதனையும் இனி எண்ணுவாம்:

# தமிழ்த் தூது

உலக நாயகராம் தனிநாயகரின் பணிகளில் எல்லாம் தலையாயப் பெரும்பணி, உலக அரங்கில் ஒண்டமிழை ஓங்கி ஒளிரச் செய்ததுதான். அதுவே அவரின் நிலைத்த, நீடிய புகழினுக்குக் கட்டியம் கூறும் காரணியாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

## ஆங்கிலமே ஆர்வம்

இத்தனைக்கும் இளமையில் இவருக்குத் தமிழ்க்கல்வியில் நாட்டம் இல்லை. உலகப் பொது மொழியாம் ஆங்கில மொழியில் புலமை பெற்று, அதில் சிறப்பாகப் பேசவும், செம்மையுற எழுதவும் ஆற்றல் பெற்றிட வேண்டும் என்பதே அவரின் திண்ணிய எண்ணமாக இருந்தது.

ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் பரிசுகள் பெறுவதைப் பெருஞ் சாதனையாகவும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் வரைவதை அரும்பேறாகவும் கருதிக் கொண்டிருந்தார். [1]

உரோம் நகரில் சமயவியல் பயிலும் போதும், ஆங்கிலத்திலேயே ஆர்வம் கொண்டிருந்தார்; அங்குத் தமிழ் மாணவர்களுடன் பட்டும்படாமலும் தான் பழகுவார்; அமெரிக்க ஆஸ்திரேலியர்களே, அவர் நண்பர்கள். தமிழ் மாணவர்கள் இணைந்து ஏற்படுத்திய 'வீரமாமுனிவர் தமிழ்ச் சங்கத்'தில் கூடப் பேருக்குத்தான் பங்கு பெற்றார்.[2] அவர் சிந்தை செயல் அனைத்துமே ஆங்கிலத்தில் ஆட்பட்டிருந்த காலம் அது.

## அருந்தமிழ் ஆர்வம் அரும்பல்

உரோம் நகரில்தான் தமிழ்ப்பற்று அவருள்ளத்தில் ஊற்றெடுத்தது. 12ஆம் பத்திநாதர் 1939இல் போப் ஆண்டவராகப் பொறுப்பேற்ற அன்று, 'இந்திய இலங்கை நாடுகட்கு, வானொலி உரைகள் தமிழில் நிகழ்த்தினோம். பாரதியின் பேரவா-தேமதுரத்

தமிழோசை உலகமெலாம் பரவ வேண்டும் என்ற ஆவல், விஞ்ஞானக் கருவிவாயிலாக நிறைவேற்றப்பட்டதை எண்ணி என் மனம் உவகையுற்றது.[3] உரோமையில் பயிலும் காலத்து, என் தமிழ்ப் பற்று மிகுந்ததே அன்றிக் குறைந்திலது. அவ்வாண்டுகளில் அங்கு ஒருங்கு வாழ்ந்த தமிழர் எண்மர். யாம் வீரமாமுனிவர் கழகம் என்ற ஒன்றைக் குரு மடத்தில் நிறுவித் தமிழை ஆண்டும் ஒரு சிறிது பயின்று வந்தனம். வத்திக்கான் வானொலி நிலையத்திலிருந்து தமிழில் ஒலிபரப்பும் வாய்ப்பும் பன்முறை பெற்றோம். அங்ஙனம் ஒலிபரப்புந்தோறும், தேமதுரத் தமிழோசை, உலகமெல்லாம் பரவும் வகை செய்தோம் எனக் கருதிக் களிப்புற்றோம்'[4] என எழுதுகிறார் அடிகள்.

## தூண்டல் துலங்கல்

உரோமையிலிருந்து திரும்பியதும், தூத்துக்குடி மறை மாவட்டத்தில் இணைந்தார். அம்மறைமாவட்ட ஆயர் ரோச் ஆண்டகையும், துணைத் தலைமை ஆசிரியராக வடக்கன் குளத்தில் பணியேற்ற புனித தெரசாள் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் லோபோ அடிகளாரும், தமிழறிவு மிக்கவர்களாதலின், அடிகளாரின் தமிழ்க் கனலைத் தூண்டினர். அதன் விளைவாக, அங்கிருந்த (சிதம்பரம்) பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பாரிடம் நான்கு ஆண்டுகள் நற்றமிழ் கற்றார்.

ஆயர் ஆண்டகை, சேவியர், ஒரு தமிழ்ப் பெயரினைச் சூட்டிக் கொள்ள வேண்டும் எனக் கூறியதற்குத் தக, தங்கள் முன்னோர் காஞ்சிபுரம் தனிநாயக முதலி என்பதறிந்து தம் பெயரினை, 'சேவியர் ஸ்தனிஸ்லாஸ் தனிநாயகம்' என மாற்றிக் கொண்டார்.[5]

## அண்ணாமலையில்:

ஐயரிடம் அருந்தமிழ் அறிய அறியத் தமிழ் மொழியின் தகவும் தமிழிலக்கியச் செழுமையும் அறிந்தார். தமிழ் இவரை ஈர்த்துப் பிணித்துக்கொண்டது. 'உண்டாலம்ம இவ்வுலகம். . .', 'யாதும் ஊரே யாவரும் கேளிர். . .' போன்ற பொதுமையில் புதுமையில் உளம் தோய்ந்த அடிகள், தொடர்ந்து தமிழ் பயின்று சிறந்திட முனைந்தார். அவர் முடிவினை, ரோச் ஆண்டகை ஊக்கினார்.

அதனால் அண்ணாமலை பல்கலைக்கழகம் சென்று தமிழ் முதுகலையில் 1945இல் சேர்ந்தார். அதுபோது அவருக்கு அகவை 32. பலர், தமிழை ஒதுக்கிய காலத்தில், அடிகள் சிறப்புப் பாடமாகத் தமிழ் மொழியைக் கற்றதின் காரணிகள்: தமிழ் மொழியின் சொற்செறிவு, செழிப்பு, தமிழ் இலக்கியங்களில் பொதிந்து கிடந்த வாழ்வியல் தத்துவங்கள், தமிழ்ப் புலவோரின் இயம்பும் தன்மைகள் போன்றனவாகும்.[6]

அங்கு இவருக்கு ஆசான்களாக அமைந்தோர்: பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ., டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் வ.சுப.மாணிக்கனார், பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், பூவராகன் பிள்ளை, மு. அருணாசலம் பிள்ளை போன்ற பேரறிஞர்கள்.

அடிகளார் வகுப்பில் ஆண்களும் பெண்களுமாக 25 மாணவர்கள் தமிழ்க்கல்வி பயின்றனர். உடன்பயின்றோரில் ஒருவர் வ.அய். சுப்பிரமணியம். சமகால மாணவர்கள்: பேராசிரியர் க. அன்பழகன், நாவலர் இரா. நெடுஞ்செழியன், கே.ஏ. மதியழகன், யாழ்ப்பாணம் க.வேலன் போன்றோர்.

பேராசான்களின் புலமை, நண்பர்களின் தமிழ் நேயம், அடிகளின் அருந்தமிழ்ப்பற்றையும் வளத்தையும் பெருக்கின. சங்க இலக்கியத்தில் தனி ஈடுபாடு கொண்டார். சிலப்பதிகாரத்திலும் சிந்தை வைத்தார்.

1947இல் முதுகலைப் பட்டம் பெற்றதும், தொடர்ந்து செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதரை நெறியாளராகக் கொண்டு, 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' (Nature in Ancient Tamizh Poetry) எனும் பொருள் பற்றி ஆய்ந்து, 1949இல் எம்.லிட். பட்டம் பெற்றார்.

அதுவே 1952இல் நூலாகியது. மறுபதிப்புகள் Nature in Tamizh Poetry-The Classical Period, Landscape and Poetry- A study of Nature in Classical Tamil Poetry என்னும் பெயர்களோடு பின்னர் வெளியாயின. இவ் ஆய்வினை,

'பழந்தமிழ் இலக்கியங்கள் பற்றி இதுவரை எழுதப்பட்டவை அனைத்தினும், இந்நூல், பல்வகையிலும் விஞ்சி நிற்கிறது' என்று செக்நாட்டுத் தமிழறிஞர் டாக்டர் கமில் சுவலபில் ஏத்துகின்றார். [7]

அண்ணாமலை தமிழ் வாழ்வு பற்றி அடிகளாரே இயம்புவது: 'நான்காண்டுகள் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பயின்று எம்.ஏ. சிறப்புப் பட்டமும், எம்.லிட். ஆராய்ச்சிப் பட்டமும் பெற்றேன். தமிழ்க் கலைகளில் மூழ்கியிருந்த நான், அக்காலத்திலேயே, நம் ஒப்பற்ற இலக்கியத்தைப் பற்றி, உலகு அறிய வேண்டுமென, ஒரு சிறிதாகுதல் உழைக்க உறுதி பூண்டேன்' என்கிறார். [8]

இதனால் உலகத் தமிழை, ஞாலமெங்கும் பரவிடச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திய இடம், கலைக்கூடம், நீறுபூத்த நெருப்பாய் இருந்த ஆர்வத்தைத் தூண்டித் துலக்கிய கோயில், உலகெலாம் தமிழ் முழக்கம் செய்பணிக்கு வித்திட்ட மண், அண்ணாமலை பல்கலைக்கழகமே என்பதுணரலாம். அண்ணாமலையில் அடிகளார் அன்று கண்ட கனவு, இன்று அவர் முயற்சியால் நனவாகி உலக அரங்கினில் தமிழ், ஓங்குதமிழாக ஒலித்துக் கொண்டிருப்பதை, ஒளிவீசிக்கொண்டிருப்பதைக் கேட்க முடிகிறது, காண முடிகிறது.

தூத்துக்குடி திரும்பியதும், சமய-தமிழ்ப் பணி புரிதற்காக 1948இல் ஒரு கழகம் நிறுவினார். அதுவே தமிழ் இலக்கியக் கழகம் (Tamil Literature Society - T.L.S.). எல்லோரும் இடம் பெறத் தடையாகும், ஒரு சாராரையே குறிக்கும் வேறு பெயரிடாது, ஏனையோரையும் ஈர்க்கும்வண்ணம், யாவரையும் இழுக்கும் வகையில், பொதுவாகத் தமிழ் எனப் பெயரிட்டமை போற்றற் குரியது.

## உலக நாயகர்

தனிநாயகர், தமிழ் நாயகர் மட்டுமல்லர்; அவர் ஓர் உலக நாயகர். உரோமப் பேரறிஞன் மார்க்கஸ் யுரேலியஸ் (கி.பி. 121 - 180) ஒரு முறை உரைத்தான்: 'அந்தோணியுஸ் என்னும் அளவில், நான் ஓர் உரோமானியன்; ஆனால் மனிதன் என்ற வகையில், உலகமே என் நாடு' என்றான். அதே போல் பிறப்பால், பிறந்த மண்ணால், நான் ஓர் **இலங்கையன்;** மொழியாலும் இனத்தாலும் பண்பாட்டாலும், நான் ஒரு **தமிழன்;** அதே சமயம், நான் ஒரு **மனிதன்.** எனவே நான், **உலகவன்** என்பார் நாயகர். உலகச் சிந்தையுடைய ஞாலத் தமிழ் உணர்வால், பரந்துவிரிந்த உலக மனப்பான்மை உடையவராகவே ஒளிர்ந்தார். எனவேதான்

இவரை, டாக்டர் சி.ஆர். பாக்சர், ஓர் 'உலகக் குடிமகன்' என உவந்தேத்துவார்.[9]

உலக உணர்வால்தான் பன்மொழிகள் பயின்று அம்மொழி இலக்கியங்களில் ஆழ்புலமை பெற்றிட்டார் எனலாம். அதுமட்டுமன்று 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்றுப் பொன்வரியைப் பொன்னேபோல் போற்றி வந்தார்; கண்ணே போன்று கருதிவரலானார்.

தாம் எந்நாடு ஏகினும் எங்கெங்குச் செல்லினும், இம் மனப்பான்மையை அனைவரும் பெற்றாக வேண்டும் எனக் கூறிவந்தார்; உலகெங்கும் ஒப்பம் (autograph) இடும்போதும், விருந்தினர் ஏடுகளிலும், கணியன் பூங்குன்றனாரின் அற்புத வரிகளைத் தமிழில் எழுதி உரிய மொழிபெயர்ப்புகளையும் குறித்தபின்பே, கையொப்பம் இடுவதனை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

Every country is my country
Every Man is my kinsman, என ஆங்கிலத்திலும்,

Todos Los Pais son mi pais
Todos Los Hombres Son Mis Hermamos,

என ஸ்பானிஷ் மொழியிலும் பெயர்த்திடுவார்.

**கவலை**

முறையாகத் தமிழைப் பயின்ற பின்றை, அடிகளார் உள்ளத்தில் ஒரு பெரும் கவலை உண்டாயிற்று. இத்துணைச் செழுமையும் இவ்வளவு வளமையும் மிக்க ஓர் அரிய மொழி அருமை இலக்கியங்கள், எப்படி உலகில் அறியப்படாமலேயே இருக்கின்றன! நேரு பெருமானின் Discovery of India போன்ற நூல்கள் உட்பட, எந்த நூலைப் புரட்டிப் பார்த்தாலும், இந்திய வரலாறு எங்கே தொடங்குகின்றது? வடக்கே இருந்துதானே தொடங்குகிறது. விந்திய மலையோடு நின்றுவிடுகின்றதே; அதற்குத் தெற்கே உள்ள மக்கள், இந்தியாவின் ஆதிக் குடிமக்கள், திராவிட மக்கள், மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம், திராவிடரின் நாகரிகம் என்னும் அளவிற்குச் சிறப்புப் பெற்றிருக்கும் இத் தென்னகத்து மக்களின் நாகரிகமோ, வரலாறோ, பண்பாடோ, மொழியோ, இலக்கியமோ, உலகவரால் அறியப் படாமல் இருக்கின்ற அவலநிலையினைப்

போக்கிடவேண்டும் என்ற தவிப்பும் துடிப்பும் தாகமும்தான், உலகப் பயணத்தைத் துணிவுடன் தொடங்கிடத் தக்க கரணியமாகின.[10]

## வாயில்

ஆர்வம் இருக்கலாம்; அதற்கு வேண்டிய வழி வாய்க்க வேண்டுமே! 1934 இல் சமயவியல் கற்றிட உரோம் சென்று உர்பன் குருமடத்து மாணவராகி, உர்பன் பல்கலைக்கழகத்தில் ஐந்து ஆண்டுகள் பயின்றாரன்றோ? அங்கு 43 உலக நாடுகளைச் சேர்ந்த 250 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். 'அவர்களுடன் எல்லாம் ஐந்தாண்டுகள் ஒன்றி ஊடாடி வாழ்ந்ததன் பயனாகப் பரந்த உலக மனப்பான்மை படைத்தேனாயினேன்'[11] என்றும், 'வெவ்வேறு பல்வேறு நாடுகள் பற்றியும் இலக்கியங்கள் பற்றியும் அறிதற்கு, அக் கல்லூரி எனக்கு அரிய வாய்ப்பை அளித்தது. 'ஒன்றே உலகம்' எனும் உளப்பான்மையை அக்கல்லூரி நன்கு வளர்த்தது'[12] எனவும் அடிகளார் இயம்பியுள்ளார்.

உரோமையில் இத்தாலியமொழி, ஸ்பானிஷ், போர்த்துக்கீசியம், பிரஞ்சு, செர்மன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளையும் பயின்றார்.

இப்படிப் பெற்ற பன்னாட்டவர் தொடர்பும் கற்ற பன்மொழிகளும், அடிகளாரின் உலகப் பயணத்திற்கு உறுதுணையாக அமைந்தன. மேலும் அவர் ஒரு கத்தோலிக்கக் குரு என்ற முறையிலும், அவரின் உலகச் செலவு மிகவும் வசதியாக இருந்தது. எவ்வித இடருமின்றிப் பல நாடுகட்குச் செல்ல, ஏனையவர்களைவிட அடிகளாருக்கு வாய்ப்பு அதிகம் இருந்தது.[13] எனவே அடிகளாரின் உலகத் தூது, மிகவும் எளிதாக இனிதாக இயன்றது.

## தமிழ்த் தூது

தனிநாயகர் தம் தமிழ்த் தூதின் முதற்படியாக 1949-51 இல் ஈராண்டுகள் வட, தென் அமெரிக்க நாடுகளிலும், சீனா, சப்பானிலும், நடு, வட ஆப்பிரிக்கா எனவும் பல நாடுகளுக்குச் சொற்பொழிவுச் சுற்றுலா மேற்கொண்டார். 1954 இல் மலேயா, சிங்கப்பூர் நாடுகளுக்கு இலக்கியப் பயணம் சென்றார். 1955 இல் ஆசியா நிறுவனத்தின் நிதியுதவி பெற்று ஆய்வுப் பயணம் மேற்கொண்டார்.[14]

தகுதி: தமிழ்த்தூது நிகழ்த்துவோர்க்குரிய தகுதிகளைத் தனிநாயகரே வரையறுக்கிறார்: இயற்கையாகிய அறிவும் கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும், பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியும் என நன்கு மதித்தற்கு ஏதுவாய இம்மூன்றன் செறிவுடையவன் அவ்வினைக்குச் செல்லுதல் வேண்டும். அவ்வண்ணம் அப்பண்பு அமையப் பெற்ற தூதர், வேற்று நாடுகளில் வேற்று மொழியை நன்றாகப் பேச அறிந்த மேடைக் கலை வல்லுநராய் இருத்தல் வேண்டும் என்பது ஒரு தலை. வேற்றுநாட்டினரிடை அவர் முறையில் அவர் பழக்க வழக்கங்களின் படியே அவர் பேசுவதுபோல் அவர்கள் மொழியைப் பேசி, அவர் உண்பது போல் அவர் உணவை உண்டு, அவருடன் பழகுதல் வேண்டும்.[15]

நோக்கம்: பழந்தமிழ் நூற்களைத் தேடுதல், தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்புள்ள இடங்களுக்கு ஏகுதல், தமிழ் மக்கள் குடியேறி உறையும் நாடுகளுக்குச் சென்று ஆராய்தல், தமிழாய்வில் ஈடுபட்டிருக்கும் தமிழரல்லாத அறிஞர்களைச் சந்தித்தல், தமிழின் சிறப்பறியாப் பிற நாட்டறிஞர்கட்குத் தமிழின் தொன்மையும், தன்மையும் எடுத்துரைத்தல் எனப் பன்னோக்குடன் அடிகளார் உலக உலாக்களை மேற்கொண்டார். சென்ற நாடுகளின் சீர்மைகளையும் அந்நாட்டவரின் பழக்க வழக்கம், வரலாறு, பண்பாடு அறிந்து தெரிவித்தலை நோக்கமாகவும் கொண்டு சென்றார்.[16]

அடிகளாரின் உலகச் செலவு, வெறும் பொழுது போக்காகவோ, பல நல்ல இடங்களைக் கண்டுகளிக்கவோ அமைய இல்லை. தமிழ் மொழியின் தொன்மை-தன்மை, இலக்கியச் செறிவு-சிறப்பு, உலகளாவிய கண்ணோட்டம், தமிழ்க் கலை வரலாறு நாகரிக, பண்பாட்டின் மேம்பாடு போன்றவற்றைப் பாரெங்கும் பரப்புதற்காகவே அமைந்திருந்தது.

பல்வேறு மொழிகளுடனும் பலவாய நாடுகளுடனும் மக்களுடனும் தொடர்பு கொண்ட அடிகள், தமிழ் மொழி, தமிழர் இனம், தமிழ் நாடு ஆகிய மூன்றின் மாண்பினை ஒப்பு நோக்கி உணர்ந்து, பிறருக்கு-பாருக்கு உணர்த்திய தனிப்பெரும் பண்பாட்டுப் பகலவனாகப் பிறங்கினார்.

இந்த உலக உலா மூலம் தனிநாயக அடிகள் உலகெங்கணும் சிதறிக் கிடந்த தமிழறிஞர்களுடன் நல்லுறவு கொண்டு, பரவிக்கிடந்த தமிழரிடையே ஒரு தமிழார்வத்தைத்

தூண்டிவிட்டார். முன்னம் தமிழகம், இலங்கை, மலேசியா மூன்று நாட்டுத் தமிழரிடையே தான் ஒற்றுமை உணர்வு இருந்தது. அடிகளார் உலகமெங்கணும் ஊடாடி ஊடுருவிச் சென்று உலகின் மூலை முடுக்குகளில் வதியும் தமிழர் பற்றியெல்லாம் தகு ஆய்வு நிகழ்த்தி, அங்கெல்லாம் ஆன்ற தமிழ் உணர்வைப் பரப்பிப் பாய்ச்சி, 'உலகத் தமிழர்களே! ஒன்று படுவீர்; ஒற்றுமையுற்று ஒன்றி வாழுங்கள்' எனத் தெருட்டி ஒருங்கிணைத்தார்.

உலகப் பல்கலைக்கழகங்களில் நாற்பதுக்கும் மேலான பல்கலைக்கழகங்களில் தமிழின் அருமை பெருமை பறை சாற்றி, அப்பல்கலைக்கழகங்களில் திராவிட இயலை-தமிழியலைப் பாடமாக வைத்துச் சிறந்திட வகை செய்தார்.

## சென்ற நாடுகள்

அமெரிக்க ஐக்கிய நாடு, அல்ஜீரியா, அர்ஜன்டீனா, ஆப்பிரிக்கா, ஆலந்து, ஆஸ்திரியா, இந்தியா, இங்கிலாந்து, இத்தாலி, இந்தோனேசியா, ஈரான், ஈராக், உகாண்டா, உருகுவே, எகிப்து, எத்தியோப்பியா, எக்குவதோர், கம்போடியா, காங்கோ, கிரீஸ், கென்யா, சப்பான், சிலி, சிங்கப்பூர், சீனா, செர்மனி, செனகால், சோவியத் நாடு, சுவிட்சர்லாந்து, சுவீடன், சூடான், தாய்லாந்து, தான்சானியா, துருக்கி, துனீசியா, நார்வே, பர்மா, பனமா, பிரான்சு, பின்லாந்து, பிரேசில், பெல்ஜியம், பெரு, போர்ச்சுகல், மலேசியா, மார்ட்டினிக், மெக்சிகோ, மொரீசியஸ், லெபனான், டிரினிடாட், டென்மார்க், வியட்நாம், ஸ்பெயின், ஜமெய்க்கா என 54 நாடுகட்கு அடிகளார் சென்றுள்ளார்.[17]

சில நாடுகட்குப் பலமுறை பயணித்துள்ளார். எந்நாட்டு மக்களையும் தன் நாட்டு மக்களாகவே-தம்மவராகவே கருதிடும் உளம் கொண்டவராக ஒளிர்ந்தார். அத்துணை மனிதர்களையும் தம்மையொத்த மாந்தராகவே மதித்திடும் மனத்தவராக மிளிர்ந்தார். எந்நாடு ஏகினும் அந்நாட்டு மக்களின் மொழி, வரலாறு, இலக்கியம், கலை, பண்பாட்டின் பெற்றி, பாங்கு அறிவதில் ஆர்வம் கொள்வார்.

இந்த ஈராண்டுப் பயணத்தில் ஓராண்டுக்கு மேல் ஐக்கிய அமெரிக்காவில் உறைந்து தமிழ் உலா நிகழ்த்தியுள்ளார்; அந்த ஓராண்டிற்குள் 200க்கும் மேற்பட்ட பொழிவுகள் ஆற்றியுள்ளார்.[18]

## அறிமுகமே

பல்வேறு கழகங்களில் வெவ்வேறு பகுதியினர்க்கு நல்லுரை நிகழ்த்தியுள்ளார். 'தென்னிந்திய இலக்கியம், தென்னிந்தியாவின் பண்பாட்டு மரபு, தென்னகத்தில் அறியப்படா இலக்கியம், புதிய இந்தியா, தமிழின் தன்மை தொன்மை, தமிழ்ப் பண்பாடு, யாதும் ஊரே யாவரும் கேளிர் போன்ற தலைப்புகளிலே பொழிவாற்றினார். பெரும்பாலும் தமிழ்மொழி இலக்கியம் பற்றிய பொதுவான செய்திகளே- அறிமுக உரைகளாகவே இவர் உரைகள் அமைந்தன. 'தமிழைப் பற்றி யாதேனும் அறியார்க்கு, ஆராய்ச்சியுரை நிகழ்த்துதற்கு இடமின்று'[19] என்பதே காரணி.

விரிவுரைகள், வானொலி, தொலைக்காட்சி, செய்தித் தாள்களின் நேர்காணல், இதழ்களில் கட்டுரைகள் என்ற முறையில்தான் இவரின் தமிழ்த்தூது நடைபெற்றது.[20]

தமிழின் மாட்சி, தமிழரின் மாண்பு, பண்டைத் தமிழர் வணிகம்- யவனத் தொடர்பு, ஐந்திணை அழகு, நானில நலம், தமிழரின் இயற்கை ஈடுபாடு, மலர்களைக் கையாண்ட முறைகள் போன்றனவற்றை எடுத்து இயம்புவார்-விளக்கிக் கூறுவார்.

'அம் மக்கள், தமிழ் நாட்டின் கலைகளை, தமிழ் இலக்கியத்தின் பெருக்கை, பழந்தமிழ்க் காதற்பாக்களை, பக்திமாலைகளைப் பற்றிக் கேள்விப்பட்டவர் அல்லர்'.[21] ஆதலால் முதன்முறையாகக் கேள்விப் பட்டதும், வியந்தனர்- நயந்தனர்.

## பொழிவின் பாங்கு

இவர் தம் உரைகளைத் தொடங்கும் முறையே தனி அழகியது. 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்னும் முதற் குறட்பாவைக் கூறி, விவிலியத்தில் வரும் 'நானே அகரமாய் இருக்கிறேன்' எனும் திருமொழியையும் இணைத்து விளக்கித் தொடங்குவார். தொடங்கும் அழகிலேயே, அவையோர் ஆட்பட்டுவிடுவர்.

பொழிவின் ஊடே பாரதியின் 'யாமறிந்த மொழிகளிலே...' 'செந்தமிழ் நாடெனும் போதினிலே...' பரிபாடலிலிருந்து 'தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ, கல்லினுள் மணியும் நீ, சொல்லினுள் வாய்மையும் நீ' போன்றவற்றை, அண்ணாமலை

இசைக்கல்லூரியில் அறிந்த இசைமுறை கொண்டு இசைத்துக் காட்டி வசப்படுத்துவார்.

திரைப்படச் சுருள்கள் மூலமும் விளக்குவார். தமிழ்க் கலைகள்பற்றி உரையாற்றும்போது தமிழகக் கோயிற்கட்டிடக் கலை, நாட்டியக் கலைகளை, தம்முடன் எடுத்துச் சென்ற திரைப்படங்களைப் போட்டுக் காட்டி விளக்கியுள்ளார். கருத்துக்களைக் காட்சியாகவும் கண்ட மேல்நாட்டினர் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றனராம்.

தம்முடன் எடுத்துச் சென்ற நூல்களை, அங்கங்கே உள்ள பல்கலைக்கழகங்களில் எங்கெல்லாம் இந்தியத் துறை என்னும் பெயரில் வடமொழித் துறை விளங்கியதோ அங்கெல்லாம் அவற்றை அளித்தார். 'இவற்றையும் கொஞ்சம் படியுங்கள். இந்தியத் திருநாட்டில் இத்தகு பழமையான நாடு, பழமையான இனம், தொன்மையான மொழி, தொல் பண்பாடு உண்டென உணருங்கள். இதுவரை இம்மியும் அறியாமல் இருக்கும் நீங்கள், முழுவரலாற்றையும் அறிவியல் கண்ணோட்டத்தோடு இனி ஆராய்தற்கு உற்ற துணையாக இருக்கும்' என எடுத்து இயம்பியுள்ளார்.[22]

இவ்வாறெல்லாம் 'ஒன்றே உலகம்' என்ற உயர் கருத்தை உரைத்திடும் போதெல்லாம், அமெரிக்க மக்கள் அப்படியே தமிழ்த் திறம் வியந்து செயல் மறந்து வியப்பில் ஆழ்வர். 200 ஆண்டுகட்கு முன் அரும்பிய நாட்டில் இருந்து கொண்டு, வாணிப நாகரிகத்தையே உலகப் பெருநாகரிகம் என மயங்கிக் கொண்டிருக்கிறோமே! இவர்களிடமோ, 2000 ஆண்டுகட்கு முன்னம் இத்துணைச் சிறப்பானதொரு நாகரிகமும் பண்பாடும் தோற்றிய நாடு, இனம், மொழி, வரலாறு, மரபு எனக் குறுகிய எல்லைக்குள் அடங்கி முடங்கிவிடாத, உலகளாவிய ஓர் உன்னத எண்ணம் இருந்திருக்கிறதே; இது எத்துணை ஏற்றம் சான்றது என வியந்து விம்மிதம் அடைந்துள்ளனர்.[23]

**கண்டவை**

தம் தமிழ்த் தூதின்போது கண்டதும் கேட்டதும் பலப் பல. அவை நமக்குப் புதிய செய்திகள்:

தாய்லாந்தில்: மன்னர் முடிசூட்டு விழாவில் பாடப்படும் பாடல்களில், திருவெம்பாவையின் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியே..., பாசம் பரஞ்சோதி... பாடல்கள்

இடம்பெற்றுள்ளன. இவை தாய்லாந்து மொழியிலும் கிரந்தத்திலும் எழுதப்பட்டுள்ளன.

தாய்லாந்து இராமாயணம், கம்பராமாயணத்தைத் தழுவியதாகவே உளது. கதை மாந்தர் பெயர்களும், தமிழ்ப் பெயரினைத் தழுவியே உள்ளன. பல்லவ, சோழர் காலக் கட்டிட, சிற்ப முறைகள் அங்கே பரவி இருக்கின்றன. அந்நாட்டு நாட்டியக் கலை, தமிழ் நாட்டியக் கலை போன்றது; வெண்கலச் சிலைகளும் சோழர் கலை போன்றன.

தாய்லாந்து-மலேசியா இணைப்பில் உள்ள 'தாக்குவப்பா', சிலப்பதிகாரம் செப்பும் 'தக்கோலமே'. நம் கப்பல், தாயகம், ஐ அம் அய் விகுதிச் சொற்கள், அம்மொழியில் அப்படியே உள.

கம்போடியா நாட்டுக் கிரேமர் மொழியிலும் கப்பால் (கப்பல்), மா (குதிரை) போன்ற சொற்கள் வழக்கில் உள்ளன. சைவ வைணவம், அங்கே குடும்பங்களில் ஆட்சி புரிகின்றன.

அங்கோர்வாட், அங்கோர்தோம் ஆகிய ஊர்களில் இந்தியக் கலைக்கூறுகள் காணப்படுகின்றன. சுவர்களில் இராமாயண பாரத விட்ணு புராணக் கதைகள் செதுக்கப் பெற்றுள்ளன.

அந்நாட்டு மன்னர்கள் (திருவுடை மன்னரைக் காணின், திருமாலைக் கண்டதாகவே கருதுவது போல்) திருமால் அவதாரங்களாகவே கருதப்பட்டு வந்தனர். கட்டிட, கோபுர அமைப்புகள், காஞ்சி, மாமல்லபுரத்தை நினைவு படுத்துகின்றன. இந்திரவர்மன், சூரியவர்மன் என 'அன்' விகுதியில் மன்னர் பெயர்கள் அமைவது, பல்லவப் பெயர்களை நினைவு படுத்துகின்றன.

இந்நாடுகட்கும் இந்தியா-தமிழகத்திற்கும் இடையே உள்ள தொடர்பு, இவற்றால் தெரிய வருகிறது. தமிழகத்-தாய்லாந்து தொடர்பினை முதன் முதல் அறிந்து அறிவித்தவர் அடிகளாரே.[24]

**சப்பானில்:** சப்பானிய மொழி, தமிழ் மொழிபோல் ஓர் ஒட்டுநிலை மொழி. சங்க அகப் பாக்களுக்குக் 'கொளு' (Colophon) குறிப்பிட்டுள்ளமை போன்றே, சப்பானியப் பாடல்களுக்கும் கொளு எழுதியுள்ளனர். இங்கு போல் அங்கும் 'இறைச்சி' போன்ற இயல்புகள் உள. 31 அசைகளைப் பேரெல்லையாக உடைய,

'தங்கா' செய்யுள் வகை, கருத்திலும் கொளுவிலும் நம் குறுந்தொகை போன்றே காட்சியளிக்கின்றது.

**ஹவாயில்:** துறைமுகத்திற்கு வரவேற்க வந்த மக்கள் அனைவரும், கண்ணியும் மாலையும் தாரும் கோதையும் தரித்தே வந்திருந்தனர். விருந்தினர்கட்கும் மாலை சூட்டினர்; வழியனுப்பும் போதும் மாலை அணிவித்தே விடையளித்தனர். சங்ககால மக்களைப் போலவே காட்சியளித்தனர். அந்நினைவே அடிகளுக்கு ஏற்பட்டதாம்.

## அறிந்தவை

1. தமிழுக்கும் மேலை நாடுகட்கும் ஏற்பட்ட தொடர்பு, தமிழுக்கும் ஆசிய நாடுகட்கும் இடையே அவ்வளவாக அரும்ப இல்லை. 2. ஆசிய நாடுகளிலும் தமிழர் குடியேறிய நாடுகள் தவிர பிற நாடுகளில், தமிழ் பரவ இல்லை. ஆசியாவின் நடு நாட்டவராகிய தமிழர் நாற்றிசையும் நாட்டம் செலுத்தியிருக்கலாம். அப்படியின்றி மேற்றிசை நோக்கியே மனம் போக்கியுள்ளனர். 3. சீனா, சப்பான், சாவகம், புட்பகம் போன்ற நாடுகளிலும், தமிழின் புகழினைப் பரப்பாது பதிக்காது போயினர். 4. கீழ்த்திசை நாடுகளுக்கும் புத்தம் பரப்ப, வணிகம் பெருக்கச் சென்றுள்ளனரே தவிர, தம் மொழியினைக் கால் கொள்ளச் செய்ய மறந்தனர். 5. மேலை மொழி இலக்கிய ஆராய்ச்சியாளர்கள், இந்திய நாகரிகம் அறியத் தெய்வீக மொழியாம் வடமொழி இலக்கியம் மட்டும் அறிந்தால் போதும் என நினைத்திருந்தனர். 6. மேனாடுகளில் வெளியான இந்திய இலக்கிய வரலாறுகளில் எதிலும், தமிழ் இலக்கியம் இம்மியும் இடம் பெறவில்லை.

7. அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கீழை நாடுகள் பற்றிய ஆய்வு நடை பெறுகிறது; ஆயினும் தமிழ்பற்றிய ஆராய்ச்சி மிகக் குறைவு. 8. இந்தியக் கலைகள் என்றால், வடக்கத்திய கலைகளே; இந்தியப் பெருநகரங்கள் எனில், தில்லி, கல்கத்தா, மும்பை என்ற நினைப்பே இருந்தது; தமிழ்நாடு என்ற ஒன்று பற்றிய அறிகை, அறவே இல்லை. சப்பானியர், திராவிடக் கலைகள் பற்றியெல்லாம் அறியத் துடிக்கிறோம். ஆனால் அவற்றை அறிய எங்கள் மொழியிலோ உலகச் சாளரமாம் ஆங்கிலத்திலோ கருவி நூல்கள்- பார்வை நூல்கள் இல்லையே என ஏங்குகின்றனர்.[25]

9. உலகின் தொன்மை மொழி, உயர்தனிச் செம்மொழிதான் தமிழ். ஆனாலும் இப்பெருமைக்குரிய மொழி இலக்கியம் பற்றி நமக்குள்ளே பழங்கதைகள் பேசினோமே தவிர, தமிழ் வாழ்க- ஓங்குக என வானளாவக் கத்தினோமே தவிர, கதைத்தோமே ஒழிய, அண்டைமாநிலம், அயல்நாடு அறிய, ஏதாவது செய்தோமா? பின் எப்படி நம் தமிழை, உலகவர் அறிய முடியும். எனவே இனியேனும் உலக மொழியான ஆங்கிலத்தில் அளிக்கப்பட்டால் மட்டுமே, வானம் அறிந்ததனைத்தும் அறிந்த வளர்மொழி, வானம் அளந்ததனைத்தும் அளந்த வண்மொழி, உலக அரங்கில் இடம்பெற இயலும் எனும் பேருண்மை அடிகளாருக்குப் பட்டது.

10. சுமத்திரா வாழ் 'சிப்பிரிங்' இனத்தோர், தம்மைச் சோளியர், சேரர், பாண்டியர், கலிங்கர் என வகுத்துக்கொண்டுள்ளனர். அம்மா, அக்கா, இஞ்சி, கஞ்சி, க(ப்)பலர், குதிரை, கூடை, ஓசாத்து, மல்லி, தம்பி, தாலி, பிட்டு, பெட்டி போன்ற தமிழ்ச் சொற்கள் இந்தோனேசிய மொழியில் வழக்கில் உள. சாவகத்தில் கோயில்களும் சிலைகளும், திராவிடக் கட்டிட, சிற்பக் கலைகளை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளன.

## குறிப்புகள்

1. அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகளார், பக். 2-3.

2. மேலது ப. 4.

3. தனிநாயகம் அடிகள், ஒன்றே உலகம், ப. 128.

4. தனிநாயகம் அடிகள், தமிழ்த் தூது, ப. 20.

5. நிர்மலா இராசரத்தினம், தமிழும் தனிநாயகமும், தனிநாயக அடிகளார் நினைவு மலர், ப. 2.

6. அமுதன் அடிகள், மேலது, ப. 9.
   அந்தனி அழகரசன், தனிநாயகர் வரலாறு, ப. 11.

7. Rajan Philippu Pillai, A Biographical Sketch of Thaninayaga Adigal, Tamilaram, p.5.

8. டாக்டர். வே. அந்தனி ஜான் அழகரசன், தனிநாயக அடிகளின் வாழ்வும், பணியும், ப.15.

9. Dr. C.R. Boxer, A Citizen of the World, Tamilaram, p.25.

10. அமுதன் அடிகள், உலகெலாம் தமிழ் முழக்கம், ப. 14.

11. தனிநாயக அடிகள், தமிழ்த் தூது, ப. 19.

12. தனிநாயக அடிகள், ஒன்றே உலகம், ப. 132

13. அந்தனி ஜான் அழகரசன், ப. 59.

14. எப்.எக்ஸ்.சி. நடராசா, அணையா விளக்கு, ப.க.

15. அமுதன் அடிகள், தனிநாயக அடிகள், ப. 135.

16. மேலது, ப. 150.

17. மேலது, ப. 25.

18. தமிழ்த் தூது, ப. 13.

19. தமிழ்த் தூது, ப. 15.

20. தமிழ்த் தூது, பக். 13-14.

21. தமிழ்த் தூது, பக். 15-16.

22. அமுதன் அடிகள், உலகெலாம் தமிழ் முழக்கம், ப.16.

23. அமுதன் அடிகள், மேலது, ப.16.

24. Prof. T.P.M., All India Oriental Conference, Annamalai 'Versity, 1955, Presidential address, Tamil Section, Tamil Culture, Vol.V, No.2, p.143.

25. தமிழ்த் தூது, ப. 13.

# இரு சுடர்கள்

## அ. தமிழ்ப்பண்பாடு (Tamil Culture)

உலகவர் மொழியில் நம் ஒண்டமிழின் உயர்வினை உணர்த்தாது போனதால், எப்போதோ உலக அரங்கில் ஓங்கி ஒளிர்ந்திருக்க வேண்டிய நம்மொழி, வெளியே அறியப்படாது போனது என்று உலகப் பயணத்தால் உணர்ந்த அடிகளார், தாயகம் திரும்பியதும், தூத்துக்குடியிலிருந்து, தமிழ் இலக்கியக் கழகத்தின் வாயிலாக, Tamil Culture எனும் ஆங்கில முத்திங்கள் இதழினை முதல் வேலையாக 1952 பிப்ரவரித் திங்களில் வெளியிடலானார்.

**நோக்கம்:** முதல் உலகச் சுற்றுப் பயணத்தின் போது, பல நாட்டு மொழித்துறை அறிஞர்கள் கூட, தொன்மைத் தமிழ் மொழி பற்றி அறியாதிருந்த அவலநிலை கண்டு கவலை கொண்டார். இதற்குரிய காரணி: உலகமொழியாம் ஆங்கிலத்தில் தமிழ் பற்றிய நூல்கள் இல்லாக்குறையே. இக் குறையினை நிறைவு செய்யவே, ஆங்கிலக் காலாண்டிதழ் தொடங்கப் பெற்றது.

தமிழைப் பற்றித் தமிழிலேயே எழுதுவதால், அது தமிழறிந்தோரிடையே மட்டும் தெரியவருமே தவிர, தமிழறியாத பிற மொழியாளர், பிற நாட்டாரிடம் தமிழ் அறிமுகம் ஆகவே முடியாது. இதற்கோர் சரியான தீர்வு ஆங்கில இதழ் தொடங்குவதே என்றுணர்ந்தார் அடிகள்.

மேலும் உலகப் பயணத்தின் போது, தமிழ் ஆர்வலர்களும் ஆய்வாளர்களும், தமிழ் ஆராய்ச்சி இதழ் ஆங்கிலத்தில் வெளியிடவேண்டிய தேவையை அடிகளாரிடம் அடிக்கடிக் கூறி வலியுறுத்தி வந்தனர்.

தமிழ் ஆய்வு என்றால், தமிழ் இலக்கண-இலக்கிய ஆய்வுகளே என்ற அளவில் குறுகி நின்றது. மேலை நாடுகள்

போலே, மொழி பேசும் மக்களோடு தொடர்புடைய வரலாறு, பண்பாடு, நிலவியல், உளவியல், மானுடவியல், மொழியியல், ஒப்பியல் என எல்லாத் துறைகளையும் இணைத்துப் பிணைத்துத் 'தமிழியல்' என்ற விரிந்து பரந்த களத்தில் ஆய்வு நிகழ வழி கோல வேண்டும். இவற்றுக்கெல்லாம் ஒரே தீர்வு, ஆங்கில இதழே.

முன்வரலாறு: தமிழகத்தில் தோன்றிய முதல் திங்கள் இதழ், 'தமிழ் மாகசின்' (1831). பத்தாண்டின் பின் இலங்கையின் முதல் திங்கள் ஏடு 'உதய தாரகை' (1841) வெளியானது; அதேயாண்டில் சைமன் காசிச் செட்டி, கொழும்பிலிருந்து வெளியிட்டது 'உதயாதித்தன்'.[1]

இலக்கியம் தொடர்பாக வந்த மூவிதழ்கள், 'செந்தமிழ்' (1902, மதுரைத் தமிழ்ச் சங்கம்), 'செந்தமிழ்ச் செல்வி' (1923, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்), 'தமிழ்ப் பொழில்' (1925, கரந்தைத் தமிழ்ச் சங்கம்).

தமிழறியா வெளிநாட்டார் தமிழ் அறிய ஆங்கில மொழியில் வந்தவை: மறைமலை அடிகளாரின் The Ocean of Wisdom, Oriental Mystic Myna, அவரே ஆசிரியராக இருந்த Sidhantha Deepika[2]. தமிழின் தொன்மை, கல்வெட்டு போன்றன பற்றிய Tamilian Antiquary (1907-14). இவ் ஆங்கில இதழ்கள் ஏதும் இல்லா நிலையில் எழுந்ததுதான் Tamil Culture.

சூழல்: தமிழியல் தொண்டர்களான எல்லிஸ், கால்டுவெல், கோவர், போப், வில்சன், வின்சுலோ, வால்டர் எலியட், ஸ்டோக்ஸ் போல்வார், 'திராவிடவியல்' அதிலும் குறிப்பாகத் 'தமிழியல் புறக்கணிக்கப்படுகிறது' எனப் புழுங்கினர்- பொருமினர்.

மிக உயரிய பெருமையுடைய மேன்மைத் தமிழ் மொழியை, பிரிட்டிஷ் பேரரசும் இந்தியஅரசும், உலகினுக்குத் தெரியப்படுத்தாது உதாசீனம் செய்கின்றன என்று ஜி.யு.போப் மிகவும் புண்பட்டார்.[3] ஆரியரல்லாதாரின் நாகரிகத்தை உலகிற்கு அறியச் செய்ய, இந்திய அரசுக்கு எண்ணமே இல்லை என ஏங்கித் திரும்பினார் ஓர் அமெரிக்க ஆய்வாளர்

இந்திய இலக்கியம் சமயம் தத்துவம் போன்றன பயில்வோர், இனிய தமிழைப் பற்றி ஏதும் தெரியாதவர்களாய் ஒதுக்கப்பட்டுள்ளனர் என்பது மாக்ஸ்முல்லர் மதிப்பீடு.[4]

எகிப்தியர் கிரேக்க உரோமானியர் ஈபுருக்களுக்கு நிகரான உயரிய பெருமையும் உயர் வரலாறும் உடையவர்கள் தமிழர்கள். 'தமிழ் இந்தியா' பற்றிய ஆய்வுகளையும் உண்மைகளையும் ஒதுக்கிவிடுவோமேயானால், இந்திய வரலாறு, தவறான முடிவுக்கு வழிவகுத்துவிடும்.[5]

'இந்திய நாகரிகம் பண்பாட்டில், திராவிடக் கூறுகள் 75 பங்கிற்கும் மேல் உள' என்பது 'நன்னெறிமுருகன்' டாக்டர் சுனிதி குமார் சட்டர்ஜியின் கணிப்பு.[6]

**தேவை:** தமிழ்ப் பண்பாடு, மொழி, வரலாறு, இலக்கியம் ஆகியவை பற்றிய உண்மைகளை நிலை நிறுத்த, இவை பற்றிய விளக்கங்கள் உலகில் உள்ள எல்லோரையும் சென்றடையச் செய்வது நம் கடமை ஆகும். மறைந்து மண்டிக் கிடக்கும் இவ்வுயர்வுகளை, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது, மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும்; தன்னலமுமாகும். எனவே, வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இத்தொண்டினைச் செய்யவே, தமிழ் கல்சர் இதழ் வெளிவருகிறது.[7]

தகுதி சான்ற சான்றோர்களும், தமிழ் இலக்கியக் கழகத்தை விடப் பழைமையும் மதிப்பும் மிக்க நிறுவனங்களும், இதழ் ஒன்றினைக் கொணர எண்ணமோ, ஈடுபாடோ இம்மியும் கொள்ளாததாலும், உடனே கொணரும் கட்டாயம் ஏற்பட்டுள்ளதாலும் தாமே தமிழ் கல்சர் இதழைத் தம் கடமையாக ஏற்று வெளிக் கொணர்ந்தார் அடிகளார் அவர்கள்.

**அமைப்பு:** இதழின் அளவு 24.5 செ.மீ. x 16.5. 1952-66 வரை 15 ஆண்டுகள் விட்டுவிட்டு வந்துள்ளன. 1960,62,65 மூன்றாண்டுகள் வெளிவரவில்லை; வந்த ஆண்டுகள் 12; வெளியான இதழ்கள் மொத்தம் 44; பக்கங்கள் 4522; கட்டுரைகள் 276.

இதழின் மேலட்டை வெளிர் மஞ்சள் வண்ணம். இடப்புறம் தொகுதி எண், இதழின் தொடர் எண் தரப்பெற்றுள்ளன. தொகுதி எண், உரோமன் எண்ணிலும் தொடர் எண், அராபி எண்ணிலும் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்புறம் திங்களும் ஆண்டும்.

அட்டையின்மேல் 0.7 செ.மீ உயர ஆங்கிலக் கொட்டை எழுத்தில், TAMIL CULTURE என அச்சடிக்கப்பட்டுள்ளது. அதன் கீழே A Quarterly dedicated to the study of TAMILIANA என்று இடப்பட்டுள்ளது.

18. 9. 1954 சென்னையில் தமிழ்க் கலை மன்றம் (Academy of Tamil Culture) நிறுவப்பட்டது. அதன் சார்பில் இதழ் வரத்தொடங்கியது. இதழின் பெயருக்கு மேலே, வட்டவடிவில் மன்றத்தின் இலச்சினை; பெயரின் கீழே Journal of the Academy of Tamil Culture எனக் குறிக்கப் பெற்றுள்ளது. இலச்சினையில் மூவேந்தர்களின் வில், புலி, மீன் கொடிகள்; இலச்சினையின் அடியில் தமிழ்க் கலைமன்றம் எனத் தமிழிலும், அதன் கீழ் The Academy of Tamil Culture என ஆங்கிலத்திலும் அடிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் கீழே, பொருளடக்கம்-பக்க எண்கள், அதனடியில் இடப்பக்கம் உரிமைப்பதிவு, வலப்பக்கம் ஆண்டுக் கட்டணம் ரூ.5. தனிஇதழ் விலை ரூ. 1.8. பின்னர் முறையே 7,10; 2,3 என ஏறியுள்ளன.

இதே அமைப்பில் உள்ளே தாளில் இந்த அமைப்பு அப்படியே. முன் அட்டை உட் பக்கம் மேற்பகுதியில், ஆசிரியர் குழு, பிற்பாதியில் தமிழ்க்கலை மன்றக் குழுவினர் விவரம். பின் அட்டையில், இதழின் கட்டணம், வெளியிடுவோர், வெளியான முகவரி, அச்சக முகவரி அமைந்துள. பின் அட்டையின் உட்பக்கம், தமிழ் எழுத்துக்களை ஆங்கிலத்தில் எழுதும் (Transliteration) முறை, முன் இணைப்புத் தாளில், தமிழ் எழுத்துகட்கு இணையான ஆங்கில எழுத்துக்களும் தரப்பட்டிருக்கும்.

**விவரம்:** கட்டுரைகள் 276. இவற்றை எழுதியோர் 120 அறிஞர்கள்.

<u>வெளிநாட்டவர்:</u> ஆந்திரனோவ் (உருசியா), எமனோ (கலிபோர்னியா), கமில் சுவலபில் (செக்), எம்.எஸ்.எச். தாம்சன் (இங்கிலாந்து), பிலியோசா (பிரான்சு), ஜான் மார் (இலண்டன்).

<u>பிறமாநிலத்தார்:</u> பி.சி. அலெக்சாந்தர், சுனிதி குமார் சாட்டர்ஜி, ஜேடி கொர்னீலியஸ்.

<u>இலங்கையர்:</u> சுவாமி விபுலானந்தர், கா.பொ. இரத்தினம், அரசரத்தினம், அருள்நந்தி, ஜெயதேவி வேலுப்பிள்ளை, F.X.C. நடராஜா, எச்.எஸ். டேவிட்.

<u>தமிழ்நாட்டவர்:</u> எம்.இரத்தினசாமி, இராஜாஜி, அ. சிதம்பரநாதன், ஆசுப்பையா, ரா.பி. சேதுப்பிள்ளை, தெ.பொ.மீ., மா.இராசமாணிக்கம், ஏ.சி. பால்நாடார், மு.வ., கோ. வன்மீகநாதன், சோமலெ,

மயிலை சீனி. வேங்கடசாமி, வ. சுப. மாணிக்கம், கே. கே. பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, ஜே. எம். சோமசுந்தரம்.

**கட்டுரைகள்**

தமிழ் பற்றி மேலைநாட்டார் அறிதல் (1:1)
திராவிடர்கள் யார்? (3:2)
சிந்து சமவெளி நாகரிகம்
தமிழர் மதச் சிந்தனை வளர்ச்சி (5:3)
பழங்காலத் தமிழகத்தில் கல்வி (1:4)
குறுந்தொகை தொகுப்புமுறை (7:4)
தென்னிந்தியாவில் தமிழும் சமத்கிருதமும் (4:4)
சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு (12:2,3)
முத்தொள்ளாயிரம் (9:4)
திராவிடர்களின் மூல இருப்பிடம் இலங்கை (1:1)
சிங்களர்களாக மாறிய தமிழர்கள் (1:2)
இலங்கையில் தமிழர் ஆட்சி (1:3)
திரிகோணமலை செப்புத் திருமேனிகள் (2:2)

**கட்டுரை வன்மை:** தம் இதழில் அறிவார்ந்த செறிவு மிகு சிறந்த கட்டுரைகளுக்கு இடம் தந்தார். தாமும் அவ்வாறே எழுதினார்; பிறரையும் எழுதத் தூண்டினார். ஏனெனில் தமிழர்கள், உணர்ச்சி வயப்பட்டவர்கள்; அதனாலேயே உயராது போனார்கள்.

அடிகளாரின் கட்டுரை வரைவு பற்றிய கருத்து வருமாறு: 1. தமிழ்ப்பற்று, உணர்ச்சியைத் தூண்டிவிடுமாறு அமையும் நிலையில் எழுதப்பெறும் கட்டுரைகள், அறிவு சார்ந்த நிலையில் ஆராயும் அறிஞர்க்கு ஏற்புடையன ஆகா என்பதுணரப்பட வேண்டும். 2. அறிவு சிறக்க உரிய சான்றாதாரங்களோடு தமிழின் சிறப்பினை, பண்பாட்டின் பெற்றியை எழுத்தில் ஏற்றும் போதுதான், அது உலக அறிஞர்களின் கவனிப்புக்குச் சென்றடையும் 3. உலக அறிஞர்கள் உயர்தமிழின் சிறப்பினை உணர்ந்து ஏற்றுக் கொண்டால்தான், வரலாற்றில் வண்டமிழுக்கு வாகான இடம் கிடைத்திடும்

**அடிகளார் கட்டுரைகள்:** கலைபயில் தெளிவு கரணியமாகத் தாம் வரைந்த கட்டுரைகள் அனைத்தும் அறிவியல் அணுகுமுறையில் அமைந்த அறிவுப் பெட்டகங்களாகவே

அமையுமாறு பார்த்துக் கொண்டார். இவ்விதழில் இவர் கட்டுரைகள் 30.

தமிழ் கற்பித்தல் 1954, 3:1

தமிழ்ப் பண்பாடு நின்று நிலைத்தல், 1952, 4:4

தென் கிழக்கு ஆசிய நாடுகளில், தமிழ்ப் பண்பாட்டுத் தாக்கம், 1955, 4:3

ஐரோப்பிய நூலகங்களில், தமிழ்க் கையெழுத்துப் படிகள் 1954, 3:3,4.

தமிழில் அச்சேறிய முதல் நூல்கள் 1958, 7:3.

இருபதாம் நூற்றாண்டில், வட்டார தேசியம், 1963, 10:1

இலங்கையில் மொழியுரிமை 1956, 5:3.

சென்னை நகர நாவலாசிரியர் (மு.வ.) 1963, 10:2

ராபி. சேதுப்பிள்ளை 1961, 9:3

திரு.வி.க. எழுத்துக்களில் இயற்கையும் இயல்பும் 1963, 10:4

தமிழ் இலக்கியவியலில் உள்ளறிதல் (Apperception), 1966, 12:2,3.

சங்க இலக்கியங்களில், மெய்ம்மை நிலை வளர்ச்சி, 1958, 7:1

இந்தியச் சிந்தனை இயலின் தொடக்க காலம் 6:1, 3.

இந்தியச் சிந்தனை இயலும் உரோமன் ஸ்டாயிக் வாதமும் 10:3

பகுப்பு: 1. அயலகத் தமிழர் 2. ஆராய்ச்சி 3. ஆட்சிமொழி 4. இதழியல் 5. இந்தியச் சிந்தனை 6. இலக்கியம் 7. இயற்கை 8. கல்வி 9. சுவடிகள் 10. தமிழறிஞர் 11. பண்பாடு என அடிகள் பல்வேறு தலைப்புகளில் துல்லியக் கருத்துக்களையும் நுண்ணிய சிந்தனைகளையும் நமக்குக் கொடையாகக் கொடுத்துள்ளார்.

வகுப்பு: அறிஞர் புலவோர், இலக்கியம், கலை, சமயம், தமிழியல், தற்கால இலக்கியம், பண்பாடு, மொழியியல், மொழி பெயர்ப்பு, வரலாறு, வெளிநாடு, பொது என்று அமைகின்றன.

செய்திப் பகுதி (News and Notes), தமிழியல் (Tamiliana), வாசகர்மடல் (Readers Forum), மேற்கோள் (Quotable quotes), நூல் திறனாய்வு, இரங்கல், கட்டுரைகள் என 7 பகுதிகள் கொண்டது இதழ்.

**பெயரமைதி:** அடிகளார் நல்ல பண்பாளர். தமிழ்ப் பண்பாட்டைப் பாரெங்கும் பரப்பியவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', என்ற உயரிய பண்பாட்டில் உள்ளம் பறிகொடுத்தவர். உலகெங்கணும் தமிழ்ப் பண்பாடே ஊடுருவி இருப்பது உணர்ந்தார். தூத்துக்குடியிலும் கொழும்பிலும் தமிழர் பண்பாட்டுக் கழகம் தோற்றியவர். எனவே தம் இதழுக்கும் 'தமிழ்ப் பண்பாடு' என்று பெயரும் இட்டார். பெயர்ப் பொருத்தம், உயிர்ப் பொருத்தம்.

## ஆசிரியர் குழு

1952-54 இல் அடிகளாரின் பொறுப்பில் அவரையே ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இதழ், 1955 முதல் தமிழ்க் கலை மன்றத்தின் சார்பில் வரவே, குழு அமைக்கப்பட்டது.

டாக்டர் சேவியர் தனிநாயகர் - முதன்மை ஆசிரியர். குழு: அருட்தந்தை ஏ.சிராக், அ. சிதம்பரநாதன், பேரா.எம்.எம்.கனி, கே.கே. பிள்ளை, டாக்டர் எஸ்.ஜி. மணவாள ராமானுஜம், தெ.பொ.மீ., பேரா.எஸ். உருத்திரபதி (பெங்களூர்), பேரா. பி.எம். சுந்தரம் (செகந்திராபாத்), வ.அய்.சுப்பிரமணியம், பேரா.பி. திருஞானசம்பந்தம், மு.வ.; ஆ. சுப்பையா ('63 முதல் இணை ஆசிரியர்), எஸ். சிங்காரவேலு ('66 முதல் துணை ஆசிரியர்), அருள்திரு இஞ்ஞாசி இருதயம் ('66-மேலாண்மை ஆசிரியர்).

**தமிழ்க் கலை மன்றம்:** இதழுக்கு உறுதுணையாக 1954 இல் சென்னையில் Academy of Tamil Culture தொடங்கப்பெற்றது. தலைவர் : நீதியரசர் எஸ். சோமசுந்தரம்; துணைத் தலைவர்கள் : ரா.பி. சேதுப்பிள்ளை, கருமுத்து தியாகராசர், ஏ.வி. இராமன், டாக்டர் அழகப்பச் செட்டியார், ஆ. சுப்பையா; செயலர்கள்: மு.வ. கே.கே. பிள்ளை; பொருளர்கள்: வி.எஸ். தியாகராச முதலியார், சி. அமிர்த கணேசன்.

**நின்று போனது:** உலகப் புகழ் பெற்ற இவ்விதழ், உலகப் பல்கலைக் கழகங்களிலெல்லாம் இடம் பெற்றது. தமிழ் வரலாற்றில் ஒரு பெரும் திருப்பு முனையாகத் திகழ்ந்த இந்த இதழ், பொருள் முட்டுப்பாடு, போற்றுவார் இன்மையால் 1966 இல் நின்று போயிற்று.

**இதழின் சிறப்பு:** இதழின் ஏற்றம் பற்றி அறிஞர்களும் வாசகர்களும், பாராட்டிப் போற்றலாயினர்; பிற இதழ்களும் ஏத்தின. இவை கொண்டே இதழின் அருமை அறியலாம்.

# அறிஞர் மதிப்பீடு

1. முத்திங்கள் ஏடான 'தமிழ்ப் பண்பாடு' இதழாசிரியராக இருந்து, நடாத்தி, அதன் மூலம், தமிழின் பெருமையைப் பரப்பினார்.

- பேரா. சு. வித்தியானந்தன்[8]
தலைவர், 4ஆம் உ.த.ஆ.மாநாடு.

2. தமிழ்ப் பண்பாடு இதழ், உயர்வான ஆய்வுக் கட்டுரைகளை ஏந்திவந்ததால், தமிழ் ஆய்வில் ஈடுபட்ட பல உலக அறிஞர்களின் ஆர்வத்தை அது தூண்டியது. வடமொழியை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, தாங்கள் செய்து வந்த இந்தியவியல் ஆய்வுகளில் எழுந்த முக்கிய தடைகளுக்கெல்லாம், திராவிட மொழியையும் பண்பாடுகளையும் ஆராய்வதன் மூலமே விடை காணமுடியும் என்பதை மேலை நாட்டு இந்தியவியல் அறிஞர்கள் தெளிவாக உணர்ந்தனர்.

-ஆ. சுப்பையா[9]
இணை ஆசிரியர், 'தமிழ்ப் பண்பாடு'.

3. உலக மக்கள் அனைவரும் தமிழ்ப் பண்பாட்டின் மேம்பாட்டையும் சிறப்பையும் தமிழ் இலக்கியத்தின் இனிமையையும் அறிய வேண்டும் என்பதற்காக அடிகளார், ஆங்கில ஏட்டினை உருவாக்கி, ஆசிரியராக நிலவினார். உலகப் பல்கலைக்கழகங்கட்கெல்லாம் அனுப்பித் தமிழின் புகழ் மணக்கப் பாடுபட்டார்.

- முனைவர் அந்தனிஜான் அழகரசன்[10]
தனிநாயகர் வரலாற்றாசிரியர்

4. உங்கள் காலாண்டிதழ், என்னை மிகவும் ஈர்த்துள்ளது; புதிய கருத்துவாயில்களைத் திறந்து வைத்துள்ளது.

- **J.W** கார்டெல் (ஹார்வர்டு பல்கலை நூலகர்)[11]

5. தமிழறியாத மக்களுக்கு, ஆங்கில மொழியின் வாயிலாகத் தமிழ்ப் பண்பாட்டினைப் பரப்பும் தங்கள் தொண்டைத் தொடர்வீர்கள் என நம்புவல். நான் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருந்த காலங்களில் மிகப்பழைய இந்திய இலக்கியங்கள் என்றாலே, சமஸ்கிருதம், பாலி, பிராகிருத இலக்கியங்கள் மட்டுமே என்று பலர் அறிந்திருக்கக் கண்டேன்!

- கே.பி. இராமசாமி, வியன்னா[12]

6. நான் எவ்வளவு காலமாக இந்தியக் கலைகளைப் பற்றியும் பல்லவர்காலச் சிற்பங்கள், சோழர்காலச் செப்புத் திருமேனிகள்

பற்றியும் அறியவேண்டுமென்று ஏங்கியிருந்தேன். அது இப்போது தீர்ந்துவிட்டது.

- கே. அம்புரோஸ், கனடா[13]

## இதழ்களின் கணிப்பு

1. தரக்குறைவான அச்சில் பல ஆய்விதழ்கள் வந்து கொண்டிருக்கிற நிலையில், 'தமிழ் கல்சர்' கவர்ச்சியான பதிப்பிலும் மிக உயர்ந்த அச்சிலும் வெளிவந்துளது. [14]

- Illustrated Weekly of India

2. தமிழ் இலக்கியத்தையும் பண்பாட்டையும் பயில்கின்ற மாணவர்களுக்கும் விரும்பிகளுக்கும் இந்தப் புதிய இதழ், நிறைய செய்திகளை வாரி வழங்குகிறது. மிக உயர்ந்த இதழாகிய 'தமிழ் அன்டிகுயரி' மறைந்த நிலையில், உண்மையான தேவையை இவ்விதழ் ஈடுசெய்கிறது.[15]

- Ceylon Daily News

3. மிக உயர்ந்த தமிழ்ப் பண்பாட்டினைப் போதிய அளவுக்கு யாரும் பரப்ப இல்லை என்ற குறையினை இவ்விதழ் நிறைவு செய்கிறது.[16]

- The Hindu

**பயன்:** ஓர் இதழின் பயன்பாட்டினை ஒட்டியே, அதன் பெருமை புரியவரும். 1. இதன் மூலமாகவே, கமில் சுவலபில், ழான் பிலியோசா போன்றோர், தமிழ் உலகினுக்கு அறிமுகமாயினர் என்பது உண்மை. 2. தமிழ் ஆய்வுத் துறையில் விடிவெள்ளியாக வலம் வந்து, உலக அரங்கில் தமிழுக்கு உரிய சிறப்பிடத்தைப் பெற்றுத்தர வகை செய்த இதழ்.[17] 3. இந்தியாவிலும் வெளிநாடு களிலும் வாழும், தமிழ் தெரியாத, தமிழரல்லாத பிற இன-மொழி-நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும், வெளிநாடுகளில் பல்லாண்டுகளாய்ப் பிரிந்து வாழ்வதால், தமிழை மறந்து போன தமிழர்களுக்கும் தமிழின் பெருமையை ஆங்கிலத்தின் வாயிலாக உணர்த்திய ஏடு.[18]

4. ஓரளவே தமிழ் தெரிந்த வெளிமாநில-நாட்டுத் தமிழர்களுக்கும் தமிழ் பயின்ற மொழியாளர்கட்கும் தமிழியலை அறிமுகப்படுத்தியது. 5. தமிழியல் குறித்து வெளிநாட்டாரின் தமிழியல் கருத்துக்கள்- ஆய்வு முடிவுகள் பற்றித் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் அறியவும், அவர்களின் தமிழ்ப் பணிகள், தமிழாராய்ச்சிகள் பற்றி வெளிநாட்டார் தெரியவும் உதவியது.

6. தனிநாயகர், நாடு இனம் மொழி தாண்டித் தமிழ்ப்பணி புரியத் துணை நின்றது. 7. தனிநாயகரின் புலமையும் திறமும் உலகறியச் செய்தது. 8. தமிழக அறிஞர்கள், தமிழியலை உலகுக்கு உணர்த்தவும், உலக அறிஞர்கள் தமிழியலில் தங்கள் கருத்துக்களைத் தமிழகத்துக்குத் தரவும், இவர்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளவும் உதவியது.[19] 9. பல பேராசிரியர்கள், தமிழில் மட்டுமே எழுதிக் கொண்டிருந்தவர்கள், இந்த இதழில் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கியதன் மூலம், தங்கள் புலமையை ஞாலம் அறியச் செய்தனர். 10. பல வெளிநாட்டு அறிஞர்களும், தமிழ் பற்றி ஆராய, ஆய்வுக்கட்டுரைகள் எழுத, அடிகளாரின் ஆங்கில இதழ் தூண்டுதலாகவும், கட்டுரை வெளியிடக் கருவியாகவும் இருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை.[20]

## ஆ. தமிழ் ஆராய்ச்சி இதழ் (Journal of Tamil Studies)

யாது கரணியத்தாலோ, 'தமிழ் கல்சர்' நின்று போன நிலையில், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது கூடிய அறிஞர்கள், புதியதோர் இதழினைத் தொடங்க முடிவெடுத்தனர். உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஏடாக- அரையாண்டு இதழாக, 'தமிழ் ஆராய்ச்சி இதழ்' 1969 ஏப்ரல் திங்களில் வெளிப் போந்தது. மூலவிசை அடிகளாரே.

**ஆசிரியர் குழு:** முதன்மை ஆசிரியர்: தனிநாயக அடிகள்; துணை முதன்மை ஆசிரியர்: வ.அய். சுப்பிரமணியம்; இணை ஆசிரியர் (ஒருங்கிணைப்பர்): ஆ. சுப்பையா; நூல் திறனாய்வு செய்தி ஆசிரியர்: பேரா. எஸ்.சிங்கார வேலு.

உலக நாடுகளில் நடைபெறும் தமிழ் ஆய்வுகளை இவ்விதழோடு தொடர்புபடுத்தும் முறையில், அவ்வப் பகுதிய அறிஞர்களிடமிருந்து கட்டுரை பெற்றுத் தரும் வகையில் குழுவில் இடம் பெற்றோர்:

டாக்டர் ஆர். இ. ஆஷர் (எடின்பரோ. ப.க.)

டாக்டர் எம். ஆந்திரனோவ் (அறிவியல் கழகம், உருசியா)

டாக்டர் ஆல்பர்ட் பி. பிராங்கிலின் (கான்சாஸ் ப.க., அமெரிக்கா)

டாக்டர் கே.எல். ஜானர்ட் (ஏசாலென் ப.க., செர்மனி)

டாக்டர் ஏ.ஜெயரத்தினம் (இலங்கைப் ப.க.)

டாக்டர் கமில் சுவலபில் (சார்ல்ஸ் ப.க., செக்)

**உருவம்:** இதழின் அளவு 24.5. செ.மீ. x 16.5 செ.மீ. மேலட்டை கனமான தாளாக இருந்தது. முன் அட்டையின் மேற்புற மையத்தில் வட்டம், அதன் நடுவே, தமிழ் மறை; அதன்மேல் உலக உருண்டை, அதன்மீது கோயில் கோபுரம். வட்டத்தைச் சுற்றி மேலே International Association of Tamil Research; கீழே Every Country is my country ; Every man is my Kinsman. இதுவே இதழின் இலச்சினை.

மையத்தில் Journal of Tamil Studies பெரிய கொட்டை எழுத்தில். கீழ் இடது ஓரத்தில் Volume ; வலது ஓரம் இதழ் Number. இரண்டின் இடையே Month . தொகுதி எண், உரோம எண்; இதழ் எண், அராபி எண். இதழ் விலை: உள்நாடு, தனி இதழ் உரூ. 12.50. ஆண்டுக் கட்டணம் ரூ.20.00. வெளிநாடு; தனிஇதழ் 18.75 (டாலர் 2.50). ஆண்டுக்கு ரூ.30 (4 டாலர்).

**உள்ளடக்கம்:** எடுத்ததும் அரைப்பக்க அளவில் This Journal: தமிழ் ஆய்வர்கள், அறிஞர்கள், ஆர்வலர்கள் இவ்விதழினை ஏற்றுப் புரக்க வேண்டும் என்ற ஆசிரியர் குழுவின் வேண்டுதல்.

முற்பகுதியில், கட்டுரைகள்; பிற்பகுதியில், நூல் திறனாய்வு, சிறப்புச் செய்திகள், செய்திகள், துணுக்குகள். பக்க அளவு முதல் நான்கு இதழ்களும் முறையே 323, 207, 221, 83= 934 பக்கங்கள். மூன்றாம் யாண்டு முதல் (1972,செப்) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இதழாக வெளிவந்தது.

முதலாண்டு இருஇதழ்களிலும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், இரண்டாமாண்டு இதழில், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பற்றிய விவரங்கள் (அவற்றின் அமைப்பு, நெறிமுறைகள், வரைவுகள், குழுக்கள் முதலியன) விரிவாகத் தரப்பட்டுள்ளன.

**கட்டுரைகள்:** தனிநாயகம் பொறுப்பில் வந்த ஈராண்டு நான்கு இதழ்களே இங்குக் கருதப்பெறுகின்றன. இவற்றில் வந்த கட்டுரைகள் 31. எழுதியோர் 31 பேர். வெளிநாட்டினர் 24, உள் நாட்டவர் 7.

இவ்விதழில் 3 கட்டுரைகளை அடிகளார் வரைந்துளார். Two decades of Tamil Studies 1969 (I:1. 1-19). Tamil Emigration to the Martinique 1969, Oct. ( I:2. 75-123). Tolkappiyam : The Earliest Record, 1972 Sep. (I.1 61-70).

## குறிப்புகள்

1. மா. சு. சம்பந்தன், தமிழ் இதழியல் வரலாறு, ப.30.
2. அ.மா. சாமி, தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி, ப.185.
3. Tamilian Antiquary. No.6. p.69.
4 Tamil Culture Vol. I No.1, p.4
5 Ibid Vol. I. No.1. p.8; Vol. I. No.1. p.5.
6. Dr Sunit Kumar Chatterji, The Vedic Age, p.101.
7. தனிநாயக அடிகளின் ஆசிரியவுரை, தமிழ் கல்சர், தொகுதி-1, எண்.1, ப. 8.
8. அந்தனி ஜான் அழகரசன், தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும், ப. 90.
9. அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகளார், ப. 95.
10. அந்தனி அழகரசன், ப. 90.
11. தமிழ் கல்சர், தொகுதி 2, இதழ் 1, ப. 4.
12. மேலது தொகுதி 2, இதழ் 3,4, ப. 216.
13. மேலது தொகுதி 2, இதழ் 3,4, ப. 220.
14. மேலது தொகுதி 2, இதழ் 1, ப. 4.
15. மேலது தொகுதி 2, இதழ் 1, ப. 5.
16. மேலது தொகுதி 2, இதழ் 1.
17. அமுதன் அடிகள், ப. 62, 108.
18. முனைவர் பா. இறையரசன், தனிநாயக அடிகளின் இதழியல் வழித் தமிழ்ப் பணி, பக். 84-85.
19. மேலது ப. 35.
20. அமுதன் அடிகள் ப. 100, 103.

# நாற்றங்கால்

தனிநாயகம் அடிகளாரின் நிலைத்த புகழுக்குக் காரணமாக அமைந்தது உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் நிறுவியதும் அதன் மூலம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடத்தியதுமே என்பது மிகையாகாது.[1]

**கால்கோள்:** 26ஆவது கீழ்த்தேயக் கலைகள் மாநாடு புது தில்லியில் 1964ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 6-10 நாட்களில் நடந்தது. இந்தியாவில் இத்தகு மாநாடு நிகழ்வது இதுவே முதன் முறையாகும்.[2] 15 நாடுகளினின்றும் அறிஞர் பெருமக்கள் போந்திருந்தனர்.

இந்த நல்ல தருணத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு, உலகத் தமிழ் ஆராய்ச்சிக்குழு ஒன்றினை உருவாக்க அடிகளார் அவாவினார். இத்திட்டம் பற்றி ஏற்கெனவே 26-7-1963 இல் கூடிய சென்னை மாநிலத் தமிழ் வெளியீட்டுக் கழகத்திலும் கூறியுள்ளார்; அதனைச் சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் மாண்பமை எம். பக்தவத்சலம் பெரிதும் வரவேற்றார்.

**அழைப்பு:** தனிநாயகரின் திட்டப்படி 7-1-1964 பகல் 12 மணிக்கு அறிஞர்களைக் கூடுமாறு தனிநாயகரும் வ.அய்.சுப்பிரமணியமும் கூட்டாகக் கையெழுத்திட்டு மாநாட்டுக் கூட்டத்துச் செயலர் மூலம் சுற்றறிக்கை விடுத்தனர். இக்கருத்தினையே, பலர் ஏற்றுக் கொள்ளவில்லை என்கிறார் வ. அய். சுப்பிரமணியம்!

ஓரிரு நாட்கள் இந்தத் திட்டத்தைப் பற்றிப் பிறரிடம் உசாவிய அடிகள், 'தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ள அறிஞர்களுக்கு இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஆர்வமோ அக்கறையோ இல்லை, உடன்பாடும் இல்லை' என்றார்.

அது போன்றே அழைப்பு அறிவிப்பில் இந்தியாவிலிருந்து போந்துள்ள தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் ஒப்பம் இட்டால் சிறப்பாக இருக்கும் என் ஸ்று உறுதியாக நினைத்திருந்தார்

அடிகளார். அதற்கும் மற்றவர்கள் ஊக்கமளிக்கவில்லை; அதனால் உளம்தளர்ந்து காணப்பட்டார் அடிகளார்![3]

## வருகைபுரிந்தோர்

இருவரின் அழைப்பினை ஏற்றுக் குழுமிய 26 அறிஞர்கள் வருமாறு:

தெ. பொ. மீ (அண்ணாமலைப் ப. க.).

ழான் பிலியோசா (பிரான்சுக் கல்லூரி, பாரிஸ்).

டாக்டர் மு. வ. (சென்னைப் ப. க.).

தாமஸ் பர்ரோ (ஆக்ஸ்போர்டு ப. க.).

எப். பி. ஜே. கியூப்பர் (லேடன் ப. க.).

டாக்டர் அ. சிதம்பரநாதன் (அகராதி, செ.ப.க.).

க. கணபதிப் பிள்ளை (இலங்கைப் ப.க.).

டாக்டர் வ. அய். சு. (கேரளப் ப. க.).

மொ. அ. துரையரங்கசாமி (மதுரைப் ப. க.).

கமில் சுவலபில் (சார்ல்ஸ் ப. க. ப்ராக்).

கா. பொ. இரத்தினம் (மலேயாப் ப. க).

கே. ஆறுமுகம் (தில்லிப் ப. க).

எஸ். சங்கரராஜுநாயுடு (இந்தி., செ. ப. க.).

சார்ல்ஸ் டி. பியுவெசி (ஹார்வர்டு ப. க.).

ஹெரால்டு எஸ். பவர்ஸ் (பென்சில்வேனியா. ப. க.).

டாக்டர். ஆர்.இ.ஆஷர் (இலண்டன் ப. க.).

ஏ.கே. இராமானுஜம் (சிகாகோ. ப. க.).

செல்வி வவுடே வில்லே (பாரிஸ் ப. க.).

கே. மகாதேவ சாஸ்திரி (வெங்கடேசுவராப் ப. க., திருப்பதி).

இரா. சண்முகம் (தில்லிப் ப. க.).

எம். ஆர். ஜம்புநாதன் (பம்பாய்).

சாலை இளந்திரையன் (தில்லி ப.க.).

கனக சவுந்தரி இளந்திரையன் (கல்லூரி, தில்லி).

இந்திரா பார்த்தசாரதி (தில்லிப் ப. க.).

மறைத்திரு. எஸ். இராசமாணிக்கம் (சவேரியார் கல்லூரி, பாளை).

மறைத்திரு சேவியர் தனிநாயகம் (மலேயாப் ப. க.).

கூட்டத்திற்குத் தெ. பொ. மீ. தலைமை ஏற்றார். கூட்டத்தின் குறிக்கோளைக் கூறிய அடிகளார், பன்னாட்டுத் தமிழாராய்ச்சி மன்றின் இன்றியமையாமையை முன்மொழிந்தார்; கமில் சுவலபில் வழிமொழிந்தார். மன்றம் தோன்றியது.

இம் மன்றம் எத்தகு செயலில் இறங்குகிறது; தமிழாராய்ச்சியின் விளை நிலம் எவ்வளவு விரிந்தது என்பன பற்றியெல்லாம் கலந்துரையாடலில், பேரா. ழான் பிலியோசா, பர்ரோ, கியூப்பர், கமில் சுவலபில், தெ.பொ.மீ போன்றோர் விவரித்தனர்.

தில்லிக் கீழ்த்திசை மாநாடு முடிந்ததும், சென்னையில் நடத்தத் திட்டமிட்ட உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற முடியாது போய்விட்ட சூழ்நிலையை விளக்கிய அடிகளார், இனி அம் மாநாட்டினை நடத்துவதை, மன்றம் தன் செயல் திட்டங்களில் ஒன்றாகக் கொள்ளலாம்; அதுவே அதன் நோக்கமுமாக அமையும் என எடுத்துரைத்தார். பின் மன்றத்தின் நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப் பெற்றனர்.

**செயற்குழு**

| | |
|---|---|
| தலைவர்: | ழான் பிலியோசா (பிரான்சு) |
| துணைத் தலைவர்கள்: | பர்ரோ (ஆக்ஸ்போர்டு ப. க.) |
| | எமனோ (பர்க்ளி ப. க.) |
| | கியூப்பர் (லேடன் ப. க.) |
| | தெ. பொ. மீ. (மதுரைப் ப. க.) |
| | மு. வ. (சென்னைப் ப. க.) |
| செயலர்கள்: | கமில் சுவலபில் (ப்ராக்) |
| | தனிநாயக அடிகள் (கோலாலம்பூர்) |

கோலாலம்பூர் உலகத் தமிழ் மாநாட்டின் முன் ஆ. சுப்பையா பொருளாளர்; மாநாட்டின் பின், எச். டபிள்யூ. தம்பையா, துணைத்தலைவர் ஆயினர்.

வ. அய். சுப்பிரமணியம் நன்றி நவிலக் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**யாரோ:** இங்கே, அனைவரும் அறியவும் வருங்கால உலகம் நன்கு தெரியவும் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும்.

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மூல முழுக் காரணர், தனிநாயக அடிகளார் என்பது உலகறிந்த உண்மை. அங்ஙனமிருக்க, இலங்கைத் தமிழறிஞர் கா.பொ. இரத்தினம் அவர்களும், தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சாலை. இளந்திரையன் அவர்களும், மன்றத் தோற்றத்திற்கு மூலவர்கள் தாங்களே என்பது போல எழுதியுள்ளனர்.[4]

இதனை அமுதன் அடிகள், தமது தனிநாயக அடிகள் பற்றிய வரலாற்றுப் பெரு நூலில் 'அறிஞர் கண்ட ஆராய்ச்சி மன்றம்' என்ற 5ஆவது கட்டுரையில் அலசி ஆய்ந்து, அவ்விருவர் கூற்றும் 'ஆதாரமற்றது என்றே நாம் தள்ள வேண்டியுள்ளது. அவர்கள் எழுதியிருப்பன, உண்மையென ஏற்றுக் கொள்ள இயலாமற்போகின்றது' என அறுதியிட்டுக் கூறிவிட்டார்.[5] எனவே மன்றின் (IATR) தோற்றுநர் அடிகளாரே என்பதில் அசையா நம்பிக்கை கொள்வோம், அமைதி பெறுவோம்.

**வித்து:** தமிழியல் தெரிந்த அனைவரும், பன்னாட்டு அமைப்பாக இணைந்து செயற்படுதல் பற்றிய சிந்தனைக் கரு, 1958-62க்கு இடைப்பட்ட கால கட்டத்தில், தனிநாயகர், வ.அய்.சுப்பிரமணியம், கமில் சுவலபில் ஆகிய மூவர்க்கும் இடையே நிகழ்ந்து வந்த கடிதப் போக்குவரத்தில் அரும்பி மொட்டாகிப் போதாகி, 1964ஆம் ஆண்டு அனைத்துலக ஆராய்ச்சி மன்றமாக மலர்ந்தமை அறிகிறோம்.[6]

## தந்தையும் தாயும்

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஞானத் தந்தை தனிநாயகம் அடிகளாரே. - **கமில் சுவலபில்.**[7]

மன்றத்தின் தாபகர், தனி நாயகம் அடிகள்; இம் மன்றம் அவரின் குழந்தை. - **டாக்டர் சு. வித்தியானந்தன்.**[8]

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தந்தையும் தாயும் அவரேயாவார். இந்த மன்றத்தை வளர்ப்பதற்கு, அவர் அயராமலும் தளராமலும் உழைத்தார். - **கா. பொ. இரத்தினம்.**[9]

இந்த உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் ஞானப் பிதா, ஞானகுரு, அடிகளார் தாம்.

- தமிழக முதல்வர் **எம். பக்தவத்சலம்.**[10]

## நோக்கமும் கொள்கையும்

சங்க இலக்கியத்திற் காணப்பெறும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கையையும், இந்த நூற்றாண்டில் பாரதியார் பகர்ந்த, 'திறமான புலமையெனில், வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' எனும் கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டிருப்பது, அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம். இந்த மன்றம் ஆற்றிவரும் தொண்டுகள் பல. உலகில் உள்ள தமிழ் அறிஞர் பல்லோரையும் ஒன்று சேர்ப்பதும், அவர்களை அறிமுகப் படுத்துவதும், அவர்களின் ஆராய்ச்சிகளை வெளிப்படுத்துவதும் இம் மன்றத்தின் ஆன்ற பணிகள் ஆகும்.

இம்மன்றம் ஓர் ஆராய்ச்சி மன்றம்; அதுவும் பல்கலைக் கழக நிலையில் உள்ள ஆராய்ச்சிப் பெருமன்றம். உலகில் எங்கு தமிழ்த்துறைகளில் ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றதோ, அங்குள்ள அறிஞரை ஒன்று சேர்ப்பது, இம் மன்றின் முதல் நோக்கம்.

**விரிவு:** மேலும் இம் மன்றிற்குப் பொருந்திய ஆராய்ச்சி, இலக்கணம் இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி மட்டுமல்ல; தமிழ்த்துறைகளோடு தொடர்புள்ள எல்லாத் துறைகளையும் ஆராய்ச்சிக் களமாகக் கொண்ட தமிழியல் ஆராய்ச்சியே (TAMILIANA) இம் மன்றத்திற்கு உரியது.

தமிழ் மக்களுடைய வரலாறு, தமிழ் மக்களுடைய மனிதவியல், தமிழ் மக்களுடைய சமயங்கள், தத்துவங்கள், தமிழ் மக்கள் வாழும் நாடுகள், தமிழ் மக்கள் பிற இனத்தாரோடு கொண்ட தொடர்புகள், தமிழர் பண்பாடு, தமிழ்க் கலைகள், தமிழ் மொழியியல் இன்னோரன்ன திணைக் களங்களில் நிகழும் ஆராய்ச்சி எல்லாம், தமிழ் ஆராய்ச்சியாம்.

இத்துறைகளில் ஈடுபடும் அறிஞர் சிலர், நன்கு தமிழைப் பேசவும் எழுதவும் அறிந்திலரெனினும், வரலாற்று அடிப்படையிலும், மொழியியல் முறையிலும், ஒப்பியல் வகையிலும் அவர்கள் ஆற்றி வரும் தொண்டோ அரியது, பெரிது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலும் பர்க்லி பல்கலைக்கழகத்திலும் உள்ள பேராசிரியர்கள் முறையே பர்ரோவும், எமனோவும், தமிழில் உரையாடும் ஆற்றல் பெற்றிலர்; ஆயினும் அவர்கள் பதிப்பித்த 'திராவிட மொழிகளின் அகர வரிசை' எத்துணைச் சிறந்தது? இப்படி உலகம் அறிய வேண்டும்

என்று ஆங்கிலத்தில் வெளியிடப்படும் ஆராய்ச்சி, ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டே வருகின்றது. ஆதலால் நம்மவர்களும் தங்கள் ஆராய்ச்சியை ஆங்கிலத்தில் வெளியிடுதற்கு உரிய ஏது, அதனால் உலகம் அறிய வேண்டும் என்பதேயாகும்.

To encourage and to coordinate the efforts of individuals or small Institutions, scattered throughout the world, very often isolated but sharing a common interest in Tamil - The Aim of I.A.T.R.[11]

**பதிவு:** இம்மன்றத் தோற்றம், நோக்கம், செயற்பாடு பற்றிய விளக்கம் அறிய விழைவோர், 'தமிழ் கல்சர்' இதழ் தொகுதி 1. (1952), பக். 320; தொகுதி 4 (1955) பக். 99 பார்த்தறியலாம்.

**அடிகளாரின் பின்:** மன்றம் முளைத்த நாள் முதல் தம் இறுதி மூச்சு வரை, அதன் பொதுச் செயலராகச் செயற்பட்ட தனிநாயகர், மன்றத்தின் முதுகெலும்பாக, மூலவிசையாக, உயிர் மூச்சாகச் செயற்பட்டார். அவரின் மறைவின் பின், மன்றச் செயற்பாடுகளில் தளர்ச்சி - தொய்வு ஏற்பட்டது உண்மையே.[12] இப்போது அம்மன்றம் எங்கே உளது? எப்படிச் செயற்படுகிறது என்பது யாம் அறியோம்.

அடிகளார் இருந்த போது அவர் எண்ணியதை முடிக்கும் ஆ. சுப்பையா, எள் என்னும் முன்னே எண்ணெய் எனச் செயற்பட்டார். இருவரும் இரட்டையர் போல் இயங்கி மன்றத்தை உயிர்ப்புடன் இயக்கினர். அப்படியொரு (I.O.B) சுப்பையா, எப்போது கிடைப்பாரோ?

அடிகளாருக்குப் பின், கீழை மேலைத் தமிழறிஞர்களை ஈர்த்துப் பிணைத்து அரவணைத்து இயக்கும் ஆளுமை சான்ற ஒரு பேரறிஞர், பெருந் தொண்டர் அமையவில்லை. உடையவர் இல்லாவிடில், எதிலும் எதுவும் ஒரு முழம் கட்டை தானே!

## குறிப்புகள்

1. அமுதன் அடிகள்: தனிநாயக அடிகளார், ப. 57.
2. டாக்டர் வே. அந்தனிஜான் அழகரசன், தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும், ப. 64.
3. TAMILARAM, V.I.S., His Long - lasting Revolution in Tamil studies, p. 43.

   அமுதன் அடிகள் நூல். வ. அய். சு. வின் 26 பக்க முகப்புக் கட்டுரை, பக். xii - iii.

4. தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர், ப. 49, 71, 90-91.

   கா. பொ. இரத்தினம், தமிழ் உணர்ச்சி, பக். 72-73.

5. அமுதன் அடிகள், பக். 57-62.

6. மேலது, ப. 63.

7. Tamilaram, The spiritual father of the IATR, p. 41.

8. அருள்திரு தனிநாயக அடிகளார் நினைவு மலர், ப. 44.

9. தவத்திரு தனிநாயக அடிகள் மாட்சி நயப்பு மலர், ப. 46.

10. Proceedings of the first International conference, Kuala Lumpur, P. 883.

11. அந்தனி அழகரசன், பக். 69-70.

12. அமுதன் அடிகள், ப. 68.

# உலகெலாம் தமிழ் முழக்கம்

தனிநாயக அடிகளாரின் தமிழ்ப்பணிகளிலேயே தலையாயது-நிலையாயது-உலையாதது, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடே. அடிகளாரின் அருந்தமிழ்ப் பெரும்பணிகளின் மகுடமாக- மணிமுடியாக அமைந்தது அது. அடிகளாரை உலகத் தமிழர் யாவரும் உச்சிமேல் வைத்து, மெச்சும் வகையில், அடிகளாரின் தமிழ்ப் பணியின் உச்சக் கட்டக் கொடுமுடி அதுவாகும்.

## கனவு

உலகத் தமிழ் அறிஞர்கள் யாவரையும் ஒன்று கூட்டி, ஒருபெரும் மாநாட்டினை எடுத்திட வேண்டும் என்பது, தனிநாயகரின் தணியாத தனித் தாகம்; நீண்ட நாளைய நினைப்பு-கனவு-கனல்.

இதோ காலம் கனிந்து விட்டது,
இறையரசு நெருங்கிவிட்டது

என்று இயேசு பெருமான் நற்செய்தி' நவிலுமாப் போலே, உலக அரங்கினில் ஒண்டமிழுக்கு ஒரு தனிஇடம்-உயர்விடம் கிடைத்திட, காலத்தையும் தருணத்தையும் நிகழிடத்தையும் நோக்கிக் காத்திருந்தார் நாயகம் அவர்கள்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறப்பாட்டுப் பெரும் புலவன் பூங்குன்றனாரின் உள்ளுணர்வை - உயர் தமிழ்ப் பாங்கினைத் தம் மனநிலையாக மாற்றிக் கொண்டு, ஏற்றுக் கொண்டு, இன்றமிழுக்கு ஓர் உலக விழா எடுத்திடக் காத்துக் கிடந்தார் அடிகள்.

உலகத் தமிழறிஞர்களை ஒருங்கிணைக்கவும் தமிழ் ஆராய்ச்சியினை ஒருமுகப்படுத்தவும் நோற்றுக் கொண்டிருந்தார். 'தமிழ் கல்சர்' இதழினைத் தோற்றுவித்தமைக்குக் கூட ஏது இதுவே என்னலாம். அவ்விதழ் மூலம் உலக அறிஞர்களையும்,

உலகப் பல்கலைக்கழகங்களையும் ஞாலத் தமிழ் மாநாட்டிற்கு ஏற்ப அணியமாகச் சமைத்து வைத்தார், கனிந்திடச் செய்திருந்தார்.

## மன்றப் பணி

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயல் திட்டங்களில் முதன்மையானது, உலகத் தமிழ் மாநாடு கூட்டுவதே என மன்றின் தொடக்கக் கூட்டத்திலேயே அடிகளார் அறுதியிட்டார்.[2]

## ஏற்பாடு

புதுதில்லியில் பன்னாட்டுத் தமிழாய்வு மன்றம் தோற்றியநாள் தொடங்கித் தனிநாயகர், முதல்மாநாட்டினை நடத்துதற்காகப் பம்பரம்போல் சுழன்று சுழன்று பணியாற்றினார். மாநாடு நடத்துவது பற்றிப் பன்னாடுகட்குப் பயணமானார். பல நாட்டுப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களைச் சந்தித்தார்; அரசியல் தலைவர் பலரோடு உரையாடினார். தக்காருடன் தொடர்பு கொண்டார். எங்கே நடத்துவது? எப்போது நிகழ்த்துவது? யார் யாரை அழைப்பது? எவரைக் கொண்டு தொடங்குவது? யாரைத் திறந்து வைக்கச் செய்யலாம்? என்றெல்லாம் எப்போதும் முப்போதும் சிந்தனையில் மூழ்கினார். இப்படி இரண்டாண்டுகள் உருண்டோடின.

If you see a great End, Be sure of a good Beginning என அரவிந்தர் அறிவித்தவாறு, முதல் மாநாடு முழுமையாகவும் நிறைவாகவும் நடந்தேற வேண்டுமே என்ற தவிப்பில்-துடிப்பில், திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தார்.[3]

## நீண்டநாள் நினைவு

1961இல் அடிகளார் மலாய்ப் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராகப் பொறுப்பேற்ற ஓரிருநாளில், பேரா.எல்லீசர் இல்லத்திற்குச் சென்றார். அங்கு, தேசியக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலர் வி. செல்வநாயகம் அவர்களைக் கண்டு அளவளாவலின் ஊடே, 'கோலாலம்பூரில், முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடத்த முடியுமா?' என வினவினாராம்.

இது முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு வித்து இட்ட பேச்சு போன்று அமைந்திருந்தது. தமிழாராய்ச்சி மாநாடு நடத்த வேண்டும் என்ற நினைவு, அடிகளாரின் ஆழ் மனத்திலே

நீண்டநெடுங்காலமாக இருந்த ஒரு சிந்தனையாகும் என்பதை அடிகளாரின் இக்கூற்றின் மூலம் நாம் ஊகிக்கலாம்- உணரலாம்.

'ஓ, நடத்தலாமே' என நவின்று, நம்பிக்கையையும் தெம்பையும் தந்தார் செல்வ நாயகம் (இதன் பின்னர் மூன்றாண்டு கழித்தே 1964இல் தில்லிக் கீழைத்தேசிய அறிஞர் மாநாட்டில் கலந்து கொண்டார்).[4]

1962 ஆகஸ்டு 12 ஆம் நாள் தமிழகத்தில் வைக்க எண்ணியிருந்த எண்ணம் நிறைவேறாத நிலையில், மாநாட்டை எங்கே வைப்பது என ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த போது, வி. செல்வநாயகம் தம் இல்லத்தில் நடந்த ஒரு கூட்டத்தில், மலேயாவில் தமிழ்க் கல்வியின் முன்னேற்றம் குறித்துச் சில கருத்துப் பரிமாற்றம் செய்வதற்காக அடிகளாரை அழைத் திருந்தார்.

அப்போது, 'தேசியக்கல்வி மேம்பாட்டுச் சங்கத்தின்' தலைவர் வி. மாணிக்கவாசகம், மலேசியாவில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்துவது பற்றிய கருத்தைப் பெரிதும் வரவேற்றார். மலாய்ப் பல்கலைக்கழகம் மாநாட்டைக் கூட்டுதற்கு முயற்சி மேற்கொண்டால், தேசியக் கல்வி மேம்பாட்டுச் சங்கம் அம் முயற்சியைப் போற்றி நிதி உதவி செய்யும் என்றும் உறுதிமொழி கொடுத்தார்.[5]

1963 ஆகஸ்டு 17 தமிழ் வெளியீட்டுக் கழகக் கூட்டம். அடுத்த ஆண்டு சனவரி 11,12 நாட்களில் சென்னையில் ஓர் உலகத் தமிழ் மாநாடு நடத்த வேண்டும் என்றும், இயலுமாயின் அம் மாநாட்டிற்கு இந்தியக் குடியரசின் தலைவர் டாக்டர் எஸ்.இராதாகிருட்டிணன் அவர்களைத் தலைமை ஏற்க அழைப்பது எனவும் தனிநாயகர் ஒரு தீர்மானத்தைக் கொணர்ந்தார். அதனைத் தமிழ் வெளியீட்டுக் கழகம் ஏற்றுப் போற்றியது.[6]

**கால்கோள்:** உலகத்தமிழ் மாநாட்டினை மூன்றாண்டுகட்கு ஒரு முறை கூட்டுவது என முன்னம் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இத்தகு ஏற்றமிகு தோற்றமிகு மாநாட்டினை, முதலில் தாயகமாம் தமிழகத்தில் கூட்டுவதுதான் சிறப்பாகும்; முறையாகும்; பொருத்தமும் ஆகும் என அடிகளார் எண்ணினார். இது பற்றித் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத் தலைவர் டார்க்டர் மு. வரதராசனாருக்கு விடுத்த குறிப்பில் கூறியிருந்தார்.[7]

முயற்சி: மாநாட்டினை மற்ற இடங்களில் தொடங்குவதை விட, முதலில் தாய்த் தமிழகத்தில் பிள்ளையார் சுழி இடுவதே பொருத்தம் எனக் கருதிய அடிகளாரின் கருத்து பெருமைக்குரியது.

அந்த நல்லெண்ணத்தின்படி, 27.10.1961 அன்று பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களும் அடிகளாரும் கூட்டாக ஒப்பமிட்டு, சென்னை மாநிலக் கல்வி அமைச்சரும் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் தலைவருமான மாண்பமை சி. சுப்பிரமணியம் அவர்கட்கு மடல் விடுத்தனர். அதில் 1962 பிப்ரவரி அல்லது மார்ச்சுத் திங்களில், உலகத் தமிழ் மாநாடு கூட்டப் பெறுவது ஏற்றது எனச் சுட்டிக்காட்டி இருந்தனர். இது செயற்பாட்டுக்கு வருமுன், சி.சு. அவர்கள், மைய அரசின் உணவு அமைச்சராகப் பொறுப்பேற்கத் தில்லி சென்றுவிட்டார், என்றாலும் முயற்சி தொடர்ந்தது.[8]

26-7-1963 சென்னை மாநிலத் தமிழ் வெளியீட்டுக் கழகக் கூட்டம். தில்லியில் 1964 சனவரியில் கீழ்த்திசைக் கலைகள் மாநாடு கூடுகிறது; உலகத் தமிழறிஞர்கள் ஒன்று கூடுவர். இத்தருணத்தைப் பயன்படுத்தி உலகத் தமிழ் ஆராய்ச்சிக் குழு ஒன்றினை நிறுவிடவேண்டும். அதற்குரிய திட்டம் இதோ என அடிகளார் வேண்டிக்கொண்டார். சென்னைக் கல்வி அமைச்சர் எம். பக்தவத்சலம் (கல்வி அமைச்சர் சி.சு. மைய அரசுக்குப் போய்விட்டதால், பக்தவத்சலம் கல்வி அமைச்சர்), இத்திட்டத்தைப் பெரிதும் வரவேற்றார்.[9]

1963. சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகக்கூட்டம். முதலமைச்சர் எம் பக்தவத்சலம் (காமராசர் பதவி விலகக் கல்வி அமைச்சர், முதலமைச்சரான சமயம்) தலைமை. முதல் மாநாட்டினைச் சென்னையில் நடத்துவதுதான் சிறப்பு என அடிகளார் முன்மொழிந்தபோது, முதலமைச்சரும் பிறரும் நன்றென வரவேற்றனர்.[10]

அடிகளார் இது தொடர்பாகச் செயன்முறைப்படுத்த தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றுடன் தொடர்பு கொண்டார்; மன்றமும் மைய அரசின் பண்பாட்டுத் துறை அமைச்சகத்துடனும் தில்லிக் கீழ்த்திசை கலைகள் மாநாட்டு அமைப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டது.

இதன்படி உலகத் தமிழ் மாநாட்டினை, மூன்று அமர்வுகளாக மூவிடங்களில் அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

| காலம் | இடம் | பொருள் |
|---|---|---|
| 1964 சனவரி 13,14 முதல் அமர்வு | சென்னையில் | தமிழ் ஆய்வு, தமிழ் வரலாறு |
| 1964 சனவரி 15 இரண்டாம் அமர்வு | அண்ணாமலைநகர் | |
| 1964 சனவரி 17 மூன்றாம் அமர்வு | மதுரையில் | |

தில்லி மாநாட்டுத் தெரிவாளர்கள் சென்னை போந்ததும், அவர்கட்குரிய உணவு, உறையுள், போக்குவரத்து முதலாய செலவுகளைச் சென்னை அரசின் வெளியீட்டுத்துறை பொறுப் பேற்பது என்பது முடிவு.[11]

## நடைபெறாமைக்கு ஏது

இத்துணை ஏற்பாடுகட்குப் பின்னரும் தமிழகத்தில் நடைபெறமுடியாது போனது வருத்தத்துக்குரியதே. அதற்குரிய காரணிகள் பல. சில: 1. தில்லி மாநாட்டுப் பேராளர்கள் சனவரி 8-12 வரை 5 நாட்கள் தொடர்ந்து இந்தியாவில் தங்க இயலாமற் போனது. 2. இந்திய எல்லையில் தொல்லைகள், படையெடுப்பு, இன்னபிற காரணிகளால் சென்னையில் நடைபெற முடியாது போனது.[12]

## 1. மலேயாவில் மாநாடு (1966)

தமிழக அரசின் மூலம் சென்னையில் நடத்தும் முயற்சி தோல்வியுறவே, இனி உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே, மாநாட்டினை நடத்தும் மூல விசையாக முதுகெலும்பாக அமையவேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. அதன்படி 30.10.1964இல் மன்ற உறுப்பினர்கட்குச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. 1966 மார்ச்சுத் திங்களில் 20-24 நாட்களுக்கிடையில் மலாயாப் பல்கலையில் முதல் மாநாட்டினை நடத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. பின் உறுப்பினர்களின் வசதிக்கு ஏற்ப ஏப்ரல் 17-23களில் நடத்துவது என்றும், இலக்கியக் கொள்கை, மொழியியல், மொழிபெயர்ப்பு,

சமூகவரலாறு, தென்கிழக்காசியப் பண்பாடு போன்ற பொருள்களில் ஆய்வுக் கட்டுரை அனுப்பலாம் எனவும் அறிவிக்கப்பட்டது.

## அமைப்புக்குழு

தலைவர் : டத்தோ வீ. தி. சம்பந்தம்
துணைத் தலைவர் : அருட்தந்தை தனிநாயகம் அடிகள்
பொதுச் செயலர்: வி. செல்வ நாயகம்
உறுப்பினர்கள்: அமைச்சர் வெ. மாணிக்க வாசகம், முருகு சுப்பிரமணியம், தமிழவேள் கோ. சாரங்கபாணி.

உலகத் தமிழாராய்ச்சி மன்றம், மலாயாப் பல்கலையின் இந்தியத் துறை, தேசியக் கல்வி வளர்ச்சி மன்றம் மூன்றும் ஒன்றி இம்மாநாட்டினை நடத்தின.

*நிதி:* வி.தி. சம்பந்தம், வெ.மாணிக்க வாசகர், வி. செல்வ நாயகம், அடிகளார் பெருமுயற்சியால் 2,10,000 டாலர்கள் திரட்டப் பட்டன.[13] பல்கலைக் கழக இந்தியத் துறையும் கலைநிகழ்ச்சிகள் மூலம் நிதிதிரட்டியது. பள்ளி மாணவர்கள் கூட ஐந்து காசு பத்துக்காசுகள் என 50 காசுகள் வரை கொடுத்து மகிழ்ந்தனர். மலேசியா முழுதும் கிளைகள் அமைத்து, அடிகளார் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, 'பேரன்பு கொண்டோரே! பெரியோரே ! பைந்தமிழ் மாநாட்டிற்கு, நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்' எனத் துளித் துளியாகப் பொருள்குவித்தார். தொழிலாளர்துறை அமைச்சரும் மாநாட்டு நிதிக்குழுத் தலைவருமான மாண்பமை வெ. மாணிக்க வாசகர், 'மலேசியரே, பைந்தமிழ் பேசுவோரே, தமிழ் ஆர்வலரே, அக்கறை கொண்டோரே, அள்ளிவழங்குங்கள்' என அறை கூவல் விடுத்துச் செயற்பாட்டின் உயிர் நாடியான நிதியினைத் திரட்டினார்.

**ஏற்பாடு பற்றி:** அடிகளின் அடிநாதம்: 'இக்கருத்தரங்கு, ஒருவர் இருவருடைய செயல் என்று எண்ணுவது, தவறாகும். பல்கலைக் கழகத்தின் தூண்டுதல், சென்னைக் குழுவினரின் துலங்கல், திருவாளர் ஆ. சுப்பையா அவர்கள் 15 ஆண்டுகளாக வள்ளல் தன்மையோடு வண்டமிழ் ஓம்ப வேண்டும் என்ற வேணவாவில் ஆற்றி வரும் அரும்பணி, என் நண்பர்கள் சுவலபில், சுப்பிரமணியம் போன்றோரின் போற்றுதல், ஈழத்தில் உள்ளோரின் எழுச்சி, இந்தியத் துறை ஆசிரியர்கள்

மாணாக்கர்களின் ஒருபெரும் ஆற்றலும் உறுதுணையும், மலை நாட்டுக் குழுவினரின் மனமுவந்த திருத்தொண்டு இவையே இக் கருத்தரங்கின் ஏற்பாடுகள் இனிது அமையக் காரணிகள் ஆகும்'. மக்களின் மிகப்பெரிய ஆதரவும் தூதரகங்களின் தோன்றாத்துணையும் அடிகளார்க்குத் தூண்கள் ஆயின.[14]

**மலேசியாவின் பேறு:** தாய்த்தமிழகம் இருக்க, தமிழ் வழங்கும் நாடுகள் பல இருக்க, தமிழர் வாழும் நாடுகள் பல இருக்க, மனங்கவர் மலேசியாவே மாத்தமிழின் முதல் மாநாடு நடத்தும் முதல் நல் வாய்ப்பினைப் பெற்றது. 1966 ஏப்ரல் திங்கள் 16-23 வரை, மலாயாப் பல்கலை வளாகத்தில் மாநாடு கூடியது.

**வரலாறு காணாத மாநாடு:** கலந்துகொண்ட நாடுகள் 22, பங்கு பெற்ற பேராளர்கள் 132, பார்வையாளர்கள் 40. 1500 ஆண்டுகட்குப்பின் தென்கிழக்கு ஆசியா, தெகி. ஆசிய நாடுகளின் பண்பாடும் வரலாறும், இலக்கியமும் சமுதாயமும், சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம், சங்க இலக்கியத் திறனாய்வு, தற்காலத் தமிழ்ச் சமுதாயம், தற்காலத் தமிழ் இலக்கியமும், கலையும், தொன்மை இயலும், இசையும் நடனமும், திராவிட ஒப்பியல் திறனாய்வு எனப் பல்வேறு தலைப்புகளில் 146 எழுத்துரைகள்.

**வரவேற்பு:** தபால் தந்தி, மராமத்துத்துறை அமைச்சர் டத்தோ வீ.தி. சம்பந்தம் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டு மூலவர் தனிநாயகரையும், மன்றத்தலைவர் ழான் பிலியோசாவையும், கோலாலம்பூரில் மாநாடு நடைபெற அடிகளாரோடு துணைநின்ற அத்துணைப்பேரையும் போற்றி, அமைச்சர் வி.மாணிக்க வாசகத்தையும் செயலர் வி.செல்வநாயகத்தையும் பாராட்டினார்.

**திறப்பு:** மாநாட்டினைத் தொடங்கி வைத்து உரையாற்றியவர் மலேசியப் பிரதமர் மக்கள் தலைவர் ஐனாப் துங்கு அப்துல் ரகுமான். 'எமது பல்கலைக்கழக இந்தியத்துறை, பன்மொழிப் புலமையாளரை, பரந்துவிரிந்த மனப்பான்மை கொண்ட ஒரு பேரறிஞரைத் தலைவராகப் பெற்றுள்ளது பல்கலையின் பேறாகும். இங்கு நான் குறிப்பிடுவது டாக்டர் அருட்தந்தை தனிநாயக அடிகளைத்தான். அவருடைய அரிய தலைமைதான், இந்த மாநாடு இங்குக் கூடுதற்கு வழி கோலிற்று. தமிழின் தொன்மை, தொன்மையானது. மலாய் நாட்டில் தமிழ் மக்கள், மகிழ்வுடன் மிகச் சிறப்பாக வாழ்ந்துவருகிறார்கள்' எனக் குறிப்பிட்டார்.

***தமிழக முதல்வர்:*** எம். பக்தவத்சலம், மலாயாப் பல்கலைக்கழகமும் தேசியக் கல்வி மேம்பாட்டு மன்றமும் மாநாட்டை முன்னின்று நடத்துவது கண்டு அகம் மிக மகிழ்கிறேன். அருட்தந்தை தனிநாயகம் அவர்களின் விடாமுயற்சியும் பேருழைப்புமே இன்றைய நாளை நனவாக்கியுள்ளது என்றார்.[15]

**வெளியீடுகள்:** உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், உலகளாவிய அளவில் தமிழ் ஆய்வுகளை ஊக்குவித்தல், ஒருமுகப்படுத்தல், ஆய்வு நூல்களை வெளியிடுதல் போன்ற நோக்கிற்கேற்ப நிலையான பணியாக நூல்கள் சில வெளியிட்டது.[16]

1. M. Andronov : Materials for Bibliography of Dravidian Linguistics
2. S. Arasaratnam : Indian Festivals in Malaya
3. Rama Subbiah : A Lexical study of Tamil Dialects in Lower Perak
4. S. Singaravelu : Social life of the Tamil, the classical pd.
5. Xaviour S. Thaninayagam (Ed.): A Reference Guide to Tamil Studies: Books
6. Xaviour S. Thaninayagam & Edgar C. Knowlton Jr. (Ed) : Antao De Proenca : Tamil-Portuguese Dictionary

அடிகளாரின் தலைமையில் பேராசிரியர்கள் வ.அய். சுப்பிரமணியம், எஸ். அரசரத்தினம், ஆர்.இ. ஆஷர், லெ.ப.கரு இராமநாதன் செட்டியார், இராம சுப்பையா, எஸ். சிங்காரவேலு ஆகியோர் கொண்ட குழு, மாநாட்டு உரைகளையும், வழங்கப்பெற்ற கட்டுரைகளையும் தொகுத்து வெளியிட்டது.

## மாநாடு பற்றிய மதிப்பீடுகள்

உலகத் தமிழ் மாநாடுகள் இனி எங்ஙனம் நடத்தப் பெறவேண்டும் என்பதற்கு மலேசிய மாநாட்டின் மூலம், அடிகளார் வழிகாட்டி விட்டார், பாட்டை போட்டுவிட்டார்.

- டாக்டர் ஆர்.இ. ஆஷர்.[17]

அன்னிய மண்ணில் இம்முதல் மாநாட்டினை அருமையாக நடத்திக்காட்டியது அடிகளாரின் துணிவையும்

தன்னம்பிக்கையையும் நன்னம்பிக்கையையும் காட்டுகின்றன. தமிழ் தழைத்தோங்கும் தாய்த்தமிழகத்திலோ, தன் நாடாகிய இலங்கையிலோ தொடங்காமல், மலேசிய மண்ணில் தொடங்கியது அவரின் அசையா உறுதி, தளரா முயற்சியைக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட ஞாலம் தழுவிய ஒருபெரும் மாநாட்டினை அடிகளாரால்தான் கூட்ட முடியும்.

- **புலவர் சேதுராமன்** 'தமிழ் நேசன்'.

முதல் மாநாட்டினை நிறைவாக நடத்திக் காட்டியதன் மூலம், ஏனைய வரும் மாநாடுகட்கெல்லாம் ஒரு முன்னோடியாக விளங்குகிறார். இம்மாநாட்டின் வாயிலாகத் தமிழ் தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்தவும், அறிஞர்கள் அடிக்கடி சந்தித்து ஆய்வு நடத்தவும் சரியான வழியைச் சமைத்துவிட்டார் தனிநாயகர்; இதுவே அவரது உயர்பணியின் உச்சமாகும்.

- **வி. செல்வநாயகம்**, செயலர். [18]

## தொடர்புச் சாதனங்கள்

இம் மாநாட்டு நடவடிக்கைகளையெல்லாம் இதழ்களும், வானொலிகளும், தொலைக்காட்சிகளும் உடனுக்குடன் அழகாகப் பரப்பின. தென்கிழக்காசிய செய்தி ஏடுகள் எல்லாம் மாநாட்டிற்கு முக்கியம், முதன்மை தந்தன. இந்திய, இலங்கை, மலேசியா, சிங்கை ஏடுகள் எல்லாம், மாநாடு பற்றி முதல் பக்கத்தில் கட்டுரைகள் தீட்டின.

தமிழ் நேசன் மட்டும் மாநாட்டு நிதியாக 12,468,58 வெள்ளிகள் திரட்டித் தந்தது. தேசிய மலேசிய சினிமாத்துறை, 20 நிமிடத் திரைப்படமாக எடுத்து வடித்துக் கொடுத்தது. இந்திய, இலங்கை, மலேசிய வானொலிகளும், தொலைக்காட்சியும் முக்கிய நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தின.

**தலையங்கம்:** தமிழ் நேசன் தலையங்கம் தீட்டிற்று: 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமும், அடிகளாரும் முன்னின்று இப்படியோர் உலகக் கருத்தரங்கினை நடாத்த முடிவெடுத்தது, எண்ணத்தின் திண்ணத்தையும், பரந்துபட்ட முன் நோக்கையும் தொலை நோக்கையும் புலப்படுத்துகின்றன. முன்னமேயே தமிழ்த்தூதில் திளைத்த அடிகளார் சிந்தனையில், இத்தகு கருத்தரங்கு முகிழ்த்ததில் வியப்பில்லை.

இன்றைய காலகட்டத்தில் தமிழர்களிடையே ஒற்றுமை என்பது நல்ல முறையில் இல்லை. இந்தியத் தமிழன், இலங்கைத்

தமிழன், மலேசியத்தமிழன், சிங்கைத் தமிழன் என்ற குறுகிய மனப்பான்மையே ஓங்கியிருந்தது. இந்தத் தடைச் சுவர்களைத் தகர்த்தெறிந்தார். நெல்லிக்காய் மூட்டையாகச் சிதறிக்கிடந்த தமிழர்களையெல்லாம் இதயத்தால் இணைத்தார்; எழுச்சியும் விழிப்புணர்வும் கொள்ளச் செய்தார். தமிழர்கள் எங்கு வாழினும், அனைவரையும் இணைக்கும் பாலமாக, ஈர்த்துப் பிணைத்திடும் சக்தியாக, அருட்திரு அடிகளார் பிறங்கினார். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தமிழரின் பரந்து விரிந்த உளப்பாங்கை, விருது வாக்காகத் தெரிந்தெடுத்ததே, நாயகரின் பெரிய விரிந்த உள்ளத்தைப் பறைசாற்றுகிறது. கணியன்பூங்குன்றன் கருத்தைத் தமிழரின் பெரும்போக்காக, அரும்நோக்காகப் பரப்பிய பேருள்ளமும் வணங்கத் தக்கது.[19]

**கனவு நனவாகியது:** உலகத் தமிழ் மாநாட்டினைக் கூட்ட வேண்டும் என அடிகளார் கூறியதும், எல்லோர்க்கும் ஒரே மலைப்பு. ஓர் ஊரவரை ஒன்று சேர்ப்பதே முயற்கொம்பாக இருக்கும் நிலையில், பன்னாட்டினரை, உலகத்தையே ஒன்று திரட்டுவது என்பது, இயலுமா? என்ற தயக்கமும் மயக்கமுமே பலர் உள்ளத்தில் தோன்றின. எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியர் திண்ணியராகப் பெறின் என்ற தமிழ்மறைப்படி, முறையாக நிறைவாக நினைத்ததை முடித்துக் காட்டிவிட்டார், ஒரு தமிழ்த் துறவி.

நம் தமிழ்மொழியின் தகவினை, பெருமையை, மீண்டும் உலகவர்முன் கொண்டு வந்த மாநாடு இது என்றால் மிகையாகாது. உலகமெலாம் தமிழ் மணக்கச் செய்த மாநாடு எனின், உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

## 2. செ னை மாநாடு (1968)

உலகத் தமிழ் மாநாட்டின் தந்தை ஆனார் நம் அருட்தந தை அடிகளார் அவர்கள். அவர் பாட்டை போட்டுக் காட்டி வ. டார்; அவ்வழியே அம்முறையில் அடுத்தடுத்த மாநாடுகள் நட ந்தேறின.

1968 சனவரி 3-10 ஒரு வாரம் முழுதும் தமிழகத் தலைநகரில் பெரிய அளவில் பாரிய நிலையில் நடந்தேறிற்று. அடிகளாரின் உயிர்நண்பர் ஆசுப்ப்பயா ஆணிவேராக இருந்து பணியாற்றினார். கமில் சுவலபில் கருத்தரங்கக் கட்டுரைகளை

வகைப்படுத்துவதையும் அமர்வுகளை அமைப்பதையும் கவனித்துக் கொண்டார். பொதுச் செயலர்களாகிய வி.எஸ். தியாகராஜ முதலியாரும், வே.கார்த்திகேயன், I.A.S., அவர்களும் கடுமையாக உழைத்தனர்.

40 நாடுகளிலிருந்து 430 பேராளர்கள் பங்குபெற்றனர்; இலங்கையிலிருந்து 49, மலேசியாவிலிருந்து 37 பேர்.

மன்றம் பொறுப்பேற்று நடாத்திய கருத்தரங்கம், கோலாலம்பூர் மாநாட்டினை அடியொற்றி, அதே பாணியில் அறிவார்ந்த நிலையில் தனியே சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடந்தேறியது.

## அடிகளார் பங்கேற்பு

முதல் பொது அமர்வுக்கு அடிகளார் தலைமை ஏற்றார். மன்றத் தலைவர் ழான் பிலியோசா, 'தொன்மை இயலும் தமிழ் ஆய்வுகளும்', டாக்டர் கே.கே. பிள்ளை' 'தமிழ் நாட்டு வரலாற்றில், குறிக்கத் தக்க காலகட்டங்கள்' என்ற தலைப்புகளில் எழுத்துரை வழங்கினர். அடிகளார் வழங்கிய ஆய்வுக் கட்டுரைகள்: 'Tamil Migrations to the guadeloupe and martinique 1859-96; மேலைநாட்டு நில இயல் நூல்களும் சங்க கால ஆராய்ச்சியும்.

வெளியே தீவுத்திடலில் நடந்த விழாவில் கலை நிகழ்ச்சிகள், கவியரங்கம் எல்லாம் நடந்தன. பேரணியை இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் கண்டுகளித்தார். திரையுலகினர் சென்னை நகர்எங்கும் வண்ணவண்ண வளைவுகள் வைத்தனர்; வாணவேடிக்கைகள் போட்டி போட்டுக்கொண்டு விட்டனர். மெரீனா கடற்கரையோரம் தமிழறிஞர்களின் சிலைகள் வைக்கப்பெற்றன.

## 3. பாரிஸ்மாநாடு (1970)

1970 சூலைத் திங்கள் 15-18 நான்கு நாட்கள் பிரான்சுக் கல்லூரியில் நடைபெற்றது.

பங்குபெற்ற நாடுகள் 26. பேராளர்களும் பார்வையாளர்களுமாக 180 பேர். இவர்களில் இந்தியாவிலிருந்து 29, இலங்கையிலிருந்து 8, மலேசியாவிலிருந்து 2 பேர் கலந்து கொண்டனர். தமிழகக் குழுவுக்குத் தலைவர் நிதி அமைச்சர் கே.ஏ. மதியழகன்.

**வாழ்த்துரை:** அந்நாளைய தமிழக முதல்வர் மாண்புமிகு மு. கருணாநிதியும், மதியழகனும் வாழ்த்துரை வழங்கினர்.

**வரவேற்புரை:** மன்றத் தலைவர் ழான் பிலியோசா, பிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் அனைவரையும் வரவேற்றார்; 'எல்லோர்க்கும் இதய நல்வரவு' என முடித்தார்.

**தொடக்கவுரை:** ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டு மன்ற யுனெஸ்கோ மேலாண்மை இயக்குநர் டாக்டர் மால்கம் ஆதிசேசையா ஆங்கிலம் பிரெஞ்சு தமிழ் மும்மொழிகளிலும் உரையாற்றினார்.

**தலைமையுரை:** பேராசிரியர் பிலியோசா தலைமை உரையாற்றினார். பிழிவு: பிரெஞ்சு நாட்டில் இந்தியமொழிகளின் ஆய்வுகள் தொடங்கப்பட்டன, எதுவர்டு ஏரியல், இந்தியா ஏகி, தமிழ் பயின்று, தமிழ் நூல்களுடன் திரும்பி வந்து ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டதையும், ழூ லியன் வென்சோன், ழூல் ப்ளோக் போல்வார் தமிழ் ஆராய்ந்ததையும் தெரிவித்தார்.

1883இல் முதல் கீழ்த்திசைக் கலைகள் மாநாடு பாரிசில்தான் நிகழ்ந்தது. அதில் தமிழ் ஆய்வுகள் சிறப்பிடம் பெற்றன. மன்னர் நூலகத்தில் தமிழ் நூல்கள், அகராதிகள், இலக்கணங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பட்டியல் 1739 இலேயே அச்சிடப்பட்டு வெளியானது.

தமிழ்ப் பண்பாட்டினைப் பிரெஞ்சு மொழிமூலம் ஐரோப்பாவில் பரப்பியவர் மரியதாஸ் பிள்ளை என்னும் தமிழரே. பின் கால்டுவெல், ஜி.யு. போப் போன்றோர் தமிழை வளர்த்தனர் என்றாலும் இன்னும் நாம் ஆற்ற வேண்டிய தமிழாராய்ச்சிப் பணிகள் நிறையவுள்ளன. அதனை அறிவியல் முறையில் ஆற்ற வேண்டிய கடமை நம் அனைவரதுமாகும்.

## அடிகளார் பங்களிப்பு

மாநாடு நடந்த போது அடிகளார் பிரான்சுக் கல்லூரியில் இணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். எனவே மாநாட்டுப் பணிகளில் பெரும் பங்காற்றிட முடிந்தது.

இறுதி அமர்வுக்குத் தலைமை ஏற்றார். பிரான்சு தமிழக நெருங்கிய தொடர்புகளையும், பிரெஞ்சு அறிஞர் பல்லோர்

பைந்தமிழ்க் கல்விப்பணிக்கு ஆற்றியுள்ள பணிகளையும் நினைவு கூர்ந்தார்.

'தற்காலத் தமிழ்ச் சமுதாயங்கள்-ஒரு மதிப்பீடு' எனும் ஆய்வுரையை வழங்கினார்: உலகெங்கணும் உறையும் தமிழர்களையெல்லாம், இனவழி, தாய்மொழி வழி, பண்பாட்டு வழி, தலைமுறை வழி என்ற நான்குமுறையில் பகுக்கலாம். இந்திய, இலங்கைத் தமிழர்கள் இந்நான்குமுறையில் தமிழர். மலேசியா, சிங்கை, தென் அமெரிக்கா, மொரீசியஸ் தமிழர்கள், தமிழை வீட்டுமொழியாகக் கொள்ளாவிடினும் இனம் பண்பாடு எனும் இருவழியில் தமிழர்கள். தலைமுறை வழித் தமிழர் என்றாலும், கலப்புத் திருமணங்கள் வழிக் கிளைத் தமிழர்களை, இனத் தமிழர் என்பதற்கில்லை; அவர்கள் தமிழ் பேசுவது இல்லை; தங்களைத் தமிழர் என உணர்வதும் இல்லை; எனினும் சிதைந்த குடும்பப் பெயர்கள் கொண்டு, அவர்களைத் தலைமுறை வழித் தமிழர்கள் எனக் கொள்வது பொருந்தும்.

இங்ஙனம் கடல் கடந்து வாழும் தமிழர்கள் பற்றி ஆராய்ந்து எழுதியோர்: அரச ரத்தினம், இலங்கை சுந்தரம், கம்ப்ஸ்டன், கங்குலி, கைலஸ்ஸேர், கெர்னியல் சிங்சிந்து, கொண்டப்பி, கொடிக்கரா, துப்போன், பெனடிக்ட், மையர், வஸதியாம் பிள்ளை, ஆர்.கே. ஜெய்ன் போல்வார். இவர்களை மறத்தற்கில்லை.

தமிழர் வெளிநாடுகளுக்கு ஏகியது எப்போது என்றறிய இயலாது; 1834க்கு முன்னர் எனலாம். அரசுகட்கிடையே ஒப்பந்தத்தால் வேலையாட்களாகப் பர்மாவுக்கு 1826இலும், இலங்கைக்கு 1827, மொரீஷியஸ்க்கு 1836, மலேயாவுக்கு 1838, தென் ஆப்பிரிக்காவுக்கு 1860, பிஜித்தீவுக்கு 1903இலும் சென்றனர்.

புலம் பெயர்ந்ததற்குரிய காரணிகள்: ஊதியம் நிறைய கிடைக்கும். சாதிப்பாகுபாடு, குடும்பப் பிரச்சினைகள் போன்றன, கல்வி, சொத்துரிமை, அரசியல் செல்வாக்கு போன்ற காரணிகளால், சாதிப்பிரிவினைகள் போன்றன மறைந்து முன்னேற வெளிநாட்டு வாழ்வே வரப்பிரசாதமாக அமைகிறது. பிறநாடுகளில் வாழும் தமிழர்கள், பிற இனமக்களோடு காதல் கலப்புத் திருமணங்களால், முன்னம் தமிழ் மரபினர் என்ற ஒன்றைத்தவிர, அவர்களிடம் தமிழ்மை ஏதும் இல்லை.

தமிழர் வாழ் நாடுகளில் தமிழ்க் கல்வி இடம்பெறுகிறது. தமிழ் இதழ்கள், திரைப்படங்கள், இலக்கியங்கள் எளிதே பரவுகின்றன. வெளி நாடுகளில் வதியும் தமிழர், பிற இனத்தவரை விட்டு ஒதுங்கி வாழும் மனப்பான்மையினராகவே உள்ளனர்!

## தமிழியல் நிறுவனம்

மாநாட்டின் இறுதியில் தமிழகத் தலைநகரில் தமிழியலுக்கு என ஒரு நிறுவனம் நிறுவப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தை அவையின் முன் வைத்தார். அவையோர் மிகுந்த ஆரவாரத்தோடு வரவேற்றனர். இந் நிறுவனம் நனவாக, ஆ. சுப்பையா எடுத்துக்கொண்ட பெரும்முயற்சி, விடாமுயற்சியை அடிகளார் மிகவும் பாராட்டினார். பிரஞ்சு தேசிய மன்றம், தமிழியல் நிறுவனம் அமைய, யுனெஸ்கோவிடம் பரிந்துரைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

**நன்றி:** இறுதியில் அடிகளாரே நன்றி பாராட்டினார். அடுத்த மாநாடு 1973இல் இலங்கையில் நிகழ்வுறும் என்றார். இலங்கை மாநாட்டில் உங்களையெல்லாம் ஒருமுறை சந்திப்பேன். இக்கூற்றில் ஐந்தாம் மாநாடு நடக்கும் வரை, நான் உயிரோடு இரேன். இலங்கை மாநாடே எமக்கு இறுதி மாநாடாக இருக்கும். ஐந்தாம் மாநாட்டினை மேலிருந்து பார்த்து மகிழ்வேன் எனச் சூசகமாக உணர்த்தியது, எல்லோர் உள்ளத்தையும் உருக்கியது; உலுக்கியது.

**தொகுப்பு:** மூன்றாம் மாநாட்டு உரைகளின் தொகுப்பு-பதிப்புப் பணிகளை அடிகளே ஏற்றார். அச்சிடும் பொறுப்பினைப் புதுவை பிரஞ்சு இந்தியவியல் நிறுவனத் துணை இயக்குநர் பிரான்சு வா க்ரோ ஏற்றார்.

## 4. யாழ்ப்பாண மாநாடு (1974)

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை முன்னின்று, 1974 சனவரி 3-9 ஏழு நாட்களும் நடத்தின. தமிழர்களின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் நடந்தது.

இலங்கைக் கிளையின் தலைவர்-இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமை ஏற்றார்.

**நிதி:** நன்கொடைகள், கொடிநாள் வருவாய் மூலம், இலங்கையிலேயே நிதி திரட்டப்பட்டது. வெளிநாட்டு உதவியே இல்லாது நடந்த முதல் உலகத் தமிழ் மாநாடு இதுவே.

**தொடக்கவுரை:** அடிகளாரே குத்துவிளக்கேற்றி மாநாட்டினைத் திறந்து வைத்துத் தொடக்க உரையாற்றினார்; அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றின் பணிகளை விளக்கினார்; உலகத் தமிழ் மாநாடுகள் சாதித்தவற்றைத் துலக்கினார்.

ஒரு காலத்தில், இந்தியப் பண்பாட்டினை அறிதற்கு வடமொழி அறிவு இருந்தாற் போதுமானது என மேனாட்டவர் கருதியிருந்தனர்; ஆனால் இன்று, திராவிட மொழிகளிற் சிறந்த தமிழ் மொழியை அறியாது, இந்தியாவின் பண்பாட்டை, கலைகளை உணர்ந்திட ஒல்லாது என எல்லோரும் உணர்ந்து விட்டனர். மேலைப் பல்கலைக்கழகங்களில் எல்லாம் எங்கெங்கு வடமொழிப் பயிற்சி உண்டோ, அங்கெல்லாம் மாத்தமிழைப் பயின்றிடும் முயற்சி தொடங்கிவிட்டனர்.

இம்மாநாடுகளின் பயன்பாட்டினை நான் மதிப்பிட வேண்டுமாயின், சென்ற மூன்று மாநாடுகளின் தொகை நூல்களைப் படித்துப்பார்க்க வேண்டும். அந் நூல்களை நோக்கின், தமிழாராய்ச்சி எவ்வளவிற்கு முன்னேறி வந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

வெறும் புகழின் பொருட்டோ, பேருக்குப் போற்று வதற்காகவோ, நாம் தமிழாராய்ச்சியில் இறங்குவதில்லை. ஆராய்ச்சியாளரின் நோக்கம், உண்மையைக் கண்டுணர்வது; மறைந்திருக்கும் உண்மைகளை அகழ்ந்தெடுப்பது; அவற்றை உலகிற்குப் புலப்படுத்துவது.

உலகில் மொழிகள் எத்துணையோ இருக்க, நாம் நம் தமிழுக்கு மட்டும் மாநாடுகளை எடுக்கவும் உலகத் தமிழறிஞரெல்லாம் ஓடோடி வரவும் காரணிகள் இருக்க வேண்டும்.

'இந்தியப் பண்பாட்டில் எழுபத்தைந்து விழுக்காடு, திராவிடப் பண்பாடே' என்று வங்க அறிஞர் நன்னெறிமுருகர் (சுநித்தி குமார் சட்டர்ஜி) அறுதியிட்டுள்ளார். இந்த உண்மையின் ஒண்மையினைத் தமிழ்த்துறை ஆராய்ச்சியாளர்கள் உணர்ந்து கொண்டே வருகின்றனர்.

'சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகமே' என்று புரிந்து கொண்டவர்களுக்குத் தமிழரின் தொன்மையும் தமிழ்க் கலைகளின் பழமையும் நன்கு புலனாகும். சிந்துவெளி

நாகரிகத்தைச் சங்க காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அங்குள்ள தொடர்புகள் தெளிவாகின்றன. ஆதலால் இந்தியத் திருநாட்டின் வரலாற்றினைப் பயில்கின்றவர்கள், அந்த வரலாற்றில் மாபெரும் பங்கு கொண்டவர்களைப் பற்றியும் அறிந்தே- ஆராய்ந்தே தீரவேண்டும்.

ஆசிய வரலாற்றிலேயே, பல்லவர்களின் வெளிநாட்டுத் தொடர்புகள், உரோமப் பேரரசுகளுடன் தமிழகத் துறைமுகங்கள் கொண்ட வணிகத் தொடர்புகள், சோழப் பேரரசுகளின் ஆட்சியும் மாட்சியும் எல்லாம் பேரிடம் பெறுகின்றன. மார்க்கோ போலோ, தென்னகப் பயணத்தின்பின், 'பாண்டிய அரசே, இந்தியாவின் ஏற்றம் சான்ற அரசு' என மொழிந்துள்ளார்.

வரலாறு எவ்வளவுக்கு எவ்வளவு சிறந்துளதோ, அவ்வளவுக்கு இலக்கியமும் சிறந்துள்ளது. வடமொழி நீங்கலாக, மற்றெல்லா இந்திய இலக்கியங்களும் ஏறக்குறைய பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் பிறந்துள்ளன. ஆனால் நம் தமிழ் இலக்கியமோ, கிறித்துவுக்கு முன்னமேயே, பெரும் மலர்ச்சியை அடைந்துவிட்டது. சங்க இலக்கியம், சமய இலக்கியம் மட்டும் அன்று; மக்கள் வாழ்வினைக் காட்டும் உலக இலக்கியமும் அதுவேயாகும். தொல்காப்பியமும் தொகையும் பாட்டும் இந்திய இலக்கியங்களில் மட்டும் அல்ல, உலக இலக்கியங்களிலேயே பெரும் இடத்தைப் பெற்றுள்ளன. வள்ளுவரின் குறளைப் போன்றதொருநூல் உலகில் இல்லை என்பது ஆல்பர்ட் சுவைச்சரின் துணிபு.

நீதி இலக்கியங்கள் போல் நம் பக்தி இலக்கியமும் சிறந்தது. மொழி அமைப்பிலும் வளத்திலும், தமிழ் மொழி, உலக மொழிகளில் உயர்ந்தது. தமிழின் தொன்மை, அதன் வளம், புகழ்மிகு பண்பாடு இவற்றையெல்லாம் ஆராய்கின்றவர்கள், மென்மேலும் அவற்றை ஆராயவே விழைவர். அதனால்தான், தமிழ் ஆராய்ச்சி நாளொருவண்ணமாக வளர்ந்தேறிக்கொண்டே வருகின்றது.

**வேண்டுதல்:** நான்காம் மாநாட்டினை நாம் தொடங்கி வைக்கும்போது, மூன்றாண்டுகட்கு ஒரு முறை மாநாடு நடத்தப்படுவதால், ஐந்தாம் மாநாட்டினை நோக்கி நம் சிந்தனையெல்லாம் செல்கின்றது. அடுத்த மாநாடு மதுரைப் பல்கலையில், அதற்கடுத்த மாநாடு அண்ணாமலைப் பல்கலையில் நடத்தப்படவேண்டும். ஏனெனில் பல்கலைக்கழகங்களின்

தமிழ்த்துறைகளிடமே, நாம் நம் தமிழ் மொழியின் வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும். எனவே இம் மாநாடுகள் தொடர, நம் பல்கலைக்கழகங்கள் முன்னுக்கு வரும்; முந்திக்கொண்டு வரவேண்டும் என நம்புகிறோம். இத்தகு மாநாடுகளே, தமிழியல் வரலாற்றில், தமிழ் ஆராய்ச்சிக்கு உரிய முக்கிய இடத்தை உறுதிப்படுத்தும்.

**தலைமையுரை:** பன்னாட்டுத் தமிழாராய்ச்சி மன்றம், பிற நாட்டவரிடையே தமிழார்வமும் தமிழாராய்ச்சியும் பல்கிப் பரவப் பெரும்பங்கு புரிந்துளது. இப்படிப்பட்ட அரும்பணி ஆற்றிய இம்மன்றின் தோற்றுநர் தனிநாயக அடிகளை நாம் பாராட்டாமல் இருக்க இயலாது. அவர் தமிழ் மொழியின் தூதுவர் ஆவார். உலகப் பற்றைத் துறந்தாலும், தமிழ்ப் பற்றைத் துறவாதவர்-துறக்க முடியாதவர்.

உலகின் எப்பகுதிக்கு ஏகினாலும், அப்பகுதி மக்களுக்குத் தமிழ்மொழியின் தொன்மை, இலக்கியத்தின் தன்மை, தமிழரின் மேன்மை பற்றியெல்லாம் பேசியும் எழுதியும் தமிழிடத்து ஒரு தாகத்தை ஏற்படுத்திடச் செய்துவந்திருக்கிறார். உலகமெலாம் தமிழ் முழங்க, முத்திங்கள் ஏடு-தமிழ் கல்சர் தோற்றுவித்து அதன்மூலம் முத்தமிழின் பெருமையையெல்லாம் உலகம் முழுதும் முழங்கச் செய்து விட்டார். இதற்கும் மேலாக, ஐரோப்பியா, ஆப்பிரிக்கா, ஆசியா எங்கணும் உள்ள தமிழ்ப் பேரறிஞர்களையெல்லாம் பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் கீழ் கொண்டுவந்து விட்டார். இதுவரை யாரும் செய்யாத அரிய பெரிய சாதனை இது.

இம்மன்றம் தனிநாயகரின் தமிழ் மூளையில் உருவான ஒரு குழந்தையாகும்; கடந்த பத்தாண்டுகளாகக் கண்ணை இமையிரண்டும் காப்பது போல் வண்ணமுறக் காத்து வளர்த்துக் கொடுத்துள்ளார் நம் கைகளில். அவர் சீராட்டிப் பாராட்டிப் பேணி வளர்த்த அக் குழந்தைக்கு இன்று பத்தாம் யாண்டு (Decade). இக்குழந்தையின் வளர்ச்சியே-வாழ்வே, தமது இலட்சியம்-இலக்கு என்பதனை, இம்மாநாட்டினைத் திறந்து வைக்க முன்வந்ததிலிருந்து உலகறியச் செய்திருக்கின்றார் என்றார் தலைமையுரை ஆற்றிய சு. வித்தியானந்தன் அவர்கள்.

**பத்தாண்டு நிறைவு:** பன்னாட்டுத் தமிழாராய்ச்சி மன்றம் தொடங்கிப் பத்தாண்டு ஆயினமையைக் கொண்டாடு

முறையில், சுண்டிக்குளி மகளிர்க் கல்லூரி வளாகத்தினுள் அடிகளார் மரம் நட்டு நினைவு நாளைச் சிறப்பித்தார்.

*அஞ்சலி:* மூன்றாம் மாநாட்டில் பகர்ந்தது போன்றே இந்த நான்காம் மாநாடே, ஆற்றிய உரையே, இறுதி மாநாடு, இறுதி உரை. எனவே அடிகளாரின் இறுதி வேண்டுகோட்கு இணங்க, உலகெங்கணும் உள்ள பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைகள், மூன்றாண்டுகட்கு ஒரு முறை தாமே முன்வந்து தொய்வின்றி, தொடர்பு அறாது, நாயகர் தொடங்கிவைத்த நல்ல ஆராய்ச்சி மாநாட்டினை இடைவிடாது தொடர்ந்து நடாத்துவதே நற்றமிழ் நாயகருக்கு நாம் ஆற்றும் நன்றி; நாம் செலுத்தும் நல் அஞ்சலி ஆகும். மாமனிதர் புகழ்பாடி, மாநாடு எடுப்போம்- மாத்தமிழ் போற்றுவோம்.

*வன்முறை வெடித்தது:* இந்த மாநாட்டின் போதுதான் ஈழத்தமிழர் பிரச்சினை வெடித்துச் சிதறியது. தமிழர்-சிங்களர் சிக்கல் அதுவரை கனன்று கொண்டே இருந்தது. தமிழரெல்லாம், உலகத் தமிழரெல்லாம், ஒன்று கூடி ஒரு பெரும் மாநாடு எடுப்பது கண்ட சிங்களவர்க்கு, உளக் கொதிப்பு ஓங்கியது; வன்முறையில் இறங்கினர்.

இந்த வன்செயல்களால், வெறித்தாக்குதலால், தமிழர்கள், உயிர் பிழைத்தால் போதும் என உடைமைகளை யெல்லாம் போட்டுவிட்டு உலகெங்கும் தஞ்சம் புகுந்தனர். தமிழறிஞர்கள் எல்லாம் திசையெங்கும் விசையொடிந்தவர்களாய்-புலம் பெயர் மக்களாகப் பறந்தனர். இன்னும் திரும்பாதே உள்ளனர்!

இந்த வன்முறையால் மென்மை உள்ளம் சான்ற அடிகளார் உள்ளம் ஒடிந்தார்; நெஞ்சம் நொறுங்கி விட்டார். இதன் பின்னர் எந்தப் பொது நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றுவதிலிருந்து விலகிக் கொண்டார்; விடுவித்துக் கொண்டார்.

*அரசியலில்:* கட்சி அரசியலில் கால் பதிக்காதவர்; என்றாலும் மக்கள் நலனை நிலைபெறக் கொண்ட அரசியலில் சிந்தை செலுத்தி வந்தார். பிறந்த நாட்டால் தாம் இலங்கையர் என்பதை அவர் என்றுமே மறந்தவரில்லை. உலகம் சுற்றியதுபோக, உலகநாடுகளில் பணியாற்றியது தவிர, பிற காலங்களில் எல்லாம், ஏன் தம் இறுதிக் காலத்தில் யாழ் ம்ண்ணிலேயே உறைந்தார், உயிர்விட்டார்.

**இலங்கை இன, மொழிப் பிரச்சினை:** மாந்தரை மதித்து ஒழுகியதிலும் மனித உரிமைகளைத் துதித்துப் போற்றியவர். எனவேதான் இலங்கைத் தமிழர் தம் இனத்துக்கும் மொழிக்கும் ஒத்த உரிமை நாடியது நியாயமே என நம்பினார்.

தமிழ் சிங்களம் என்ற இருமொழி இனத்தவர் வதியும் இலங்கையில், பெரும்பான்மை, சிறுபான்மை என அளவு பாராது, இரு இனத்தவரும் ஒத்த உரிமையும் நிலையும் கொண்ட மக்களாக வாழ்ந்திட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அப்போதுதான் உண்மையான தேசிய உணர்வும், உறுதியான ஒருமைப்பாடும் உருவாகும் என நம்பினார்.[20]

**தொடர்உறவு:** தென்னகத்துடன் இனத்தால் பண்பாட்டால் தொடர்புடைய மக்கள், இலங்கையில் பண்டுதொட்டே வாழ்ந்து வருகின்றனர் என்பது மறக்கமுடியாத-மறுக்க முடியாத உண்மை. இதற்கு இலக்கிய, மொழியியல், வரலாற்று, நிலவியல், மானுடவியல் சான்றுகள் நிறைய உள்ளன.

1. சிங்களப் பெருநூல் மகாவம்சத்திலேயே இதற்கு ஆதாரம் உளது. 2. போர்த்துக்கீசியர் இலங்கை போந்த போது, கோட்டையில் தமிழ் கொலுவிருந்தது, மேற்கு, வடமேற்குப் பகுதிகளில் அவர்கள் தமிழ்ப் பள்ளிகள் பல தோற்றுவித்ததை வரலாறு காட்டுகிறது. 3. டச்சுக்காரர்கள், இலங்கையில் அச்சகம் வைத்தபோது, இருமொழிகளிலும்தான் புத்தகம் அச்சிட்டனர். 4. பிரோன்சு வெலட் என்ற டச்சுப் பாதிரியார் வெளியிட்ட தமிழ் நூலில், இலங்கையில் பெரும் பகுதி மக்கள், தமிழ் பேசும் மக்களே என்று குறிப்பிட்டுள்ளார். 5. இராபர்ட் நாக்ஸ், கண்டி அரசில் தமிழ் நகரங்கள் இருந்தமை, தமிழ் மக்கள் வதிந்ததைக் குறிப்பிட்டிருக்கிறார்.

6. இரு இனங்களும் தங்களுக்குள் ஊடாடி உறவுகொண்டாடி உயர்ந்துளர். 7. இரு மொழிகட்கு இடையேயும் இலக்கியம், நாடகம், நாட்டியம், கலை போன்றவற்றில் ஒற்றுமை நிரம்பவே உளது. 8. இருமொழிகட்கு இடையே தாக்கமும் உள. 9. சிங்கள அரசவையில் சைவ அந்தணர்கள் பணியில் இருந்துளர்; சிங்கள அரசர்கள், தமிழ்ச் சைவ இளவரசிகளை மணந்துள்ளனர்; பௌத்தப் பள்ளிகளில் தமிழும் கற்பிக்கப் பட்டுவந்துள்ளது. 10. தமிழர் பலர் பௌத்த சமயத்தவராகவும் துறவிகளாகவும் இருந்துளர். தென்னகத்திலும் இலங்கையிலும் பௌத்த விகாரைகள் பல உளவே. அவற்றை எழுப்பியோர் தமிழர்தானே. 11. தேரவாத பௌத்தம் பற்றிய இலக்கியம் உலகிலேயே ஒன்றே ஒன்றுதான்; அந்த ஒன்றும் தமிழிலே அமைந்த மணிமேகலை என்பது எத்துணை

முக்கியத்துவமும் பெருமையும் தருகிறது. 12. சங்கமித்ரா போன்றோர் இந்தியாவிலிருந்து இலங்கை சென்று சமயப்பணி ஆற்றியதும், தம்ம பாலர், திக்நாகர் போன்றோர் பௌத்த அறிஞர்களாகப் பிறங்கியதும் மறக்கமுடியுமா? இப்படிப் பண்டு இரு இனத்தவரும் ஒருமையுடன் வாழ்ந்துள்ளனர்.

*இருமொழியும் இன்றியமையாதன: இப்படி ஒற்றுமையாக இருந்த இனங்கள், ஐம்பதுகளின்பின் வேறுபட்டும் மாறுபட்டும் பிரிந்தும் பகைத்தும் வாழ்கின்றனர்.*

*இந்த இனவாதமும் பிரிவினைப் பாகுபாடும் அறவே ஒழிந்து, ஒரு தேசிய உணர்வு உருவாக வேண்டுமாயின், சிங்களம், தமிழ் இரு மொழிகளும் இலங்கையின் ஆட்சிமொழிகளாக ஆதல் வேண்டும். அரசு அலுவலர்கள் யாவரும், இருமொழியும் கற்றிருக்க வேண்டும்; இலங்கையின் எப்பகுதியிலும் பணியாற்ற வேண்டும்.*

**பிறநாடுகளைப் பார்க்க** : 1. பெல்ஜியத்தில் பிரஞ்சு, பிளெமிங் இருமொழி இனத்தவர் உளர். இரு இனத்தவர்க்கும் ஒத்த உரிமை வழங்கித் தேசிய ஒருமைப்பாட்டில் திளைக்கின்றனரே. 2. கனடாவில் ஆங்கிலம், பிரெஞ்சு இருமொழி இனத்தாரும் ஒத்த உரிமை பெற்று ஒருமையுற்று வாழ்கின்றனர். 3. சுவிட்சர்லாந்தில் இத்தாலி, பிரெஞ்சு, செர்மன், ரொமான்ஷ் என நான்கு மொழி பேசும் (மூன்று சமய) நாலு இனத்தவருக்கும் ஒரே மாதிரி உரிமைவழங்கி ஒருமைப் பாட்டினை உருவாக்கியுள்ளரே!

*எனவே இருமொழிபேசும் இரு இனத்தவர் உள்ள ஒரு நாடு என்ற ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் உருவாக்க, எளிய இனிய, தவிர்க்க முடியாத ஒரே வழி, இரு மொழிக்கும், இனத்துக்கும் சம உரிமை, அந்தஸ்து அளிப்பதே முறை.*

***பெரும்பான்மை சரியா:*** *பெருவாரியானோர் முடிவு என்பதால், விடிவு வந்திடுமா! அது தவறு. கருத்தைக் கவனிக்க வேண்டும், கணிக்க வேண்டுமே தவிர, எண்ணிக்கையை வைத்து முடிவிடல் இமாலயத் தவறு. பன்மொழி, பல இனம் கொண்ட ஒரு நாட்டினை, ஒருமொழி ஓரின நாடாக முடிவெடுத்தால், அது நாட்டின் அமைதிக்கும் ஒருமைக்கும் ஊறே விளைவிக்கும்; தமிழினத்தின் மொழிப்பற்றும், இன உரிமையும் பாதிக்கப்படும். அது பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை ஆகும்.*

***சிங்களமே:*** *15.6.1956 அன்று, இருமொழிகளுமே ஆட்சிமொழி ஆக்கப்பட வேண்டும் என சிறுபான்மைத் தமிழர் வேண்டியும், பாராளுமன்றில் 14 மணி நேர வாத, எதிர் வாதங்களின் பின்,*

ஆதாரவாக 66, எதிராக 29 வாக்குகளில் தவறான முடிவு எடுக்கப்பட்டது. சிறுகதையாக வேண்டிய சிக்கல், தொடர்கதையாக இன்றும் தொடர்கிறது.

ஆதரவு: (பண்டார நாயகே) இலங்கைச் சுதந்திரக்கட்சி, (சேனநாயகே) ஐக்கிய தேசியக் கட்சி, நியமன உறுப்பினர்கள். எதிர்ப்பு: தமிழ் 5 கட்சிகளும், இடது சாரிகளும்! [21]

**நேரில் வேண்டல்:** இப்படி ஏடாகூடமாக ஏதும் நடந்து விடக்கூடாது என்பதனைத் தொலை நோக்கில் உணர்ந்து, 1956 தேர்தலை அடுத்து, 'சிங்களம் மட்டுமே இயக்கம்' தீவிரமடைவது கண்டுகலங்கி, பிரதமர் சாலமன் பண்டார நாயகேயைச் சந்தித்து, 'இருமொழியும் ஆட்சிமொழியானால்தான், இனப்பிரச்சினை தீரும்; இன்றேல், என்றும் நீளும்' எனச் சான்றுகளுடன் சிந்திக்க வைத்தார். ஆனால் பண்டார நாயகரோ, 'வாள்முனையில் இப்பிரச்சினையைத் தீர்ப்பேன்' என்றார். அதிர்ந்தார் அடிகளார்.[22] மொழிப் பிரச்சினை அரசியல் பிரச்சினை மட்டும் அன்று; அரசியல்வாதிகட்கு மட்டுமே உரியதன்று. அஃது குடிமக்கள் அனைவர்க்கும் உரிய உயிர்ப் பிரச்சினை. எனவே தேசிய ஒற்றுமை (Unity) தான் முக்கியம் என்பதை விளக்கினார்; சட்டத்தின் மூலம், நாட்டுக்கும் மொழிக்கும் உள்ள உறவினை நசுக்குவது பயன்தராது எனத் துலக்கினார்; மொழி உரிமைகளை மறுப்பது இனப் பகைமையையே விளைக்கும் என அறிவுறுத்தினார்; எண்ணிக்கையை வைத்து உரிமை ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திவிட்டால், குடியரசின் ஆணிவேரையே ஆட்டங்காண வைத்துவிடும் எனத் தெளிவுபடுத்தினார்.

காட்டுகள்: 1. சுவிட்சர்லாந்தில் இத்தாலி மொழி பேசுவோர் 6 விழுக்காடே; என்றாலும் தேசிய ஆட்சிமொழிகளுள் அதுவும் ஒன்றாக ஏற்கப்பட்டுளது. 2. பின்லாந்தில், சுவீடிஷ்மொழி பேசுவோர் 9 விழுக்காடே; ஆனாலும் அதுவும் தேசிய மொழியாக- ஆட்சிமொழியாக ஒப்புக் கொள்ளப்பட்டுளது. 3. இரு இனத்தவரும் இணைந்து உழைத்தே, இலங்கை நாடு உருவாகியுள்ளது. அப்படி இருக்கும்போது மொழியில் பேதம் புகட்டுவது மூர்க்கத்தனமானது. 4. மொழிகளுக்கிடையே ஒத்த உரிமை உண்டு-புத்தர். 5. உரிமையும் சமத்துவமுமே, மொழிப் பிரச்சினைக்குத் தக்க தீர்வாகும். 6. தேசிய இனங்களையும் தேசியச் சிறுபான்மை இனங்களையும் அவ்வவ் இனத்துக்கு உரிய மதிப்போடும் உரிமையோடும், அரசியல் அமைப்புக்குள் ஒருங்கிணைப்பதே உத்தமம்; இதைவிட்டால் வேறு வழி இல்லை- (ஆஸ்கர் இயனோன்ஸ்கி).[23]

**உரிமைமுழக்கம்:** மசோதா கண்டதும், இலங்கைத் தமிழர் இனத்துக்கும் மொழிக்கும் உரிமை கோரி எழுந்தது நியாயமே; தேசிய உணர்வுக்கு ஊறு நேராது தமிழ் இன உணர்வினை, நெறியினை வளர்ப்பதில் தவறில்லை எனக் கருதினார் அடிகள். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எழுதினார், பேசினார்.

1956, 61 இல் நடந்த அறப்போர்களில் பங்குபெற்றார். 'இலங்கையில் மொழி உரிமைகள்' என்ற கட்டுரை வெளியிட்டார்.[23] நிதிதிரட்டித் தந்தார். தமிழர் உரிமை பற்றிச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் துண்டு அறிக்கைகள் வெளியிட்டார். அதுசமயம் கைதாகக் கூடிய நிலையில் மலேசியப் பல்கலையில் பொறுப்பேற்கச் சென்றுவிட்டார்.

1980. அவசரகாலச் சட்டத்தின் கீழ், தமிழர்கள் படும் துயர் பொறுக்காது, முழங்கிடத் தம் நண்பர் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கு. நேசையாவை ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டி, 10.1.1980 யாழ் நகர அரங்கில் முழங்கினர். யாழ் உலகத் தமிழ் மாநாட்டில் வன்முறையில் மாண்ட தமிழர் தம் நினைவு நாள் அது.

தூய அரசியலில் பங்காற்றித் தம்மளவில் தகுவன புரிந்த தனிநாயகரை, மக்கள் தங்கள் தமிழ்த் தலைவராகவே கொண்டனர்.

## 5. மதுரை மாநாடு (1981)

1981 ஆம் யாண்டு சனவரித் திங்கள் மதுரைப் பல்கலையின் சார்பில் நடந்தது. எம்.ஜி.ஆர். அரசு விழா எடுத்தது. தம் இலட்சியமாகக் கருதிவந்த உலகத் தமிழ் மாநாடு நான்கினை முன்னின்று முனைப்புடன் நடத்திய நாயகர் அவர்கள், ஐந்தாம் மாநாட்டிற்கு நான்கு திங்களின் முன் யாழ்ப்பாணப் பண்டந்தரப்பில் 67 ஆம் அகவையில் மறைந்தார். அவரில்லாமலேயே ஐந்தாம் மாநாடு நடந்தது. இளவரசன் ஹாம்லெட் இல்லாமலேயே, 'ஹாம்லெட்' நாடகத்தை நடத்த வேண்டிய நிலை ஆயிற்று![25]

### அஞ்சலி

5.1.1981 காலை முதல் பொது அமர்வின்போது, பன்னாட்டுத் தமிழாராய்ச்சி மன்றம் தன் தோற்றுநர்க்கு இதய அஞ்சலி செலுத்தியது. இச்செய்தியினைப் படித்து வழங்கியவர், அடிகளாரின் ஆருயிர் நண்பர்- தமிழக

மாநாடுகளை (சென்னை-மதுரை) முன்னின்று நடாத்திய ஆ.சுப்பையா அவர்கள்.

தனிநாயகர், உலக அளவில் தமிழ் ஆராய்ச்சியில் ஆர்வத்தை உருவாக்கியதில் தன்னிகரற்றுப் பணியாற்றிய பெருமகன். இதற்கு முன்னோட்டமாக, உலகம் முழுதும் பரந்த பயணம் மேற்கொண்டு, உரியவர்களைத் தொடர்பு கொண்டவர்: தமிழ் உலகத்துடன் தொடர்பு கொள்ளுதற்கு எத்தகு கருவியும் இல்லையே என ஏங்கிய அறிஞர்களையெல்லாம் , பண்பாட்டுப் பேரார்வலர்களையெல்லாம் சந்தித்தார்; சிந்திக்கச் செய்தார்.

இத் தேவையை நிறைவேற்ற 1952 இல் 'தமிழ் கல்சர்' எனும் ஆங்கிலக் காலாண்டு இதழினைத் தொடங்கினார். ஆசிரிய உரையில் அவர் குறிப்பிட்டவை: தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவற்றின் தனித் தன்மைகளை இனிதுணர்ந்து, அவற்றைப் பலரோடு-பிறரோடு பகிர்ந்து கொள்ள விழைந்த சிலரை, கடந்த நூற்றாண்டுகளில் ஏறக்குறைய ஒவ்வொரு தலைமுறையும், தென்னகத்திலும் இலங்கையிலும் கண்டு வந்துளது. இவர்களில் பெரும்பாலோர், வெளிநாட்டவர். கிரேக்க, இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றிருந்த இவர்கள் தமிழ்ப் பண்பாட்டினைப் பாராட்டிப் போற்றியது குறிப்பிடத் தக்கதாகும்.

இதற்கிடையில் இத்துறையில் நடைபெற்ற செயற்பாடுகள் மிகமிகக்குறைவு. ஆய்வுக்குரிய களமும் காலமும் மிகவும் விரிவானவை. இந்தியத் தமிழகத்தைப் பற்றிய ஆய்வுகளை ஆற்றாது, புறக்கணித்தோமாயின், அது, இந்தியவரலாற்றை வரைவதிலும் இந்தியப் பண்பாட்டினை விளக்குவதிலும் பெருந்தவறுகளும் பெரிய பிழைகளும் மண்டிட வழி வகுத்துவிடும்.

கிரேக்கம் வடமொழி போன்றே, தமிழும் ஓர் உயர்தனிச் செம்மொழியே. ஆனால் ஒரு வேறுபாடு. பழமையில், பைந்தமிழை ஒத்த பிறமொழிகள் உருத்தெரியாது மாறிவிட்டன; அல்லது செத்த மொழிகளாகவே கருதப்பட்டு வருகின்றன நீண்ட நெடுங்காலமாக! தமிழோ, வீறுடன்-உயிர்ப்புடன் தொடர்ந்து வாழும் தற்கால இந்திய மொழிகளுள் ஒன்றாகும். இன்றும் தொடர்ந்து வழக்கில் உள்ள பழைய செம்மொழிகளில், வரலாற்றுக்கு ஏற்ற வளமான எடுத்துக்காட்டு, வண்டமிழே எனலாம். இவற்றையெல்லாம் எடுத்து இயம்பி, உலகில் மிகப் பலரும் அறியச் செய்வது, அணுகுமாறு தூண்ட வேண்டியது,

உண்மைமீது நாட்டம் கொண்ட நல்லோர் எல்லோரின் இனிய கடமையாகும்.

'தமிழ்ப் பண்பாடு' ஏடு, உயரிய ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வந்ததால், அது, தமிழ் ஆய்வில் ஈடுபட்ட உலக அறிஞர் பலரின் பேரார்வத்தையெல்லாம் தூண்டிற்று. வடமொழியை மட்டுமே சான்றாதாரமாகக் கொண்டு ஆற்றிவந்த இந்தியவியல் ஆய்வுகளில் எழுந்த தவிர்க்க முடியாத தடைகளுக்கெல்லாம் திராவிட மொழிகளையும் பண்பாட்டையும் ஆராய்வதன் மூலமே விடைகாண முடியும் என்பதை, மேலை இந்தியவியல் அறிஞர்கள் எல்லோரும் முற்றிலும் உணர்ந்தனர். ஆனால் தற்கால அறிவியல் முறையில், திராவிட இயல் ஆய்வுகளை மேற்கொள்வதற்குரிய பல்கலைக்கழகங்களோ, வேறு நிறுவனங்களோ, இந்தியாவில் இல்லாமையால், அத்தகைய ஆய்வுக்கு உரிய நிறுவனம் ஒன்றைத் தங்களுக்கு உற்ற துணையாக, உறுதுணையாக உடன் ஏற்படுத்த வேண்டும் என்பதில் அறிஞர் பலர் ஆர்வம் கொண்டனர்.

இதற்கு 1964 இல் புது தில்லியில் நடந்த கீழைத்தேசிய அறிஞர்களின் 26ஆவது மாநாட்டின் போது, உரிய வாய்ப்பு உருவாயிற்று. அந்த நல்லமையத்தை நன்கு பயன்படுத்தி அடிகளார் அவர்கள், பன்னாட்டு அறிஞர்களின் அரவணைப்போடு, பன்னாட்டுத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவினார். அடுத்த 27ஆவது மாநாடு அமெரிக்காவில் ஆன் ஆர்பரில், 1967இல் கூடியபோது, இந்நிறுவனம், யுனெஸ்கோவின் ஓர் உறுப்பாகிய கீழைத் தேசிய அறிஞர்களின் உலக ஒன்றியத்தின் உறுப்பாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

தமிழ் ஆய்வு அறிஞர்கள் உலகின் பல்வேறுநாடுகளில் உறைந்து வருகின்றனர். அவர்களிடையே தொடர்பு ஏற்படுத்துவதற்காக, இரண்டு அல்லது மூன்றாண்டுகட்கு ஒருமுறை, உலகத் தமிழ் மாநாடுகளை நடத்துவதென்றும், அதனால் அறிஞர்கள் தங்கள் ஆய்வுகளை அளித்தற்கும், தங்கள் துறை, ஆய்வு, ஐயப்பாடுகளைப் பற்றிப் பிற அறிஞர்களுடன் கலந்துரையாடவும், இம் மன்றத்தால் வாய்ப்பு [illegible]டும்

நடத்த முடிந்தது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பல்கலைக் கழகங்கள் பலவற்றில், தமிழ்மொழி, இலக்கியத்திற்கெனத் தனித்துறைகள் தொடங்கத் தனித்த பீடங்கள் நிறுவ வழி வகுத்தார். அப்படி அருஞ்சாதனை புரிந்த தமிழ்நாயகர் அண்மையில் மறைந்தார். அவர் மறைவு குறித்துத் தாளாத் துயரினை இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது; அவரது ஆன்மா சாந்தியடைய இறைஞ்சுகிறது.

**வினா—விடை:** இவ்வண்ணம் கோலாலம்பூர், சென்னை, பாரிசு, யாழ்ப்பாணம், மதுரை என அடிகளார் முயற்சியால் நடந்த ஐந்து உலகத் தமிழ் மாநாடுகளால் விளைந்த நன்மைகள் யாவை? பயன்பாடு என்ன? என்ற வினா எழுந்தது. இதற்கு யாழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், யாழ்ப்பாண மாநாட்டின் தலைவர் டாக்டர் சு.வித்தியானந்தன் உரிய விடையினை, யாழ்ப்பாண மாநாட்டின் போதே தலைமையுரையில் தந்துளார். அதனை இங்கே அறிவது பொருந்தும்.

*அடிகளார் சாதனை:* இதுவரை அடிகள் நடாத்திய நான்கு மாநாடுகள் மூலம் அவர் சாதித்தவை யாவை ? 1. தமிழ் மொழி-இலக்கியம் பற்றியெல்லாம் ஆராயும் உரிமை, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்க்கு மட்டுமே உரியதென்ற தப்பான எண்ணத்தைத் தவிடு பொடியாக்கினார். 2. தமிழ் இலக்கணம், இலக்கியம் பற்றிய ஆராய்ச்சியே தமிழாராய்ச்சி என்ற தவறான கருத்தை மாற்றித் தமிழ் மக்களின் மொழியியல், வரலாறு, மானுடவியல், சமயம், தத்துவம், தொல்பொருள், பிறநாட்டார்த் தொடர்பு, தமிழர் பண்பாடு, கலைகள் என்பன போன்ற பல் துறைகளிலும் விரிந்து பரந்தது தமிழியல் ஆய்வு என்ற உண்மையை நிலை நாட்டினார். 3. அடிகளாரின் அருமுயற்சியால், தமிழ் மொழியியல், தொன்மை, இலக்கியத்தின் சிறப்பு, பண்பாட்டின் பெற்றி பற்றிய பல உண்மைகள் வெளியாயின. 4. பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் ஒரு பாடமாக வைக்கப்பட்டுள்ளது. 5. பல்கலைப் பேராசிரியர்கள் தமிழ் ஆராய்ச்சியில் தலைப்பட்டுள்ளனர். 6. ஒரு காலத்தில் மேலைப் பல்கலைக்கழகங்களில் தெய்வீக சமத்கிருதம் பற்றியும், இந்தோ ஆரிய மொழிகள் பற்றியுமே ஆய்வு நிகழ்த்திவந்தனர். இன்றோ அந்நிலை அடியோடு மாறித் தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு, சமூகம் பற்றியெல்லாம் ஆய்வு கொள்ளும் நிலை உருவாகி வளர்ச்சி பெற்றுள்ளது. 7. அப்போதெல்லாம் வணிகப் பெருக்கம், சமயப் பிரசாரம்,

அரசியல் செல்வாக்கிற்காகவுமே தமிழைக் கற்றனர்; இப்போதோ, தமிழ் மொழியின் தகைமை, செழுமை அறியவும் ஆராய்ச்சிக்காகவுமே தமிழ் கற்கத் தலைப்பட்டுள்ளனர். 8. மொழிகளில் சிறந்த, செழுமையான தமிழை அறியாது, இந்திய நாட்டின் இதயத்தை-தமிழ்த் திருநாட்டின் அடிப்படைப் பண்பினை, கலைக்ளை அறியமுடியாதென உணர்ந்தே தமிழைப் பயிலச் செய்தார்.

இன்றைய தமிழியல் ஆய்விலே புரட்சி பல புரிய, அரிய ஆராய்ச்சி பல பிறந்திட, அடிகோலியக் காரண கர்த்தா தமிழ் நாயகரர்ம் தனி நாயகர் என்பதை என்றும் எப்போதும் முப்போதும் மறந்திட லாகாது. வெல்க தனி நாயகரின் தமிழ்; வளர்க தமிழ் நாயகரின் புகழ்.

## குறிப்புகள்

1. விவிலியம்.
2. Proceedings of the I International Conference Seminar, p.880.
3. டாக்டர் வே. அந்தனி ஜான் அழகரசன், தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும், ப. 71.
4. மேலது, ப55.
5. N.B.D.C. Minutes of Meeting. Aug. 12th 1962. Kuala Lumpur.
6. தனிநாயக அடிகள் வாழ்வும் பணியும், ப72.
7. தமிழ்நேசன், கோலாலம்பூர், 17.8. 1963 இதழ்.
8. தமிழ் நேசன், கோலாலம்பூர், இதழ் 1963, ஆகஸ்டு, 17.
   Proceedings of the First International Conference, pp.874-75.
9. தமிழ்நேசன் இதழ்: அழகரசன் நூல், ப.64.
10. மேலது, ப. 73.
11. அமுதன் அடிகள், தனிநாயக அடிகள், ப.64.
12. தமிழ்நேசன் கருத்தரங்கச் சிறப்பு மலர், 16.4.1966. தமிழ்த்துறைகளின் உலகக்கருத்தவை-அடிகளார் கட்டுரை.
13. Dr. R.E Asher, Tamilaram, p.46.
14. அந்தனி அழகரசன் நூல், ப. 74; தமிழ் நேசன் சிறப்புமலர்.
15. மேலது, ப77, I.A.T.R. Proceedings, p. xxxvii.
16. அமுதன் அடிகள் நூல், ப. 72.

17. மேலது ப.73.

18. அந்தனி அழகரசன் நூல், ப.79.

19. தமிழ் நேசன் 17.4.1966, ஞாயிறு பதிப்பு, அழகரசன் நூல், ப.78.

20. அமுதன் அடிகள் நூல், ப.26.

21. Tamil Culture, Vol V, No.3 (1956), p. 289.

22. Tamilaram, p.84 : A.T. Wilson.

23. அமுதன் அடிகள், ப. 34.

24. அமுதன் அடிகள், ப. 32 X.S. Thani Nayagam, Tamil Culture, Vol. V, No.3., pp.217-230.

25. We have to enact Hamlet without the Prince of Denmark.

# வயல்வெளி

தமிழகத்தின் தலைநகர் சென்னையில் (அடையாறு) தரமணியில் தவழ்ந்து கொண்டிருக்கிறது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (International Institute of Tamil Studies). இந்நிறுவனம் தோன்றியது 1970, அக்டோபர்த் திங்கள் 21 ஆம் நாள். இதன் தோற்றத்திற்கும் மூலமுழு முதல்வர், தனிநாயக அடிகளாரே.

**கரு:** பாரிஸ் உலகத் தமிழ் மாநாட்டின் முடிவில், அடிகளார், அவையினர் முன்னே ஒரு தொலை நோக்குத் தீர்மானத்தை முன்வைத்தார்; தமிழின் தாயகமாம் தமிழகத் தலைநகரில், உலகத் தமிழ் அறிஞர்களையெல்லாம் உறவு கொள்ளும் நிறுவனம் ஒன்றினை அமைத்திட வேண்டும் என்றார். அனைவரும் ஒன்றிய உள்ளத்துடன் நன்று நன்றென ஏற்றுப் போற்றினர்!

**முன்வரைவு:** பூனே தக்காணக் கல்லூரி-ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் எஸ்.எம். கத்ரே, 'உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் அமைப்பியல் கூறுகள்' எனும் தலைப்பில் சென்னை-இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது எழுத்துரை அனுப்பியிருந்தார். அதன் உள்ளடக்கம் வருமாறு:

**அடித்தளம்:** 1. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மொழியியல், இலக்கியமும் படி ஆய்வியலும் (Literature and Textual Criticism), தொன்மை இயலும் பண்பாடும், சமூக-மானுடவியல் என்ற நான்கு தூண்களில் நிற்கும்-நான்கு துறைகளைக் கொண்டு இலங்கும். 2. ஒவ்வொரு துறைக்கும் பேராசிரியர், இணைப் பேராசிரியர், விரிவுரையாளர்கள் எனப் பல நிலைகளில் ஆசிரியர் அமைவர். 3. முதுகலை வகுப்புகளும் முனைவர் பட்ட ஆய்வுத் திணைகளும் அமைந்திருக்கும். 4. வெளியிலிருந்து பகுதி நேரப் பேராசிரியர்களும் ஆய்வர்களும் வருகை தந்து, நிறுவன ஆய்வுகளில் பங்குகொள்ளலாம். 5. ஒவ்வொரு துறைக்கும் உரிய ஆய்வுக்கூடங்கள், அரியபெரிய நூலகம், வகுப்பறைகள், ஆசிரியர் அறைகள், துறை அறைகள் ஒதுக்கப் பெற வேண்டும்.

6. தமிழகத்தில் அமைக்கப்பெறவிருக்கும் இந் நிறுவன வளர்ச்சிக்குத் தமிழக அரசு தொடர்ந்து உறுதுணையாக இருக்குமென்றாலும், பிற நாட்டு நிதி உதவியும் பெறலாம். 7. பொருளுதவி புரியும் அனைத்து அமைப்புகளுக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கிடும் வகையில், நிறுவனத்தின் ஆட்சிக்குழு அமையும். 8. ஆசிரியர்கள் 32, ஆராய்ச்சியாளர்கள் 78, அலுவலகத்தார் 32 பேர் எனப் பணிபுரி பணியிடமாகப் பிறங்கினால்தான், நிறுவனம் நன்றாக நின்று நிலைத்து நற்பணி யாற்றிட முடியும்.[2]

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் இடையே, இத்தகு இன்றியமையா நிறுவனம் ஒன்று அமைந்திட வேண்டும்; அதன் தேவை யாவை என்றெல்லாம் அலசப்பட்டது; கத்ரே கட்டுரையும் கருதப்பட்டது.

**கூடியோர்:** தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா (சி.என். அண்ணாதுரை), கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், செட்டிநாட்டரசர் முத்தையவேள், பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ., யுனெஸ்கோ இந்திய தேசிய ஆணையத்தின் அலுவலர் கே. சுப்பிரமணியம் போன்றார் குழுமியோரில் குறிப்பிடத் தக்கோர்.

**ராஜா சர் முத்தையா செட்டியார் மொழிந்தது:** நிறுவனம் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் மட்டுமே உரிய நிறுவனமாக அமைய வேண்டுமே தவிர, படிக்க வைத்துப் பட்டம் வழங்கும் அமைப்பாக ஆகிவிடக் கூடாது. அதற்கென்றே கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் தனியே உள்ளன.

**தெ.பொ.மீ. உரைத்தது:** இந்நிறுவனம், அனைத்துத் திராவிட மொழிகள் பற்றியும் அவற்றின் கிளை மொழிகள் பற்றியும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும், ஆனமுதலில் அகலக் கால் விரித்து அனைத்துத் துறைகளையும் தொடங்கிவிடாமல், உலக நாடுகளில் நடைபெறும் தமிழாய்வுகளை ஒருங்கிணைக்கும் ஒரு மையமாக மட்டும் முதலில் தொடங்கிப் பின் போகப்போகத் தேவைக்கேற்ப விரிவுபடுத்தல் விவேகமாகும்.

**கே. சுப்பிரமணியம் சொல்லியது:** நிறுவனத்தை ஜெனிவாவிலோ, பாரிசிலோதான் அமைக்க வேண்டும். அப்போதுதான், யுனெஸ்கோ போன்ற பன்னாட்டு அமைப்புகளுடனும், பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி மன்ற

(IATR)த்துடனும் தொடர்பு கொண்டு செயற்பட, உற்ற துணையாக ஒளிர முடியும்.

**நாவலர் நவின்றது:** தமிழகத் தலைநகரில்தான், தமிழ் நிறுவனம் நிறுவப்பெற வேண்டும்; அப்போதுதான், அது தமிழகப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்பட இயலும் எனவும், பிரெஞ்சு அகாதமி போன்று ஒரு தமிழ்ச்சங்கம் அமைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**அண்ணா அறிவிப்பு:** பட்டங்கள் வழங்கும் கல்வி நிலையமாக நிறுவனம் ஆகிவிடலாகாது. தமிழக அரசு, இந்த நல்ல திட்டத்திற்கு நிதிநல்கும்-நற்றுணைபுரியும்.[3]

**பத்தாண்டுத் திட்டம்:** மாநாட்டின் ஒத்த-ஒருமித்த முடிவு என்பதால், யுனெஸ்கோவின் சென்னை மாநில ஆணையம், இதுபற்றிய பத்தாண்டுப் புதுத்திட்டம் ஒன்றினை உருவாக்கித் தர, 19 பேர் கொண்ட ஒரு குழுவினை அமைத்தது.

இக்குழு கொடுத்த விரிவான திட்டத்தை, இந்திய அரசு, ஒரு தீர்மானமாகவே யுனெஸ்கோ பொதுப் பேரவைக்குப் பரிந்துரைத்தது. பொதுப்பேரவையில் இத்தீர்மானம் விவாதிக்கப்படும் போது, அதனை ஆதரிக்க, அங்கு ஆட்கள் இருக்க வேண்டுமல்லவா? ஆகவே அடிகளார் அதற்குரிய தக்கவர்களின் துணை நாடினார். அவருக்கே உரிய, காலத்தே விடுக்கும் கடிதங்கள் பறந்தன.

பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி மன்றப் பொதுச் செயலர் என்ற முறையில் மூவர்க்கு மடல் வரைந்து, பின்னணியில் பாடுபட்டு வரும் சென்னை ஆ. சுப்பையாவுக்கு 11 அக் 1968இல் அனுப்பி, உரிய அம் மூவர்க்கும் அஞ்சல் செய்ய, ஆற்றுப்படுத்தினார். அம் மூவர் வருமாறு:[4].

*1.* Hon. Inche Md Khir Johari, Minister for Education, Malaysia.

Further to our conversation, I am herewith sending a copy of the draft proposals for an Institute of Tamil Studies to be located in Madras, you very kindly agreed to support the project. We will be very grateful for all the support that the Malaysian Delegation would continue to give to this project.

- Xavier S. Thani Nayagam
Secretary General

2. Hon. Mr. Ong Pang Boon, Minister for Education, Singapore.

I am enclosing the particulars of a Project, which is to be sponsored by the Indian National Commission of UNESCO at this year's General Assembly, for setting up an Institute of Tamil Studies in Madras; the sponsors will seek the collaboration of member countries, with an interest in Tamil studies. As a state which promotes Tamil studies and as a state which includes Tamil in its official languages, we shall be grateful, if Singapore could give its support to this project.

We hope Some day to hold an International conference of Tamil Studies in Singapore, as you yourself, have so kindly suggested.

- Xavier S. Thani Nayagam

3. His Excellency Mr. A.P. Rajah
High Commissioner of the Republic of Singapore

*முன்மடல் அப்படியே . அத்தோடு,* we shall be grateful, if you could inform Mr. Ong Pang Boon, concerning the project. I enclose the copy of the letter,I addressed to him.

- Xavier S. Thani Nayagam

*வேண்டுகோள்: பாரிஸ் மாநாட்டின் நிறைவு அமர்வுக்குத் தலைமை தாங்கிய தனிநாயகர் நிகழ்ச்சி நிரலில் முதல் குறிப்பு: 1971 இல் கூட இருக்கும் யுனெஸ்கோ பொதுப் பேரவைக் கூட்டத்தில், சென்னையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தும் தீர்மானத்தை, இந்தியா முன் மொழியும்போது, அதனைப் பிரான்சு ஆதரித்து வழிமொழிய வேண்டும் எனப் பிரெஞ்சு தேசிய மேம்பாட்டு ஆணையத்திற்குப் பரிந்துரைக்கும் கருத்தை, அவையினர் ஒருமனதாக நிறைவேற்றிட வேண்டும் எனும் வேண்டுகோள், அவையினரால் பேராரவாரத்திற்கிடையில் நிறைவேற்றப் பட்டது.*[5]

*அறிக்கை: தீர்மானம் நிறைவேறியதும், யுனெஸ்கோ நிதியுதவியுடன்* [illegible]

அறிக்கையை ஏற்ற யுனெஸ்கோ, மூன்றாண்டுகட்கான திட்டங்களை வரைந்திடப் பன்னாட்டுப் பிரதிநிதிகள் குழுவினை அமைத்தது. தலைவர்: பிலியோசா; ஒருங்கிணைப்பாளர் ஆ. சுப்பையா.

**இரண்டுக்கும் இடையே:** முன்னம் 1964 இல் தில்லியில் அமைத்த பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கும் இதுபோது 1968இல் அமையும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், மன்றம்:நிறுவனம் இரண்டிற்கும் இடையேயான தொடர்பினை வரையறுக்க, ஐவர் குழு அமைக்கப்பெற்றது. அனைத்துக் குழுக்களிலும் அடிகளார் இடம்பெற்றார்.

**நன்றி:** இத்தருணத்தில், நிறுவனம் உருவாகக் கரு, கனா, காட்சி, உழைப்பு, விடாமுயற்சிகட்கெல்லாம் மூல காரணியாக இருந்து, வேராக விளங்கி முழுப் பொறுப்பும் ஏற்று நனவாக்க அரும்பாடுபட்ட ஆசுப்பையா அவர்கட்கு நன்றி பாராட்டினார் நாயகர். அவருடைய ஊக்கம், பார்வை, விடாத் தொடர்முயற்சி போன்றனவே இந்நிறுவனம் நிறுவப் பெறக் காரணிகளாய் இருந்தன என்பது மறத்தற்கில்லை என்றார்.[6]

**யாழ் மாநாட்டில்:** யாழ்ப்பாணத்தில் நான்காம் உலகத்தமிழ் மாநாடு நடக்கும் போது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுச் செயற்படவும் தொடங்கிவிட்டது. அம்மாநாட்டில் அடிகளாரின் தொடக்க உரை: 'இந்நிறுவனம் அமைய, ப.த.ஆ. மன்றம், தமிழக அரசு, யுனெஸ்கோவின் இந்திய ஆணையம் மூன்றும் உதவி புரிந்தன. சிறிய அளவில் நிறுவனம், தன் பணியினைத் தொடங்கியுள்ளது. எனினும் நாளடைவில் இது உலக நிறுவனமாக ஓங்கி வளரும்; உயர்ந்தோங்கி ஒளிரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. வெளிநாட்டு அறிஞர்க்கு உரிய வாய்ப்புகளை, இந் நிறுவனம் மூலமே நாம் வழங்கிட வேண்டும். பல்கலைக்கழகங்கள், பட்டங்கள் வழங்குவதில் கவனம் செலுத்திக் கொண்டு, ஆராய்ச்சியை, பட்டமேற்கல்வி நிறுவனங்களிடம் விட்டுவிடும். எனவேதான், இந்நிறுவனம், உலகளாவிய ஒருபெரும் நிறுவனமாக நிலவ வேண்டும் என்ற பேராவல் பூண்டுளோம்' என்றார்.[7]

**அடிகள் வடிவே:** உலகப்பயணங்கள், தொடர்புக் கலை, விரிவுரைகள், எழுத்துரைகள், நூல்கள், இருசுடர்களாம் ஈரிதழ்கள் எனப் பலவகையில் அடிகளார் ஆற்றிய அரும் பணிகளே, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமாக உருப்பெற்றன

என்றால் மிகையாகாது என்கிறார் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை.[8]

**முதல் இயக்குநராக:** காலமெல்லாம் கழகங்கள் பல நிறுவி, கன்னித்தமிழ் வளர்த்த காவலர் தனி நாயகரிடமே, அவரது வாழ்வின் விளிம்பில் விளங்கும் தனிநாயகரையே, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதல் இயக்குநராக அமர்த்தி இருக்க வேண்டும் நாம் என்பது வெளிநாட்டு அறிஞர் பல்லோரின் எண்ணமும் எதிர்பார்ப்பும் ஆகும். அப்படிச் செய்திருந்தால், உலக அளவில் நிறுவனத்துக்குரிய செல்வாக்கினையும் பேரையும் புகழையும் ஈட்டித் தந்திருப்பார் என்பது பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.[9]

## குறிப்புகள்

1. டாக்டர் வே.அந்தனி ஜான் அழகரசன், தனிநாயக அடிகள் வாழ்வும் பணியும், ப94.
2. அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகளார், பக். 118-119.
3. மேலது, பக். 119-120.
4. மேலது, பக். 95-98.
5. Proceedings of the III International Conference.
6. அந்தனி அழகரசன், ப94.
7. அடிகளாரின் தொடக்கஉரை, யாழ் மாநாடு. Proceedings of IV Conference, p.xx.
8. அமுதன் அடிகள், ப.122.
9. அமுதன் அடிகள், ப.122.

# ஒரு நோக்கு

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமை யெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும் [1]

என்ற ஞான பாரதியின் ஞால உணர்வினை நன்கு உள்வாங்கிக் கொண்டு, அவரது கனவினை நனவாக்கிய ஒரே ஓர் ஒப்பற்ற தமிழ்த் திருமகன் தனிநாயகம் அடிகளார் அவர்களே ஆவார். இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

**ஓரேர் உழவன்:** உலகின் உச்சாணியில் நம் தாய்த் தமிழைக் கொண்டு போய் வைத்து, உலகெலாம் பரவும்வகை செய்த ஒரு பெருமகனார், அடிகளாருக்கு முன்னும் இல்லை, பின்னும் இல்லை. அவர் போட்டுக் கொடுத்த பாட்டையில், பீடு நடை போட்டுப் பைந்தமிழை மேலும் பரப்புவார்- உயர்த்துவார் இன்னும் பிறந்திடவில்லை, எழுந்திட இல்லை! அதனால் அடிகளார், வளர்தமிழுக்கு வாராதது போல் வந்த ஒரு மாமணியாய்-திருமாமணியாய், ஒப்பாரும் மிக்காரும் இன்றி ஓங்கி ஒளிர்கிறார் என்றால் எத்துணையும் மிகையாகாது.

**வழிகாட்டி:** உலக அரங்கினில் தமிழ் உலவ-நிலவ, உலகெலாம் தமிழ் முழங்க, அவர் முறையாக முயன்றதும் நிறைவாக வென்றதும், படிப்படியே அவர் வழிவகுத்த வகையும், அடுத்தடுத்து அவர் மென்மேலே அருந்தமிழை வையத்தில் ஊன்றச் செய்த வளமையும், நமக்கெல்லாம் வழிகாட்டி ஒளிகூட்டும் ஒண்மையன. ஒரு மலையேறும் முயற்சியினும் மேலானது, நாயகரின் கட்டமைப்பும் செயற்பாடும்.

## 1. உலகத் தொடர்பு

எந்த முயற்சிக்கும் எல்லாச் செயல்கட்கும் உயிர்நிலையாக அமைவது, தொடர்பு-தொடர்பு, தொடர் தொடர்பு. இதனைத்

தான் 'மூன்று தொடர்புகள்' என்பர்.[2] தொடர்பு ஒரு கலை; அது சிலருக்கே கைவரப் பெறும். நாயகர் அக் கலையில் மன்னர்; தொடர்புக் கலையின் தோன்றல்.

செயற்சாதனையின் அடிப்படையே, அந்தரங்கமே, இந்தத் தொடர்பில்தான் உளது. வெற்றியின் ஊற்றும் ஊற்றமும், தொடர்பில்தான் இருக்கிறது. அதற்காகத்தான் உந்துகள், ரயில், விமானம் போன்ற போக்குவரத்துச் சாதனங்கள் உள்ளன. இச் சாதனங்கள் எல்லாம் எதற்கு? நாம் பயன்படுத்திச் சிறக்கவே. பயணிக்க முடியாத போது அஞ்சல், தந்தி, பேசி போன்றன கை கொடுக்கும். இவற்றை யாரும் தாய்மொழி தழைக்க, முழுமையாகப் பயன் கொள்வதில்லை. நாயகர்தான் நன்கு பயன்படுத்தினார்; நனி சிறந்தார்.

தாய்த்தமிழின் தகவும் தகுதியும், பெற்றியும் பெருமையும் உலகறியச் செய்ய வேண்டும் என உன்னினார். எண்ணியதை எண்ணியாங்கு எய்தினார், தன் திண்மையால்-உண்மையால். எனவேதான் தன் பெயருக்கேற்பவே, அவர் தனி நாயகராக - தமிழ் நாயகராகத் திகழ்ந்தார் - இன்றும் திகழ்கிறார்.

**படிநிலைகள்:** சிறுதுளியே, பெரு வெள்ளம்; சிறு சிறு செயல்களே, பெருஞ்செயல்களின் படிக்கட்டுகள். அளந்து அடியெடுத்து வைத்து முன்னேறி அருந் தமிழை, அகிலத் தமிழ் ஆக்கினார். ஏணியில் ஏறினால்தானே, மேலே போகமுடியும்.

**கடமை:** ஒவ்வொருவருக்கும் கடமைகள் உள. கடமை, கண்போன்றது. ஆனால், எல்லோருக்கும் கடமை உணர்வு வந்திடுவதில்லை. கடமையைக் கடனாகக் கருதிக் காணாமற் போவோரே- தொல்லையாக எண்ணித் தொலைந்து போனோரே மிகுதி. சிலரே, கடமையை உயிரென உன்னி உழைத்து நிறைவேற்றி, உயர்புகழ் பெறுகின்றனர். அதனால் தான், ஆங்கிலக் கவிஞன் டென்னிசன், 'கடமை நெறியே, புகழின் பெருவழி'[3] என்றார். கடமையில், கருத்து-வைராக்கியம் கொண்டவர் அடிகளார். அதனாற்றான் பொன்றாப் புகழின் உச்சிக்கே போய்ச் சேர்ந்தார்.

தமிழனாகப் பிறந்த தனிநாயகர், தம் தமிழ்க் கடமை, தாய்த் தமிழைத் தரணியெலாம் பரணிபாட வைத்திடவேண்டும் என விழைந்தார்-உறுதி பூண்டார், உழைத்தார்; உயர்த்தினார்.

**கடந்து வந்த பாதை:** மற்றவரெல்லாம் தமிழால் பிழைக்க-புகழ் பெற, மறைத் திரு அடிகளார், தமிழுக்குத் தலையாய பணி புரிந்து,

நிலையான நற்புகழ் பெற்றார். ஆனால் இந்த வையகப் புகழினை அவர் பெற்றிட, அவர் பட்ட பாடுகள் பல; தொல்லைகள் எண்ணில; அடைந்த அவமதிப்புகள், இழிவுகள் - இழப்புகள் ஏராளம். அவர் கடந்துவந்த வழிகள், மலர்கள் பரப்பப்பட்டவை அல்ல; கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதை ஆகும்.[4]

**இழித்துப் பேசல்:** 1. தூத்துக்குடியில் 1948 இல் தமிழ் இலக்கியக் கழகம் (TLS) தோற்றுவித்துக் கழகம் தழைக்க உரம் வேண்டுமல்லவா, அதனால், பொன்னு சுவாமி வில்லுவராயர் துணையுடன், தூத்துக்குடியில் கடை கடையாக ஏறி இறங்கிப் பொருள் திரட்டினார். அப்படிச் செல்லுகையில், அடிகளாரைக் கண்டு கிண்டலும் கேலியும் செய்தனர் மக்கள்.

'இது, தமிழ் இலக்கியக் கழகம் அன்று. தமிழ் இலக்கியக் கலகம்' என நாக்கில் நரம்பின்றிக் கூசுமாறு பேசினர்.[5]

2. இந்த உலகில், 'பத்தோடு பதினொன்று, அத்தோடு இஃதொன்று' எனக் கிணத்திற் போட்ட கல்லாக இருந்திடின், வாளா இருப்பர்; கொஞ்சம் முண்டி முனைந்து முன்னேறினால்- தலையெடுத்தால், பொறுக்காது பொங்கும் பொறாமை உலகம் இது.

அடிகளார், எண்ணம் சொல் செயல் மூன்றிலும், திரிகரண சுத்தியோடு, ஏனைய குருமார்களைவிடக் கொஞ்சம் தீவிரமாய் இருந்தார்; தனித்துவத்துடன் திகழ்ந்தார்; செயற்பட்டார். இது பொறாது அழுக்காறு கொண்டு மொட்டைக் கடிதங்கள் பலவற்றை இவருக்கும் மேலிடத்திற்கும் போட்டனர்! [6]

3. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1952-55இல் உதவி விரிவுரையாளராக விளங்கினார். அங்குள்ள சிலர், 'அடிகளாருக்குத் தமிழைப் பற்றி என்ன தெரியும்?' எனக் கேலி செய்தனர்.[7] செவி கைப்பச் சொற் பொறுக்கும் பண்பால், தூற்றிய வரும் ஒரு நாள் போற்றுவர்-போற்றுமாறு நாமும் சிறந்திட வேண்டும் என எவரையும் வெறாது, இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தார், அவர் நாண நன்னயமும் புரிந்தார். [8]

தீமையை எதிர்த்தல் வேண்டா[9]; தீமையை எதிர்த்தால், அது முன்னிலும் வீறுபெறும். தீமையை நன்மையால் அழித்துவிட வேண்டும்-வென்றிட வேண்டும் என்பதைத் தம் தனிவாழ்விலும் பொது வாழ்விலும் தாரக மந்திரமாகக் கொண்டு வாகை சூடினார்.

***பழிமொழி:*** பன்னாட்டுத் தமிழாராய்ச்சி மன்றம் (IATR), அடிகளாரின் குழந்தை. அதனைப் பெற்றெடுக்க அவர் பட்டபாடு பெரிது. 'ஒரு குழந்தையைப் பேணி வளர்ப்பது எத்துணை இன்னலானது; அவ்வளவு எளிதான செயல் அன்று' என்பதை அனைவரும் நன்கு அறிவோம். பத்தாம் யாண்டின் இறுதியில், இம் மன்றக் குழந்தை சோதனைக்கு ஆளாயிற்று.

'முக்கியமான காலகட்டத்தில், அடிகளார் இக் குழந்தையைக் கைவிட்டு விட்டார்' எனப் பழி சுமத்தினர்; குற்றம் சாற்றினர். மன்ற வளர்ச்சியையே தம் இலட்சியமாகக் கொண்டவர்க்கு, இப்படி ஒரு பழிச்சொல்! [10]

'மன்றக் குழந்தையைப் பத்தாண்டாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தவர் அடிகளார். பத்தாமாண்டு இறுதியில் ஒரு 'தத்து' ஏற்பட்டது. அப்போது, 'குழந்தையைத் தவிக்க விட்டு விட்டு ஓடிவிட்டார்' என்று அடிகளார் மீது பலர் பழி சுமத்த முற்பட்டனர். 'குழந்தைத் துரோகம் அறியாத தமிழ்ப் பண்பாட்டின் காவலர் அவர். எனவேதான் தத்திலிருந்து குழந்தையைத் தப்ப வைக்க, எம்மோடு சேர்ந்து உழைத்தார். இக்குழந்தையின் வளர்ச்சியே, தமது இலட்சியம் என்பதை, நான்காம் மாநாட்டினைத் திறந்து வைக்க முன்வந்ததிலிருந்தே உலகறியச் செய்தவிட்டார்' என்கிறார் யாழ் மாநாட்டுத் தலைவர் டாக்டர் சு. வித்தியானந்தன். [11]

***நடந்தது இதுதான்!*** நான்காம் உலகத் தமிழ்மாநாடு, யாழ்ப்பாணத்தில் நடைபெறுமுன், இலங்கைக் கிளையில் கருத்துவேறுபாடுகள் பல கிளம்பியதால், கிளையின் தலைவரே பதவி விலகினார். மாநாட்டு அமைப்புக் குழுவின் பொறுப்பர்கள் சிலர், தங்கள் மனம் போனபடியெல்லாம் அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டிருந்தனர். சில இதழ்கள், 'ஊர் இரண்டு பட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பதுபோல், இக் குழப்பத்தைப் பெரிதாக்கித் திரித்து எழுதி வந்தன. அவ்வேளையில் இலங்கைக் கிளையும் மாநாட்டு அமைப்புக் குழுவும், தங்கட்கு வழிகாட்டத் தக்க தலைவர் இல்லாது தடுமாறின.

அடிகளாரோ, அதுசமயம், மாநாட்டுப் பணிகளை முன்னிட்டு, மலேசியா, சிங்கப்பூர் நாடுகட்குச் சென்றிருந்தார். இதனைச் சிலர் கயிறு திரித்துக் கூறிக் 'குழப்பமான நேரத்தில் அடிகளார் இலங்கையில் இருந்து வழிகாட்டாமல்-

நெறிப்படுத்தாது எங்கோ சென்றுவிட்டார்' எனப் புரளிகளைக் கிளப்பி விட்டனர்.

இதற்கு யாழ் மாநாட்டுத் தொடக்கவிழாத் தலைமையுரையில் பேரா. சு. வித்தியானந்தன் தந்த உரிய சரியான விளக்கம் இது.[12]

குழந்தை மனம் கொண்டவர், பிள்ளை குணம்படைத்தவர்; ஆதலால், அவ்வப்போது தம்மீது அள்ளி வீசப்பட்ட இழிவுகளை, பழிகளைப் பொருட்படுத்தாது, நோன்பகடு அன்ன பீடு மிகு காளையாக ஏறு நடை போட்டார்; ஏற்றம் பெற்றார். தூற்றியவர்களோ ஏற்றமுறாது கீழேயே கிடந்தனர்; காணாது போயினர்.

**தூண்டுதல்:** 1934-39 ஐந்தாண்டுகள் உரோம் நகரில் உர்பன்குருமடத்தில் இறையியல் பயிலச் சென்ற ஞான்று, 43 நாடுகளிலிருந்து 250 மாணவர்கள் பயின்று வந்தனர். இவர்களின் தொடர்பு, அடிகளாரின் உலகப் பயணத்திற்கு மிகவும் பேருதவியாக-உறு துணையாக இருந்தது. மேலும் கத்தோலிக்கக் குரு என்ற தெய்வீகத் தகுதியும், ஏனையோரைவிடப் பன்னாடுகளிலும் பெரிதும் மதித்துப் போற்றக் காரணியாக அமைந்தது.

அன்றியும் 1955-57 ஆண்டுகளில் இங்கிலாந்து ஏகி இலண்டன் பல்கலையில் கல்விஇயல் ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்றார். நமையாண்ட இங்கிலாந்து நாட்டுப் பயணமும் பழக்கமும், உலக உலாவிற்குக் கூடுதல் துணையாக ஆயிற்று.

இப்படி இருமுறை வெளிநாடு அனுப்பாது தென்னகத்திலேயே குருத்துவக் கல்வியும் கல்வியியல் ஆய்வும் நடந்திருக்குமேயானால், பிறநாடுகளின் பெருமை அறியாது- வெளிநாடு செல்லும் வேணவா எழாது, எல்லோரையும் போலவே இங்கேயே குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருந்திருக்கக் கூடும். இங்ஙனம் இந்த வெளிநாட்டுக் கண்ணை முதலில் திறந்துவிட்ட-பிள்ளையார் சுழிபோட்ட திருவனந்தபுரம் தூத்துக்குடி இரு பேராயர்களுக்கும் நாம் தமிழ் நன்றி பாராட்டத்தான் வேண்டும்.

## 2. உலகத்தூது

திக்கெங்கணும் சென்று சென்று தமிழின், தமிழிலக்கியத்தின் பெருமைகளைப் பேச்சாலும் எழுத்தாலும்

பேட்டிகளாலும் பரப்பினார். மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களாம் வானொலி, தொலைக்காட்சி, இதழ்கள் வாயிலாகவெல்லாம் பரவும்வகை செய்து, உலக அறிஞர்களைத் தமிழின்பால் திருப்பினார்; அருந்தமிழ் கற்கச் செய்தார்; ஆராய அடி கோலினார்.

## 3. பதிவு

உலகத் தூதினை அப்படியே காற்றில் விட்டுவிடாது, தமிழ்த்தூது (1952), ஒன்றே உலகம் (1963), தமிழியல் நூல்கள் ஆய்வடங்கல் (1966), வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி (1968), தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும் (1970) என்ற ஐந்து அரும் நூல்களாக அப்படியே பதிவுசெய்து கொடுத்துவிட்டார். காலாகாலத்திற்கு அவை கட்டியங்கூறும்; வருங்கால ஆவணங்களாக விளங்கும்.

**படிப்பினை:** 1. நம் மொழி பற்றியெல்லாம் பிறர் அறியச் செய்வது, ஒருதலைராகமே-கைக்கிளையே; அவர்களின் தமிழாராய்ச்சிகளையும் அகிலம் அறியச் செய்தலே-நாமும் அறியச் செய்வதே, இருவழிப் பாதையாக இருக்கும். 2. பெரும்பாலும் உலக நாடுகள், தமிழ்மொழி பற்றி அறிந்திராத நிலையே! 3. உலகின் பெருவாரியான நாடுகளில் தமிழர் வாழ்ந்து வருகின்றனர். 4. அவர்கள் தமிழ், பல்வேறு ஒலிப்புமுறைகளை உடையது-அவ்வந் நாட்டு மொழித் தாக்கத்தால் உச்சரிப்புகள் மாறுபட்டுள்ளன. 5. வேற்று மண்ணில் நந்தமிழர் தம்மொழி மறக்கும் நிலையே. அந்த அந்த நாட்டுமொழிகளின் வாயிலாகவே நம் தமிழைக் கற்கச் செய்திடவேண்டும். 6. உலகின் மிகத் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றும், உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றுமாகிய தமிழ்மொழியோடு தொடர்புள்ள செய்திகளும் ஆய்வுக் கட்டுரைகளும் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றால் மட்டுமே, உலக அரங்கில் தமிழ் இடம்பெற இயலும்.[13]

## 4. இதழ்கள்

உலகம் சுற்றியதால் உணர்ந்தவை இவை. எனவே தாயகம் திரும்பியதும் முதலில் **Tamil Culture**, பின்னர் **Journal of Tamil Studies** எனும் இரு கண்கள் எனத் தகும் காலாண்டு, அரையாண்டு ஆராய்ச்சி ஆங்கில இதழ்களைத் தாமே முதன்மை ஆசிரியராக இருந்து வெளிக்கொணர்ந்தார். உலகத் தமிழறிஞர்கட்கு இவை களமாகவும் கருவியாகவும் கேடயங்களாகவும் இலங்கின.

இவ்விதழ்கள் மூலமாகவே முனைவர் கமில் சுவலபில், பேராசிரியர் ழான் பிலியோசா போன்றோர், தமிழுலகிற்கு அறிமுகமாயினர்; தமிழறிஞர்களும் வெளி உலகிற்குத் தெரியலாயினர். கிழக்கும் மேற்கும் சந்தித்தன-சிந்தித்தன.

## 5. தமிழ் உறவு

இவ்வாறு தொலைத்தொடர்பு, நேரிடை சந்திப்பு, பொழிவுகள், பேட்டிகள் போன்றவற்றால் பன்னாட்டு அறிஞர்களையும் அந்நாட்டு மக்களையும் நந்தமிழை அறியச் செய்து, அருமை தெரியவைத்துப் பாலம்அமைத்தார்; தமிழ் உறவு சமைத்தார். இப்படிப் பல்லாண்டுகளாக ஈர்த்துப் பிணித்துப் பேரறிஞர்களையெல்லாம் ஒரு குடைக்கீழ்க் கொணரும் தருணம் பார்த்துக் காத்துக்கிடந்தார்.

'இதோ! காலம் கனிந்து விட்டது. இறையரசு நெருங்கிவிட்டது' என்று இயேசு பெருமான் நற்செய்தி நவின்றது போன்று, தமிழுக்கு உலக அரங்கில் தனி இடம் தேடிக்கொடுக்கக் காலத்தையும் நேரத்தையும் நாடிக் காத்திருந்தார் நாயகர்.[14]

**தருணம் வாய்த்தது:** இந்தியாவில் முதல் முதல் நடந்த கீழைத் தேசியக் கலைகள் 26ஆவது மாநாடு 1964இல் புதுதில்லியில் கூடியது. 15 நாடுகளிலிருந்து ஈராயிரம் உலக அறிஞர்கள் ஒன்று கூடினர். ஆறு நாட்கள் நடந்தது மாநாடு. இந்த அரிய நல் அமையத்தை அப்படியே சிக்கெனப் பற்றிக் கொண்டு செயல்பட்டார். பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சிப் பெருமன்றினைத் (IATR) தோற்றுவித்தார்.

## 6. மாநாடுகள்

உலகெங்கணும் நெல்லிக்காய் மூட்டைகளாகச் சிதறிக்கிடந்த தமிழர்களையெல்லாம், ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வென ஒன்று சேர்த்தார்-திரட்டினார். உலகத் தமிழறிஞர்களே ஒன்றுபடுங்கள் என ஒருங்கிணைத்தார். ஆராய்ச்சிக் கருத்தரங்க மாநாடுகள் கூட்டினார். முதல் முயற்சியே முழுமையான செழுமையான சிறந்த முயற்சியாக அமையும் வகையில் வலுவான அடித்தளம் அமைத்துத் தாமே முன்னின்று வழிகாட்டி முன் மாதிரியாக முதல் மாநாட்டினை நடாத்திக் காட்டினார்.

அந்தப் பாட்டையிலேயே. அதே பாணியில் அடுத்தடுத்த மூன்று மாநாடுகளைப் பிறரை முன்னணியில் நின்று நடாத்தச் செய்து, தாம் பின்னணியில் இருந்து ஊக்கினார்; உந்து சக்தியாக ஒளிர்ந்தார்.

இனி எவரும்-யாவரும், தயங்காது-மயங்காது துணிந்து ஏற்று நடாத்தும்வகையில் நெறிமுறைகளை நன்றாக வகுத்து வைத்து விட்டார். மூன்றாண்டுகட்கு ஒருமுறை நடைபெற மூலவிசையாகத் தமிழாராய்ச்சி மன்றமே அமையும்-அமையவேண்டும் என்ற உறுதியையும் அறுதியிட்டார்.

மாநாடுகள் எல்லாம் போகப்போகப் பேருக்கு மாநாடுகளாக-வெறும் சடங்கு மாநாடுகளாக ஆகிவிடாமல், ஆராய்ச்சி மாநாடாகவே அமைந்திட வேண்டும் என்பதில் ஊற்றமாக இருந்திடச் செய்துளார்.

இதில் சென்னை, மதுரை, தஞ்சை மூன்று மாநாடுகளும் தமிழகத்திலேயே நடந்ததால், நடாத்திய, தி.மு.க., அ.தி.மு.க. அரசுகள் தங்களுக்கே உரிய முறையில், பாணியில், தமிழக மக்களும் தங்கள் தாய்த்தமிழ் மாநாட்டின் பெற்றி போற்றும் வகையில்-பங்காற்றும் பாங்கில், தமிழ்ப் பாரம்பரியக் கலைகள் யாவும் பிறநாட்டாரும் கண்டு கேட்டுக் கிளர்ச்சி எய்துமாறு, அக அமைதி ஆராய்ச்சி, புற ஆரவார நிகழ்ச்சிகள் என்ற இரு நிலைகளில், உலகே வியக்கும் வண்ணம் பெரிய-பாரிய நிலையில் தமிழகப் பெருவிழாவாக எடுத்து நடாத்தின; கருத்துக்களைக் காட்சிகளாக- தமிழ் மாட்சிகளாகத் தந்தன; முத்தமிழின் சிறப்பினையெல்லாம் முழங்கின.

## 7. நிறுவனம்

மூன்றாண்டுகட்கு ஒருமுறை உவப்பத்தலை கூடி உள்ளப் பிரிந்தால் மட்டும் போதுமா! பின் ஓய்ந்துவிட்டால் ஒல்லுமா! அவ்வப்போது தொடர்பு கொண்டும் கண்டும் அளவளாவுதல், கலந்துரையாடுதல், ஐயம் தெளிதல், வினாக்களுக்கு விடை காணுதல், கூடி ஆய்தல், முடிவெடுத்தல் என்பன போன்றவற்றுக் கெல்லாம் இடம் வேண்டுமே. இவற்றுக்கெல்லாம் ஏதுவாக, வாயிலாக, கோயிலாக, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (IITS) ஒன்றினையும் உருவாக்கினார்.

<u>மன்றம்</u> என்பது, மாநாடு நடத்துவது, வெளிநாட்டவரை ஊக்கி உதவுதல், பயணம் போன்றவற்றைக் கவனிக்கும்; அதன் செயலகம் அப்போதைய செயலர் நாட்டில் செயல்படும். ஆனால் <u>நிறுவனமோ</u>, தாய்த் தமிழகத்தில், தலைநகர் சென்னையில் திகழும் என இரண்டின் கட்டமைப்பும் செயற்பாடுகளும் நன்கு வரையறுக்கப்பட்டன.

## எழுநிலை மாடம்

இவ்வண்ணம் நம் விழியாம் தமிழை உலக அரியணையில் ஏற்றத் திட்டமிட்டுத் தேர்ந்த அணுகுமுறையால், படிப்படியே பாட்டைபோட்டுப் பாதை வகுத்துச் செயலகங்கள் அமைத்துத் தம் தமிழ்ப் பணியினை எழுநிலை மாடமாக-கூடகோபுரமாக எழுப்பிய தனிநாயகச் சிற்பியின் தனித்திறம்- செயற்பாடு, ஈடுஇணையற்றது; மலைக்க வைக்கும் இமாலயச் சாதனையாகும்.

இப்படி யாரும் இவருக்குமுன் எண்ணவும் இல்லை, எழவும் இல்லை; சிந்திக்கவும் இல்லை, செயற்படவும் இல்லை; இவருக்குப் பின்னும் ஆண்டுகள் 22 ஆகியும் இவரின் அடிச்சுவட்டிலே அடியொற்றி ஆன்ற தமிழுக்கு அருமாளிகை எழுப்ப இதுவரை எவரும் முன் வரவில்லை. இதில்-இதனால், இவர் நம் எல்லோர் இதயங்களிலும் இமயம் போல் எழும்பி வீறார்ந்து நிற்கிறார்; நிலவுகிறார்.

தமிழ்ப் பெருவள்ளலாகத் திகழும் தனிநாயகருக்கு நம் தலை தாழ்வதல்லால்- வணங்குவதல்லால், வேறு என்ன கைம்மாறு எங்ஙனம் ஆற்ற இயலும்! எழுமையும் நன்றி பாராட்டுவதல்லால் வேறொன்றும் அறியோம் பராபரமே என்றுதான் இயம்ப இயலும்.

சுருங்கச் சொல்வதாயின், மேதகு ஆயர் சபாபதி குலேந்திரன் ஆண்டகை அறுதியிட்டவாறு, 'கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தனிநாயகம் அடிகளாரைப் போலத் தண்ணார் தமிழுக்குத் தனிப்பெருந் தொண்டாற்றிய தகைஞர் வேறு யாரும், எவரும் இலர்'[15] என்றே இயம்பி இறும்பூது எய்துவோமாக!

தனிப்பெருந் தனிநாயகர் வாழ்க! அவர் உலகமெலாம் முழங்கிய தமிழ் வெல்க!

### குறிப்புகள்

1. பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், தமிழ்.
2. The Three 'C's of Life. Contact. Correspondence, Continuous Contact.
3. The Path of Duty is the way to Glory - Lord Tennyson.
4. Not a bed of Roses, but of Thorns.

5. டாக்டர் வே. அந்தனி ஜான் அழகரசன். தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும் பக். 17,23,30,90.

6. மேலது, ப. 23.

7. மேலது, ப. 30.

8. The rarer action lies in Virtue than in Vengeance: Shakespeare, The Tempest, The Last Play.

9. Resist not the Evil, The Bible.

10,11. அழகரசன் நூல், ப90.

12. அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகள், ப.89.
க. சச்சிதானந்தன், எனது யாழ்ப்பாணமே, பக்181-82.

13. அமுதன் அடிகள், ப.22.

14. அழகரசன் நூல், ப.63.

15. அமுதன் அடிகள், ப.203.

## பின்னிணைப்பு

# தனிநாயகர் வாழ்க்கைக் குறிப்பு – ஒரு பார்வையில்

**பிறப்பு:** ஆகஸ்டு 2, 1913.

**பிறப்பகம்:** நெடுந்தீவு (பசுந்தீவு).

**பெற்றோர்:** ஹென்றிஸ் தனிஸ்லாஸ் (நாக நாதன் கணபதி), சிசில் இராசம்மா வஸ்தியாம்பிள்ளை (கரம்பொன், ஊர்க்காவற்றுறை).

**உடன்பிறப்பு :** 1. திருமதி நாகநாதன்
2. திருமதி தெரேசா பிலிப்புப் பிள்ளை
3. தமிழால சிங்கம் (தம்பி)

**திருமுழுக்கு :** 1919 ஆகஸ்டு 21, சேவியர் என்ற பெயர்.

**1920–22 பள்ளிப்படிப்பு:** ஊர்க்காவற்றுறை, புனித அந்தோணியார் பாடசாலை.

**1923–30:** புனித பத்திரிசிரியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**1928:** E.S.L.C. துறவற நாட்டம்.

**1930:** கேம்பிரிட்ஜ்

**1931–34:** புனித பேனாட் பெரிய குருமடம், மெய்யியல்.

**1934:** யாழ். புனித பத்திரிசிரியார் கல்லூரி, ஆசிரியர்.

**1934:** திருவனந்தபுரம் மறைமாவட்டத்தில் சேர்தல்

**1934–39:** உரோமை விசுவாச மறைமரபு பல்கலைக்கழகம் இறையியல் டாக்டர் பட்டம்.

**1934:** வீரமாமுனிவர் கழகம் நிறுவல்
தனிநாயகம் எனத் தனித்தமிழ்ப் பெயர்ச் சூட்டிக் கொள்ளல் - தேசிய உணர்வு.

**1938:** மார்ச் 19 குரு - திருநிலை

விருதுவாக்கியம் : ஆங்கில அறிஞர் ட்ரு மாண்ட்:

I shall pass the way but once. Therefore, before
I die, let me do all the good I can, because I shall not pass this way, again.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே (திருமூலர்)

**1939:** திருவனந்தபுரம் திரும்பல்.

**1940:** தூத்துக்குடி மறைமாவட்டத்தில் பணியில் சேரல்.

**1940–45:** ஆசிரியர். புனித தெரேசாள் உயர்நிலைப்பள்ளி (சின்ன உரோமை - வடக்கன் குளம்) சிதம்பரம் பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயரிடம் 4 ஆண்டுகள் தமிழ் பயிலல்.

**1945–47:** அண்ணாமலை பல்கலைக்கழகம்: தமிழ் முதுகலை (B.A.Hons.), சமகால மாணவர்கள்: இரா. நெடுஞ்செழியன், க.அன்பழகன், மதியழகன்.

**1948:** தமிழ் இலக்கியக் கழகம் நிறுவல் - தூத்துக்குடி

**1949:** எம்.லிட், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (அண்ணாமலை பல்கலைக் கழகம்)

**1950–51:** வட, தென் அமெரிக்கா, யப்பான் சொற்பொழிவுச் சுற்றுலா.

**1952:** இலங்கையில் பணி. தமிழ்ப்பண்பாடு (Tamil Culture) முத்திங்கள் ஏடு தொடங்கல்; தமிழர் பண்பாட்டுக் கழகத்தை உருவாக்கல்.

**1954:** ஏப்ரல். மலேசியா இலக்கியச் சுற்றுப் பயணம்.

**1954–55:** இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள் பயணம்.

**1955–57:** இலண்டன் பல்கலைக்கழகம் - டாக்டர் பட்டம்; கல்வி பற்றிய ஆய்வு.

**1956:** சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து அறப்போர்.
இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வித்துறையில் பணி.
இலங்கையில் மொழியும் சுதந்திரமும்- நூல்.

**1958:** பிப்ரவரி 22, புத்தகக் கண்காட்சி நடத்தல்.

**1960:** ஐக்கிய அமெரிக்கா, கனடா, செர்மனி, இத்தாலி சுற்றுலா

**1961:** சிங்கள ஆதிக்கத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்பு.

**1961:** மே. மலேசியப் பல்கலைக்கழக இந்தியத்துறைத் தலைவர்- முதல் பேராசிரியர், பேரா. கல்கி கருத்தரங்கம்.

**1964:** செர்மனி சொற்பொழிவுச் சுற்றுப் பயணம்.

**1964:** சனவரி 7 - அனைத்துலகத் தமிழர் ஆராய்ச்சிக்குழு (புதுதில்லியில்) தோற்றுவித்தல் (International Asssociation of Tamil Research)

**1966:** ஏப்ரல். 16-23- முதல் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு - கோலாலம்பூரில் கூட்டல்.

**1967:** ஆப்ரிக்கா, மொரிசீயஸ், மேற்கு இந்திய நாடுகள்-பயணம்.

**1968:** சனவரி 3-10 சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு.

**1969:** மலேசியப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து ஓய்வு.

**1970:** சூலை 15-18 - மூன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, பாரிஸ்.

**1974:** சனவரி 3- நான்காம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, யாழ்ப்பாணம்.

**1980** செப்டம்பர் 1. மறைவு
செப்டம்பர் 3 பூதஉடல் அடக்கம்.

# துணை நூல்கள்


1. தனிநாயக அடிகளார், தமிழ்த்தூது, தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, (1952).
2. " " ஒன்றே உலகம், பாரிநிலையம், சென்னை, (1963).
3. அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகளார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், (1983).
4. அந்தனிசான் அழகரசன், தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும், தங்கம்பதிப்பகம், 51,ஊரணி மட்டுநகர், இலங்கை, (1984).
5. அமுதன் அடிகள், உலகெலாம் தமிழ்முழக்கம், விடியல் பதிப்பகம், (1992).
6. நடராசா எப்.எக்ஸ்.சி, அணையாவிளக்கு, கல்முனை, (1980).
7. நாவண்ணன், தனிநாயக அடிகள் மாட்சி நயப்பு மலர், யாழ்ப்பாணம், (1981).
8. அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகளார் நினைவுமலர், திருச்சி, (1982).
9. சச்சிதானந்தன். க., எனது யாழ்ப்பாணமே, காந்தளகம், சென்னை, (1980).
10. இராஜன் பிலிப்புபிள்ளை (தொ) தமிழாரம், ஜாப்னா, (1983).
11. தனிநாயகம், சே.த., அயல் நாடுகளில் தமிழ் (IATR), கோலாலம்பூர், (1968).
12. முனைவர் பா. இறையரசன், தனிநாயக அடிகளின் இதழியல் வழித் தமிழ்ப்பணி. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, (1997)
13. தனிநாயக அடிகள் (தொ), **Proceedings of the First International Conference**, Kualalumpur, (1966).
14. "" Second - 1968.
15. "" Third - 1973.
16. Vithianandam, S. (E.d) Fourth IATR, 1980.
17. "" Fifth - 1981
18. Tamil Culture, Vol I - XII, TCS, **Academy of Tamil Culture**, IATR, Madras.
19. **Journal of Tamil Studies**, Vol I and II, IATR, Madras.
20. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் (1968)
21. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் (1981)
22. வித்தியானந்தம் (பதி), நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள், IATR இலங்கைக் கிளை, கொழும்பு, 1977.


❋❋❋❋

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி - 4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி - 3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி - 2 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| TIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கொடிகள் | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி - 1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி - 2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை - 4 | 70.00 |
| சுவடிச் சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| தமிழ்மொழி - இன - இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| அறிவியல் தொழில்நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |
| தமிழ்நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| மிருச்சகடிகம் | 50.00 |

**No. 443**    உலக அரங்கில் தமிழ்    **30.00**